world edition

www.vikatan.com
14.3.17
₹ 25 (தமிழ்நாடு, புதுச்சேரி)
₹ 27 (மற்ற மாநிலங்களில்)

world edition
https://t.me/joinchat/aaaaaedow77rs3ryirm7tw

# சக்தி விகடன்

ஆன்மிகம் மணக்கும் ஆனந்த




https://t.me/joinchat/aaaaaedow77rs3ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw


வின்ஸ்டார் டிரேடர்ஸ்

சௌபாக்யா

இயற்கை உயிர்சத்து மிகுந்த மூலிகைச்சாறுகள்

இயற்கையோடு இணைந்திடுங்கள்...
இணையில்லா ஆரோக்கியத்தை பெற்றிடுங்கள்...

# சர்க்கரைக்கொல்லிச்சாறு

## SARKARAIKOLLI JUICE - Diabetic control




100% மூலிகை உணவு
பக்க விளைவுகள் இல்லாதது

- சிறுகுறுஞ்சான், நெல்லிக்காய், வெந்தயம், மஞ்சள், சுருள்பட்டை, ஆவாரம் பூ, போன்ற அற்புதமான நம் இந்திய மூலிகைகளின் ஒப்பற்ற கலவை.
- இயற்கையான முறையில் டைப்2 சர்க்கரை நோய் விரைவில் கட்டுப்பட உதவி புரிகிறது. சர்க்கரை நோய்க்கான ஆங்கில மருந்துகள் மற்றும் இன்சுலின் ஊசி எடுத்துக் கொள்பவர்களும் அதனுடன் சேர்த்து சர்க்கரை கொல்லிச்சாறு தினமும் தொடர்ந்து பருகிவர சிறந்த பலனையும் மற்ற பக்கவிளைவுகள் வராமல் தடுக்கவும் உதவி புரிகிறது.
- நாள்பட்ட சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு வரும் அஜீரணம், வாயுத்தொல்லை, கண் பார்வை கோளாறு, இதய படபடப்பு, கால் மதமதப்பு, அசதி, சோர்வு, பலகீனம், ஆண்மைக் குறைவு போன்ற பக்க விளைவுகளை வராமல் பாதுகாத்துக் கொள்ளவும் மற்றும் சீர் செய்யவும் உதவி புரிகிறது.
- கணையத்தில் உள்ள செல்களை புத்துயிர்க்கச் செய்து இன்சுலின் சுரப்பினை மேம்படுத்த உதவி புரிகிறது.

உடல் சௌபாக்யம் பெற
" சௌபாக்யா " மூலிகைச்சாறுகளை
தொடர்ந்து 60 நாட்கள் உபயோகப்படுத்தவும்

அனைத்து முன்னணி மருந்து கடைகள், டிபார்ட்மெண்ட் ஸ்டோர்கள், இயற்கை உணவு அங்காடிகள், நாட்டு மருந்து கடைகளிலும் தற்போது விற்பனையில் உள்ளது.

**WINSTAR TRADERS**

Old No. 15/7, New No 37/7, Rajeswari Apartments
Jubilee Road, West Mambalam, CHENNAI - 600 033
HO : SALEM T.N. INDIA
FSSAI License No : 12416002003631

9500 26 7000
9500 23 8000
9500 23 9000


https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

Lalithaa™

சென்னை • மதுரை • திருச்சி • புதுச்சேரி • கும்பகோணம் • பெங்களூரு
இராமநாதபுரம் • கோயம்புத்தூர் • திருப்பதி • விசாகப்பட்டினம்

# இந்த சிறிய பேப்பர்,

## நீங்கள் நகை வாங்கும் விதத்தில் பெரிய மாற்றத்தை நிகழ்த்தும்.




லலிதா ஜுவல்லரி ஷோரூமிற்கு வாருங்கள். உங்களுக்கு பிடித்த நகையை தேர்வு செய்யுங்கள். **தங்கம், வைரம், வெள்ளி...** அது எந்த நகையாக இருந்தாலும் - ஆம், எந்த நகையாக இருந்தாலும், முதற்கட்டமாக, அதற்கான எஸ்டிமேட் ஸ்லிப்பைத் (Estimate Slip) தருகிறோம்.

இதை வைத்துக் கொண்டு, குறைந்தது 4 அல்லது 5 ஷோரூம்களில் (நேரம் இருப்பின், இன்னும் சில ஷோரூம்களில் கூட) அதே மாதிரியான நகைக்கு உண்டான எஸ்டிமேட் ஸ்லிப்பைக் கேட்டு வாங்குங்கள். சேதாரம் எவ்வளவு, இறுதி விலை என்ன, போன்றவற்றை ஒப்பிடுங்கள். எங்கே சரியான விலையில் உங்கள் மனதிற்கு பிடித்த நகைகள் கிடைக்கிறதோ அங்கே வாங்கிப் பயனடையுங்கள்.

### எங்கள் பணிவான வேண்டுகோள் !

சரியான விலையைத் தெரிந்து கொண்டு நகை வாங்குங்கள். மார்க்கெட்டிலேயே குறைந்த சேதாரத்தில் நகைகளை அளிக்கும் லலிதா ஜுவல்லரி உங்களை அன்போடு வரவேற்கிறது.

**BIS 916 ஹால்மார்க்**

லட்சக்கணக்கான டிசைன்கள்

## லலிதா ஜுவல்லரி மார்ட் (பி) லிமிடெட்

**சென்னை:** தி.நகர் - பனகல் பார்க். Ph : 044 - 2814 1155 / 77 / 88 | புரசைவாக்கம் - அபிராமி மால் எதிரில். Ph : 044 - 2641 1188.
அண்ணாநகர் - 'L' வெஸ்ட் ப்ளாக், 2வது அவென்யூ, திருமங்கலம் ஜங்ஷன் அருகில், செந்தில் நர்சிங் ஹோம் அருகில். Ph: 044 - 4555 0005.

**மதுரை:** தெற்கு மாசி வீதி. Ph : 0452 - 2330 222 / 444 / 555.
**கோவை:** ஒப்பணக்கார வீதி. Ph: 0422 - 2303277. | **திருச்சி:** சத்திரம் பஸ் ஸ்டாண்ட். Ph : 0431 - 270 6555 / 3666 |
**புதுச்சேரி:** நேரு வீதி. Ph : 0413 - 2341188 / 2331177. | **கும்பகோணம்:** டாக்டர் பெசண்ட் ரோடு. Ph : 0435 - 2402288 / 2402200.
**இராமநாதபுரம்:** [illegible] | திருப்பதி | விசாகப்பட்டினம்

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

அடுத்த இதழ்...
**மார்ச் - 14**
செவ்வாய் அன்று கடைகளில்..!


**சக்தி விகடன்**
ஆன்மிகம் மணக்கும் ஆனந்த ஆலயம்

சந்நிதி 13 தீபம் 24

ஆனந்த விகடன் பப்ளிஷர்ஸ் (பி) லிமிடெட் சார்பாக
வெளியிடுபவர், ஆசிரியர்: **ரவிபிரகாஷ்**
757, அண்ணா சாலை, சென்னை - 600 002.

ஆனந்த விகடன் பப்ளிஷர்ஸ் (பி) லிமிடெட் சார்பாக
ஆனந்த விகடன் பிரின்டர்ஸ் (பி) லிமிடெட் அச்சகத்தில்
அச்சிடுபவர்: **எஸ்.மாதவன்**
எண்:99, (NP), சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098.

பொறுப்பாசிரியர்:
**தி.தெய்வநாயகம்**

தலைமை உதவி ஆசிரியர்:
**எஸ்.கண்ணன் கோபாலன்**

உதவி ஆசிரியர்கள்:
**ரா.அருள் வளன் அரசு,**
**ரெ.சு.வெங்கடேஷ்,**
**இ.ராஜவிபீஷிகா**

தலைமை வடிவமைப்பு:
**கே.எம்.பிரசன்னா**

வடிவமைப்பு:
**என்.முருகன்**



**ஆசிரியர் இலாகா முகவரி:**
சக்தி விகடன்,
757, அண்ணா சாலை, சென்னை - 600 002.
தொலைபேசி: 2854 5500, 5588, 3300
தொலைநகல்: 2851 2929
sakthi@vikatan.com www.vikatan.com



**விளம்பரப் பிரிவு:** பத்மா பாலசுப்ரமணி, துணைப் பொது மேலாளர்.
விளம்பரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி:
**விகடன் மீடியா சர்வீஸஸ்,**
757, அண்ணா சாலை, சென்னை - 600 002.
போன்: 28524074, 84 ஃபேக்ஸ்: 2851 2929
email: advt@vikatan.com

**பத்திரிகை விற்பனைப் பிரிவு:**
எம்.சூரியநாராயணன், துறைத் தலைவர்
சந்தா தொடர்பான விவரங்களை அறிய:
**044 - 6680 2901**
சந்தா தொடர்பான குறைகளை பதிவு செய்ய:
**044 - 6607 6407**
முகவரி: சக்திவிகடன், 757 அண்ணா சாலை,
சென்னை-600 002.



இதழில் வெளியாகும் விளம்பரங்களின்
உண்மைத்தன்மைக்கு விகடன் நிர்வாகம் பொறுப்பல்ல.


# ஹலோ வாசகர்களே...

சக்தி விகடனைப் படிக்கும்போது, உங்கள் மனத்தில் பல கருத்துக்கள், கேள்விகள், சந்தேகங்கள் அலையடிக்கின்றனவா? அது ஷொட்டோ, குட்டோ... பட்டென்று போனை எடுத்து, சட்டென்று உங்கள் எண்ணத்தைப் பதிவுசெய்யலாம். அதற்குத்தானே காத்திருக்கிறோம்...

## 044-66802923

என்ற எண்ணைத் தொடர்புகொண்டால், கணினிக் குரல் வழிகாட்டும். அதற்கேற்ப 3 நிமிடங்களுக்குள் உங்கள் கருத்தைப் பதிவுசெய்யுங்கள். எதிர்முனையில் உங்களுடன் உரையாட யாரும் இருக்க மாட்டார்கள். எனவே, அந்த 3 நிமிடங்கள் முழுக்க முழுக்க உங்களுக்கே! அவசியமென்றால், நாங்களே உங்களைத் தொடர்புகொண்டு மேலும் விவரங்களைப் பெற்றுக்கொள்வோம், ஓ.கே - வா..?

---

விகடன் குழுமம் தொடர்ந்து அளிக்கும் சுவாரஸ்யமான செய்தி மற்றும் சேவைகளை எஸ்.எம்.எஸ் மூலம் பெற உங்களுக்கு சம்மதம் எனில்,

## 044-66802933

என்ற எண்ணுக்கு டயல் செய்து, ஒரு மிஸ்டு கால் கொடுங்கள். ரிங் கேட்பதற்குள்ளேயே தொடர்பு உடனடியாகத் துண்டிக்கப்பட்டு, உங்கள் எண் எங்களிடம் பதிவாகிவிடும்.

---

சந்தா தொடர்பான விவரங்களை அறிய:

## 044-66802901

சந்தா தொடர்பான குறைகளைப் பதிவு செய்ய:

## 044-66076407

---

இந்தப் பட்டியலில் இருந்து உங்கள் எண்ணை நீக்கிக்கொள்ள விரும்பினால், 044-66802944 என்ற எண்ணுக்கு மிஸ்டு கால் கொடுத்தால் போதும்.

---

பயனுள்ள தகவல்களை உங்களுக்கு உடனுக்குடன் அளிப்பது எங்கள் விருப்பமே தவிர, வேறு எந்த ஆதாய நோக்கமும் இல்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

**உங்கள் எண்ணம்... விகடன் வண்ணம்!**

SakthiVikatan.com
facebook.com/SakthiVikatan
twitter.com/SakthiVikatan
youtube.com/vikatanwebtv

www.vikatan.com



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition

www.medicallabequipments.com
www.uniseco.in

https://t.me/joinchat/aaaaaedow77rs3ryirm7tw

UNIVERSE
SURGICAL EQUIPMENT CO



## முதியோர், உடல் நலமற்ற நோயாளிகளின் உற்ற நண்பன்

# யுனிவர்ஸ் சர்ஜிக்கல் எக்யூப்மென்ட்ஸ் கோ!

பெற்றோரைத் தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் பிள்ளைகள் விரும்புகிறார்கள். ஆனாலும், நோயின் பிடியில் இருப்பவர்களைக் கவனித்துக் கொள்ள முடியாமல் முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுகிறார்கள். இத்தகையோர் தங்கள் வாழ்க்கையை துயரத்தோடு கடத்தாமல், எளிமையாகக் கழிக்க வகையில் வீட்டிலேயே அவர்களைச் சிரமம் பார்க்காமல் கவனித்துக் கொள்ளும் உபகரணங்களை விற்பனை செய்து அவர்களுக்கு உற்ற நண்பனாக உதவுகிறது "யுனிவர்ஸ் சர்ஜிக்கல் எக்யூப்மென்ட் கோ". மேலும் முதியோர்கள் மற்றும் நோயாளிகளுக்கான அத்தனை தேவைகளையும் பூர்த்தி செய்து வைக்கிறது.

பெரியவர்கள் இயற்கை உபாதைகளை இருந்த இடத்தில் இருந்தே கழிக்க உதவும் 'டயாப்பர்', சக்கர நாற்காலி, வாக்கர், விரும்பும் வகையில் உயர்த்தியும், தாழ்த்தியும் வைக்கக்கூடிய கட்டில், சுகமான படுக்கை, இருக்கையிலேயே சிறுநீர், மலம் கழிக்கும்படியான சேர்கள் என அனைத்து விதமான உபகரணங்களும் ஒரே இடத்தில் கிடைக்கின்றன.

சிலருக்கு இருமினாலோ, தும்மினாலோ கூட சிறுநீர் வெளியேறும். இதனால், அவர்களிடம் துர்நாற்றம் இருந்து கொண்டிருக்கும். அதைத் தவிர்க்க இங்கே கிடைக்கும் பெரியவர்களுக்கான டயாப்பரை பயன்படுத்தி, அந்தத் தொல்லையில் இருந்து விடுபடலாம். நீர்படுக்கை (Water Bed) மசாஜர், படுக்கைப் புண் வராமல் தடுக்க காற்று அடைக்கப்பட்ட மெத்தை (Air Bed), முதுகுவலி, மூட்டுவலிகளைக் குறைக்கும் ஆர்த்தோ பெல்ட் (Ortho Belt), முட்டிக் கவசம் (Knee Cap), பெரும்பாலான மக்கள் பயன்படுத்தும் மலக்கூட நாற்காலி, மலக்கூட பீடம், வீல் சேர், வாக்கிங் ஸ்டிக், இடுப்புப் பட்டை (Lumber belt), கழுத்துப் பட்டை (Cervical collar), மென்மையான உறக்கத் தரும் தலையணை என உடலுக்கு உறுதுணையாக இருக்கும் அனைத்து மருத்துவ உபகரணங்களும் இங்கே கிடைக்கிறது. மேலும், ஆக்ஸிஜன் சிலிண்டர் (oxygen cylinder) மற்றும் மெஷின்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் கிடைக்கிறது. மொத்தத்தில் ஒரு மல்ட்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் கிடைக்கக்கூடிய அத்தனை வசதிகளையும் இங்கே வாங்கிக் கொள்ள முடியும். இதுதவிர, வீட்டிற்கே வந்து கவனித்துக்கொள்ள செவிலியர்களையும் ஏற்பாடு செய்து தருகிறது.

"குறைவான விலை. அதிக தரம்" என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு, இங்கு சர்க்கரை, ரத்தக்கொதிப்பு சோதனை செய்யும் கையடக்க மெஷின்கள், உடல் வெப்பநிலை பார்க்கும் தெர்மா மீட்டர், முதலுதவிக்குத் தேவையானவை மற்றும் அடிப்படை மருத்துவ கிட் என மருத்துவ உபகரணங்கள் பலவும் இங்கே விற்பனை செய்யப்படுகின்றன. மொத்த விலைக்கே கொடுப்பதால், மருத்துவமனைகளில் வாங்குவதை விடவும் இங்கே விலை மிகவும் குறைவு. மருத்துவமனைகளுக்குத் தேவையான பொருட்களையும் இங்கிருந்து சப்ளை செய்கின்றனர். **மேலும் முதியோர்களுக்கான பிரத்யேகமான 'யுனி ப்ரோ அடல்ட் டயாப்பர்', அதிரடி சலுகை விலையில் கிடைக்கிறது, மற்றும் இரண்டு மாடல்களிலும் கிடைக்கிறது.**

BUY ONE GET ONE FREE




எங்களது தயாரிப்புகள்:-



FOR ADULT WET WIPES | ADULT DIAPER & UNDER PAD | PATIENT COT | AIR BED | TOILET AID FURNITURE | WHEEL CHAIR

Just Call us for Home Delivery

90430 40607 / 98407 45230

https://t.me/joinchat/aaaaaedow77rs3ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryjrm7tw

# உள்ளே...

அட்டையில்...
**ஸ்ரீ திருவேங்கடமுடையான்**
படம்: காவல்கேணி வெங்கடகிருஷ்ணன்




மாசி மகத்துவம்! 8





கேள்வி - பதில் 26





ஒரே சந்நிதியில் 10 அவதாரங்கள்! 20





மண வாழ்க்கை அருளும் மாடக்கோயில் 44





மக நட்சத்திரமும் முன்னோர் வழிபாடும்! 14





கயிலை காலடி காஞ்சி 56


சிவமகுடம்
நாரதர் உலா
அடுத்த இதழில்



https://t.me/joinchat/aaaaaedow77r83ryjrm7tw

world edition
https://t.me/joinchat/AAAAAEdow77r83ryirm7tw




https://t.me/joinchat/AAAAAEdow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

■ மாலதி சந்திரசேகரன்

# மாசி



தமிழ் மாதம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் மகத்துவம் பெற்றதாகத் திகழ்கிறது. அவ்வகையில் மாசி மாதம் சகல தெய்வங்களுக்கும் உகந்த மாதமாகப் போற்றப்படுகிறது.

மாசியில் சிறுவர்களுக்கு உபநயனம் செய்வது சிறப்பு. இந்த மாதத்தில் வரும் சங்கடஹர சதுர்த்தி விசேஷமானது. அன்று விரதம் கடைப்பிடித்து, விநாயகரை வழிபட, எல்லாவிதமான தோஷங்களும் சங்கடங்களும் விலகும். அதேபோன்று காரடையான் நோன்பு - சாவித்திரி விரதம், மாசி பௌர்ணமியில் வரும் ஹோலிப் பண்டிகை ஆகியன இந்த மாதத்துக்கே உரிய வழிபாடுகள்.

மேலும், மாசி மாதம் வளர்பிறை பஞ்சமி திருநாள் கலைவாணிக்கு உகந்த திருநாள் என்கின்றன ஞான நூல்கள். இந்த நாளில், சரஸ்வதி அந்தாதி முதலான துதிப்பாடல்களைப் பாடி, வண்ண மலர்களால் அர்ச்சித்து வழிபட்டால், பிள்ளைகள் கல்வி-கேள்விகளில் சிறந்து விளங்குவார்கள்.

குறிப்பாக மாசி மாதத்தில் வரும் மகம் நட்சத்திரத் திருநாள், உன்னதமான பலன்களை அளிக்கவல்லது. சந்திர பகவான் பூரணத்துவமாக தனது கலைகளைப் பொழியும் நாளில், தெய்வங்களை ஆராதித்தால், நினைத்த காரியம் நிறைவேறும் என்பது திண்ணம். அந்தவகையில், மாசி மாதத்தில் (பெரும்பாலும்) சந்திரன் பூரணப் பொலிவுடன் திகழும் பௌர்ணமி திருநாள்



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

# மகத்துவம்!

மக நட்சத்திரத்துடன் இணைந்துவரும். ஆகவேதான், மாசி மகம் ஆன்மிக மகத்துவங்களுக்கு உரியதாகத் திகழ்கிறது.

மாசி மகத்தன்று மந்திர உபதேசம் பெறுவது மிகமிகச் சிறந்தது. புதிதாக ஏதாவது படிக்க விரும்புகிறவர்கள், ஆராய்ச்சி செய்ய விரும்புகிறவர்கள் மாசி மகத்தன்று ஆரம்பித்தால் சிறந்து விளங்கலாம்.

## மங்கலம் அருளும் அம்பிகை பூஜை

**ச**கல உயிர்களுக்கும் மூலமாகத் திகழும் ஆதிசக்தி அவதரித்தது, ஒரு மாசி மக நன்னாளில்தான். இந்த நாளில் அம்பிகையைக் குங்குமத்தால் அர்ச்சித்து வழிபட்டால், நினைத்தது நிறைவேறும்; எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். இந்தத் தினத்தில், இல்லத்தில் அம்பாளை ஆவாஹனம் செய்து பூஜிப்பது, பெண்களுக்கு மேன்மையைத் தரும்.

எப்படி பூஜிப்பது என்று தெரிந்துகொள்வோமா?

அன்றைய நாளில் எண்ணெய் ஸ்நானம் அல்லாமல் பெண்கள் தலைக்குக் குளித்துவிட்டு, மடி வஸ்திரங்களை உடுத்திக்கொள்ள வேண்டும். பூஜை செய்யும் இடத்தைச் சுத்தம் செய்து, கோலங்கள் இட்டு அலங்கரித்து வைத்துக்கொள்ளவும். முதலில், விநாயகர் பூஜை. மஞ்சள் பிள்ளையார் பிடித்துவைத்து, மலரும் நைவேத்தியமும் சமர்ப்பித்து, தூப-தீப ஆராதனையுடன், எந்தத் தடையும் இன்றி பூஜை இனிதே நடைபெற, முழு முதற் தெய்வமாம் கணபதியை வழிபட வேண்டும். பிறகு, அம்பாள் பூஜையைத் துவக்க வேண்டும்.

உருண்டையான குண்டு மஞ்சளை எடுத்துக்கொண்டு, கீழ் முனையைத் தேய்த்து, உட்காரும் நிலைக்கு ஏற்றவாறு தயார் செய்து கொள்ள வேண்டும்.

பின்னர், பித்தளை தாம்பாளம் ஒன்றை எடுத்து, அதற்குச் சந்தன - குங்குமத் திலகமிட்டு, சிறிது அட்சதையைப் பரப்பி, அதன்மீது மஞ்சள் கிழங்கை நிறுத்திவைக்க வேண்டும். இந்த மஞ்சள் கிழங்கையே அம்பாளாகப் பாவித்து வழிபட வேண்டும். அதாவது, அன்றைய சங்கல்ப மந்திரத்தைக் கூறி, மஞ்சள் கிழங்கில் அம்பாளை மானசீகமாக எழுந்தருளச் செய்ய வேண்டும்.

பின்னர், அம்பாளாகத் திகழும் மஞ்சள் கிழங்குக்குச் சந்தனம், குங்குமம், புஷ்பம், வஸ்திரம் (ரவிக்கை துண்டு), பஞ்சு திரி கொண்டு மாலை ஆகியவற்றை சார்த்தி அலங்காரம் செய்ய வேண்டும். தொடர்ந்து, மற்றொரு பித்தளை தாம்பாளத்தில் அம்பாளுக்கான காதோலை, கருகமணி, கண்ணாடி, வளையல்கள் ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இதையடுத்து, கௌரி அஷ்டோத்திர சதநாமாவளியைக் கூறி, சிகப்பு நிறப் புஷ்பங்கள் கொண்டு அர்ச்சனை செய்ய வேண்டும். அஷ்டோத்திரம் சொல்ல இயலாதவர்கள், தமிழ்த் துதிகளையும் பாடல்களையும் பாடி ஆராதிக்கலாம். பயத்தம்பருப்பு பாயசம், மகா நைவேத்தியம், வடை ஆகியவற்றை நைவேத்தியமாகச்



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

## மாசி மகமும் தீர்த்தவாரியும்!

பெரும்பாலான திருத்தலங்களில் மாசி மகத்தன்றுதான் தீர்த்தவாரி நடைபெறும். ஒரு காலத்தில் கொடியவனான மன்னன் ஒருவன் மக்களை வாட்டி வதைத்து வந்தான். அந்த மன்னனை அழிப்பதற்கான வழிதேடி, வருணதேவனை நாடிச் சென்றார் முனிவர் ஒருவர். அவர் வருணனின் குருதேவரும்கூட. அவர் வருணன் இருக்கும் இடத்தை அடைந்தபோது நன்கு இருட்டிவிட்டது. ஆகவே, வந்திருப்பது தன் குருநாதர் என்பதை அறியாத வருணன், அவரை தன்னை அழிக்க வந்த பகைவன் என்று கருதி, கொன்றுவிட்டான். அதனால் உண்டான பாவம், பைசாச வடிவமெடுத்து வந்து வருணனின் கை கால்களைக் கட்டி, கடலில் வீசிவிட்டது.

வருணனின் நிலைகண்ட தேவர்கள், சிவபெருமானிடம் சென்று முறையிட்டார்கள். வருணனின் இன்னல் தீர்க்கத் திருவுளம் கொண்ட சிவபெருமான், கடற்கரைக்கு எழுந்தருளி அவனை மீட்டார். வருணன் பலவாறு அவரைப் போற்றித் தொழுதான். அத்துடன், "எனக்குத் தாங்கள் அருள்புரிந்த மாசி மகமாகிய இந்நாளில், கடற்கரையில் நீராடியவர்களின் துன்பக் கட்டுகளை எல்லாம் நீக்கி, அவர்களுக்கு முக்தி தந்தருள வேண்டும். ஸ்வாமியான தாங்களும் மாசி மகத்தன்று இந்தத் துறைக்கு எழுந்தருள வேண்டும்" என்று வரம் வேண்டிக் கொண்டானாம். அதன்படியே, இன்றளவும் மாசி மகத்தன்று தீர்த்தவாரி வைபவம் நிகழ்வதாகக் கூறுவர்.

சமர்ப்பிக்கலாம்.

தீபாராதனை முடிந்ததும், கன்னிப்பெண்கள் கீழ்க்காணும் ஸ்லோகத்தைச் சொல்லி அம்பாளை வணங்க வேண்டும்.

**'காத்யாயினி மஹாமாயே மஹாயோகின்ய தீச்வரி**
**நந்தகோப சுதம் தேவி பதிம்மே குரு தே நம:**

**கருத்து:** மாயைகளுக்கெல்லாம் இருப்பிடமாக இருப்பவளும், மகத்தான யோக ஸித்திகளை உடையவளும், காத்யாயினி என்று போற்றப்படுபவளுமான தேவியே, உன்னை நமஸ்கரிக்கிறேன். எனக்கு நந்தகோப குமரனான கிருஷ்ணனே (கிருஷ்ணனைப் போன்ற) கணவனாக அமையும் பாக்கியத்தைக் கொடு.

### கர்ப்பிணிப் பெண்கள் சொல்ல வேண்டிய ஸ்லோகம்...

**'வாபீதடே வாமபாகே - வாம**
**தேவஸ்ய தேவஸ்ய தேவீஸ்திதாத்வம்**
**மாந்யா வரேண்யா வதான்யா - பாஹி**
**கர்ப்பஸ்த ஜந்தூன் ததா பக்த லோகான்'**

**கருத்து:** அழகிய முல்லைக் கொடியுடைய வனத்தில் இருக்கும் தேவியே, கர்ப்பத்திலுள்ள சிசுவையும், என்னையும் (தாய்) ரக்ஷிக்கும் அம்பிகையே, எல்லோராலும் பூஜிக்கப்படுபவளே, வேண்டிய வரத்தைக் கொடுக்கும் தாயே, கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையை ரஷிப்பாயாக என்கிற ஸ்லோகத்தைக் கூற வேண்டும்.

இங்ஙனம் துதித்து வழிபட்ட பிறகு, சுமங்கலிகளுக்கு வெற்றிலை, பாக்கு, மஞ்சள் கிழங்குடன், நாணயம் மற்றும் மாதுளம்பழம் வைத்துத் தர வேண்டும். மேற்கொண்டு வைத்துக்கொடுப்பது அவரவர் சௌகர்யம்.

### மாசி மகத்தில் மாதவன் வழிபாடு!

**இ**ந்த நன்னாளில் மாணவர்கள் மாதவனை வழிபட வேண்டும். அவர்கள், மஞ்சள் கிழங்கை மாதவனாகப் பாவித்து வழிபட வேண்டும்.

மஞ்சள் கிழங்குக்குச் சந்தனம் -

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw



குங்குமம் திலகமிட்டு, பஞ்சு வஸ்திரம் சார்த்தி, துளசி தளங்களைக்கொண்டு, விஷ்ணு அஷ்டோத்திர சத நாமாவளியைப் படித்து, பூஜிக்க வேண்டும் அல்லது ஆழ்வார் பாசுரங்களைப் பாடி வழிபடலாம்.

நைவேத்தியமாக வழக்கமான பதார்த்தங்களுடன் நெய்யில் பொரித்த அப்பத்தைச் சமர்ப்பித்து வழிபடுவது விசேஷம். உங்கள் வீட்டுக் குழந்தைகள் சிறுவயதினர் எனில், அவர்களை அருகில் வைத்துக்கொண்டு வீட்டுப் பெரியவர்கள் பூஜையை எடுத்துச் செய்யலாம்.

பூஜைக்குப் பிறகு மாணவர்கள் சொல்லவேண்டிய ஸ்லோகம்:

**'பக்திம் சக்திம் விரக்திம் ச புத்திம் முக்திம்ச யுக்தித**
**ஹரே மே தேஹி தைத்யாரே ஹரே நர ஹரே யதா'**

**கருத்து:** அசுரர்களுக்கு சத்ருவானவரே, நரசிம்ம மூர்த்தியே, விருகாசுரனை வதம் செய்தவரே, ஹரியே, எனக்குப் பக்தி, புத்தி, யுக்தி, சக்தி, வைராக்கியம், போகம், மோக்ஷம் எல்லாவற்றையும் அருள்வாயாக.

மேலும், இந்தத் தினத்தில் விஷ்ணு சகஸ்ரநாமம் பாராயணம் செய்வது, மேன்மையான பலன்களைத் தரும் என்பதில் ஐயமில்லை. மாசி மகத்தன்று யார் யாருக்கு என்ன குறை உள்ளதோ, அதை பகவானிடத்தில் சமர்ப்பித்தால், குறைகள் நீங்கி, சர்வாபீஷ்டங்களும் கைகூடும். ச


https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

‘குடமூக்கே குடமூக்கே என்பீராகில் கொடுவினைகள் தீர்ந்து அரனைக் குறுகலாமே’ என்று அப்பர் பெருமான் போற்றிப் பாடிய தலம், கும்பகோணம். அற்புதமான இந்தத் தலத்தை வாழ்வில் ஒருமுறையேனும் தரிசிக்கும் வாய்ப்பை நல்கும் வைபவம், மாசி மகம். வரும் மார்ச் 11–ம் நாள், சனிக்கிழமை அன்று மாசி மகத் திருநாள். இந்த வைபவத்தைத் தரிசிக்க, குடந்தைக்குச் செல்லுமுன் இந்தத் தலத்தின் மகத்துவத்தை அறிவது அவசியம் அல்லவா?

ஒரு பிரளயக் காலத்தில் சிவனாரின் ஆணைப்படி, அமுதத்தால் மண் பிசைந்து ஒரு கலயம் செய்தார் பிரம்மதேவன். பிறகு, அதை அமிர்தத்தால் நிறைத்து, படைப்புக்குத் தேவையான பீஜங்களையும் இட்டுவைத்து முறைப்படி பூஜித்து, மேருமலையில் கொண்டு சேர்த்தார். பிரளயம் ஏற்பட்டபோது, அமுதக் கலசம் பிரளய நீரில் மிதந்து, குறிப்பிட்ட இடத்தை அடைந்த பின்னர், சிவபெருமான் வேடன் வடிவம் தாங்கினார். தமது வில்லும் அம்பும் எடுத்து நாணேற்றினார். அம்பு, அமுதக் கலசத்தைக் கிழித்துக் கவிழ்த்தது. கலசத்தின் வாய்ப் பகுதி விளிம்பு, தெறித்து விழுந்தது. அதுவே குடவாயில் என்னும் திருத்தலமானது.

கலசம் குப்புறக் கவிழ்ந்ததால், அதிலிருந்த அமுதம் நான்கு திசைகளிலும் பெருகிப் பாய்ந்தது. இரண்டு இடங்களில் குளமாகவும் அமுதம் தேங்கி நின்றது. இரண்டு குளங் களும் முறையே பொற்றாமரைக் குளமாகவும் மகாமகக் குளமாகவும் அழைக்கப்படுகின்றன.

அமுதக் கலசம் தங்கிய இடம் என்பதால், அத் திருத்தலம் கும்பகோணம் ஆனது.

இறைவன் ஆதிகும்பேஸ்வரர் எனும் திருப்பெயர் கொண்டார்; அம்பாள் மங்களநாயகி. குடமூக்கு, திருக்குடந்தை ஆகிய பெயர்களும் உண்டு இத்தலத்துக்கு. 7–ஆம் நூற்றாண்டில் ‘மூலைக் கூற்றம்’ என்று பெயர் பெற்றிருந்ததாம். ‘எங்கு செய்த பாவத்தையும் இல்லாமல் செய்யும் தன்மை கொண்டது’ என காசி காண்டம் போற்றிப் புகழ்கிறது கும்பகோணத்தை.

இங்குள்ள ஆலயங்களில் தேவாரப் பாடல் பெற்றவை மூன்று. அவை: குடமூக்கு (கும்பேஸ்வரர் கோயில்), குடந்தை கீழ்க் கோட்டம் (கும்பகோணம் நாகேஸ்வரம் கோயில்), குடந்தைக் காரோணம் (பலருடைய எண்ணப்படி சோமேஸ்வரர் கோயில்; காசி விசுவநாதர் கோயில் என்றும் கூறுவதுண்டு).

வைணவமும் சிறந்தோங்கும் தலம் இது. ‘ஆராவமுதத்து ஆழ்வார்’ என்று பெருமாளுக்கே ஆழ்வார் திருநாமம் கூறும் பெருமையும், ‘உபய பிரதான திவ்ய தேசம்’ என்ற பெருமையும் கும்பகோணத்துக்கு உண்டு (மூலவருக்கு எவ்வளவு முக்கியத் துவமோ அவ்வளவு முக்கியத்துவம் உற்சவருக்கும் உண்டு. இரட்டை முக்கியத்துவம் என்பதுதான் உபய பிரதானம்).

பிரளயத்துக்குப் பின், அமுதக் கலசம் தங்கி நிலைபெற்று, கும்பகோணமும் பிற தலங்களும் உருவான நிகழ்வுகள், மாசி மாதத்திலேயே நடந்ததாம். தொடர்ந்து நான்முகன் சிவனாருக்குப் பெருவிழா கொண்டாடியதும் மாசியில்தான். எனவே, மாசி மாதம் என்றால், கும்பகோணத்தில் கொண்டாட்டம்தான்!

-திருமலை



# திருக்குடந்தை தரிசனம்!



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition
https://t.me/joinchat/aaaaaedow77rs3ryirm7tw

# இயற்கையான உணவு! பாரம்பரியமான சுவை!



- No Preservatives
- No Food Colours
- No Chemicals




புட்டு மாவு




சிகப்பு அரிசி (செம்பா) புட்டு மாவு




கேழ்வரகு புட்டு மாவு




கம்பு புட்டு மாவு




மக்கா சோளம் புட்டு மாவு




சம்பா கோதுமை புட்டு மாவு




திணை புட்டு மாவு




வெள்ள சோள புட்டு மாவு

Manufactured by: கிருஷ்ண பவன் புட்ஸ் & ஸ்வீட்ஸ்
KRISHNA
402, பெரிய கடைவீதி, திருச்சி 8. போன் (0431) 2709858, 74180 99017, 98940 70944
Email: krishnabhavanfoods1989@gmail.com website: www.krishnabhavanfoods.com

https://t.me/joinchat/aaaaaedow77rs3ryirm7tw

world edition
https://t.me/joinchat/aaaaaEdow77r83ryirm7tw

■ சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

# மக நட்சத்திரமும் முன்னோர் வழிபாடும்!

**பௌர்ணமியுடன் இணைந்த மகம், மாசி மகமாகப் பெருமை பெற்றது. 'மாக ஸ்நானம்' புண்ணியத்தைச் சேர்க்கும். மாசி மாதத்தை 'மாக மாதம்' என்று புராணம் சொல்லும். மாசி மகத்தில் அத்தனை தெய்வ வடிவங்களும் நீராடி மகிழ்வதுண்டு. மாசி மகத்தையும், மகாமகத்தையும் (மாமாங்கம்), கும்பமேளாவையும் உருவாக்கியது மகம் நட்சத்திரம் என்பது எல்லோரும் அறிந்த விஷயம்.**

**சி**ம்ம ராசியில் இடம்பிடித்த நட்சத்திரம் மகம். சூரியன் சிம்ம ராசிக்கு அதிபதி. செவ்வாய், சுக்கிரன், புதன், சந்திரன் ஆகிய நால்வரும் மக நட்சத்திரத்தின் நான்கு பாதங்களிலும் இடம்பிடித்து அம்சகத்தில் இணைந்தவர்கள். இவர்களில் சூரியனை ஆன்மா எனச் சொல்லும் வேதம், சந்திரனை மனதுக்குக் காரகன் என்கிறது. அதேபோல், செவ்வாய் வெட்பம்; சுக்கிரன் தட்பம்; புதன் பூமி என்று ஜோதிடம் குறிப்பிடும். சுறுசுறுப்பு, செல்வம், பகுத்தறிவு ஆகியவற்றைத் தரவல்லவர்கள் இந்த மூவரும்.

அசுவினி, மூலம் - இந்த இரண்டு நட்சத்திரங்களில், நான்கு பாதங்களில் செவ்வாய், சுக்கிரன், புதன், சந்திரன் ஆகிய நால்வர் இணைந்திருந்தாலும்... ஆன்மகாரகனான சூரியனின் சிம்ம ராசி வழிவந்த இணைப்பு இருப்பதால், மகத்தில் நீராடலுக்குப் பெருமை வந்தது. மகத்தின் தனிச்சிறப்புக்கு 'ஆன்ம ஸம்பந்தம்' அதாவது சூரிய ஸம்பந்தம் காரணமாயிற்று.

சரி! மகத்துக்கு வேறென்ன சிறப்பு?

பித்ருக்களை ஆராதனை செய்ய உகந்தது இது (பித்ருப்ய: ஸ்வாஹா மகாப்ய:...). நம் முன்னோர் திவ்ய பித்ருக்களோடு - வசு, ருத்ர, ஆதித்ய ஆகிய மூவரின் தொடர்புடன் இணைந்தவர்கள். ஸ்தூல வடிவத்தை விட்டு, சூட்சும வடிவில் இருப்பவர்கள். தேஜஸ் - வாயு போன்ற லேசான பஞ்சபூதங்களைத் தழுவி பரவியிருப்பவர்கள். திவ்ய பித்ருக்களைப் போல் தெய்வாம்சம் பொருந்தியவர்கள். தர்ப்பணம் வாயிலாகவும் பிண்டம் வாயிலாகவும் வழிபட வேண்டியவர்கள்.

'திவ்ய பித்ருக்களைப் படைத்த பிறகு, தேவர்களையும் மனிதர் களையும் மற்ற இனங்களையும் படைத்தார் கடவுள்' என்கிறது புராணம். தேவர்கள், பித்ருக்களை அண்ணனாகப் பார்ப்பார்கள். தேவர்களின் வழிபாட்டில் முன்னோர் வழிபாடு முன்னமேயே நடந்துவிடும் (நாந்திச்ராத்தம்). அண்ணனுக்கு முதலிடம் கொடுப்பான் தம்பி என்பது பண்பு மட்டும் அல்ல; சாஸ்திரமும் விரும்புகிறது. முன்னோர் ஆராதனையும் திருமணமும் சேர்ந்து வந்தால், முதலில் ஆராதனையை முடித்துவிட்டுத் திருமணத்தை ஏற்கச்சொல்லும் சாஸ்திரம் (தஸ்மாத்பித்ருப்ய: பூர்வேத்யு: க்ரியதை). திவ்ய பித்ருக்களுடன் நம் முன்னோரையும் இணைத்து, பித்ருக்கள் என்கிற அந்தஸ்தை அளிக்கிறோம். வசு, ருத்ரன், ஆதித்யன் என்ற மூவரில், நம் பித்ருக்களை இணைத்து, என்றும் ஆராதனைக்குரியவர்களாக அவர்களை உயர்த்துகிறோம்.



https://t.me/joinchat/aaaaaEdow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw





https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw



இறப்புக்குப் பிறகு, சிறப்பு பெற்ற நம் முன்னோர் அதாவது பித்ருக்கள், மகத்தின் தேவதைகள் (மகா நட்சத்திரம் பிதரோ தேவதா). அவர்களை, 'வம் வஸூப்ய: ரும் ருத்ரேப்ய: அம் ஆதித்யேப்ய: பித்ரும்ப்யோ நம:' என்று சொல்லி வழிபடலாம். மந்திரம் தெரிந்தவர்கள் 'நமோவ: பிதரோ ரஸாய...' என்ற மந்திரத்தைச் சொல்லி 16 உபசாரங்களை அளித்து வழிபடலாம். மந்திரம் தெரியாதவர்கள் 'தேவதாப்ய: பித்ருப்ய: சமஹா யோகிப்ய ஏவச நம: ஸ்வதாயை ஸ்வாஹாயை நித்யமேவ நமோ நம:' என்ற செய்யுளைச் சொல்லி வழிபட வேண்டும். அதுவும் இயலாதவர்கள், காலையில் எழுந்து நீராடியதும், இரண்டு கைகளிலும் தண்ணீரை அள்ளி எடுத்து, 'பித்ரூன் தர்ப்பயாமி' என்று சொல்லி விட வேண்டும். ஜலத்தை அள்ளி அளித்து வழிபடுவதில் மகிழ்பவர்கள் அவர்கள்.

தகப்பனின் ஜீவாணுக்களின் தொடர்பு, தன்னோடு சேர்த்து ஏழு தலைமுறைகளில், விகிதாசாரப்படி படிப்படியாகக் குறைந்து ஒட்டிக் கொண்டிருக்கும். அதன்பிறகு ஓய்ந்துவிடும். மூன்று தலைமுறைகளில் முழுமையாக இருக்கும். ஆகையால், மூன்று தலைமுறை பித்ருக்களை நிரந்தர ஆராதனையில் சேர்த்திருக்கிறது தர்ம சாஸ்திரம் (நம: பிதா புத்ர: பௌத்ரோ வஷட் ஸ்வாஹா).

மனதில் பதிந்துவிட்ட, இறந்து போன தந்தையின் உருவத்தை நினைத்துக்கொண்டு வழிபடலாம். தற்போது தந்தையின் வரைபடத்தை வைத்து சிலர் வழிபடுகிறார்கள். இன்னும் சிலர், போட்டோவை வைத்து வழிபடுகின்றனர். தை அமாவாசை, ஆடி அமாவாசை, கிரஹண காலங்கள், மஹாளயபக்ஷம் போன்ற காலங்களில் இறந்தோரை நினைத்து அன்னதானம் செய்வதும், விசேஷமான முன்னோர் வழிபாட்டில் அடங்கும்.

ஸ்னேஹம் என்றால் நட்பு என்று பெயர் உண்டு. பற்றிக்கொள்ளுதல் என்றும் சொல்லலாம். எள்ளிலிருந்து வந்தஸ்னேஹம், அதாவது எண்ணெய் ஒட்டிக்கொள்ளும்; விட்டுப்போகாது. பித்ருக்களுடன் ஒட்டுதலை உறுதி செய்ய ஒட்டும் தன்மை பொருந்திய எண்ணெய்க்கு ஆதாரமான எள்ளைச் சேர்த்துக் கொள்கிறோம். பித்ரு தர்ப்பணத்தில். நீரிலும் ஸ்னேஹம் உண்டு. அதன் அளவு குறைந்து காணப்படும். ஆகையால் ஒட்டுதலை உறுதி செய்யும் ஜலத்தால் பித்ருக்களை வழிபடுகிறோம். தினமும் வழிபட வேண்டியவர்களில் பித்ருக்களும் அடங்குவர். தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள் மூவரையும் தினமும் வழிபடச் சொல்லும் தர்ம சாஸ்திரம்.

பருவகாலங்களை நடைமுறைப்படுத்தி உலகை இயங்கச் செய்பவர்கள் தேவர்கள். கல்வியை அளித்து, சிந்தனை வளத்தைப் பெருக்கி, மனித இனத்தைச் செழிப்பாக்குபவர்கள் ரிஷிகள். அறம் காக்கும் வாரிசுகளை தடை இல்லாமல் அளித்து, உலக இயக்கத்தை நிலைநாட்டுபவர்கள் பித்ருக்கள். அவர்களது வழிபாடு உலக நன்மைக்கு உகந்தது. சூரிய வம்சம், சந்திர வம்சம், யாதவ வம்சம் போன்ற வம்ச பரம்பரை வளர்ந்தோங்க, அவர்களது அருள் பயன்பட்டது. இயற்கையாக இவ்வுலகம் அழிவைத் தொடும் வரை உலக இயக்கத்தை முறைப்படுத்த, அறத்தைக் காக்க, நல்ல குடிமகன்களைத் தோற்றுவிக்க அவர்களது அருள் வேண்டும். எனவே, மறக்காமல் தினமும் அவர்களை வழிபட வேண்டும்.

மகத்தன்றும் முன்னோரை வழிபடுங்கள்; மகத்தான வாழ்க்கையைப் பெறலாம்.


PRESS & REGISTRATION OF BOOKS ACT
Registration of Newspapers (Central) Rules, 1956
FORM IV(SEE RULE 8) Statement about Ownership & other particulars about Newspaper

SAKTHI VIKATAN

| | |
|---|---|
| 1 Place of Publication | 757, Anna Salai, Chennai - 2. |
| 2 Periodicity of its Publication | Fortnightly |
| 3 Printer's Name | S.Madhavan |
| Nationality | Indian |
| Address | Plot No: 3, Himachal Apartments, Pradeep Avenue, Thirumagal Nagar II Street, Selaiyur, Chennai - 600 073. |
| 4 Publisher's Name | N.Raviprakash |
| Nationality | Indian |
| Address | Door No: 1, Rajashree Flats 23/45, 18th Avenue Ashok Nagar, Chennai - 600 083. |
| 5 Editor's Name | N.Raviprakash |
| Nationality | Indian |
| Address | Door No: 1, Rajashree Flats 23/45, 18th Avenue Ashok Nagar, Chennai - 600 083. |
| 6 Name and Address of Shareholders holding more than one percent of the Share Capital | B.Srinivasan & Family, New No.36, Old No.58, III Main Road, Gandhi Nagar, Adyar, Chennai – 600 020. |

I, N.RAVIPRAKASH hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated : 12.02.2017 Signature of Publisher: N.RAVIPRAKASH




https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw




# சிவ பொக்கிஷம்!

இப்படிக்கு...

**பூ**ர்வ ஜன்ம பாவம் போக்கும் 'கொக்க ராயன்பேட்டை' ஸ்ரீபிரம்ம லிங்கேஸ்வரர் ஆலயம் குறித்த தகவல்கள் அருமை. நேரில் சென்று தரிசிக்கும் ஆவலைத் தந்தது!

- **டி.சிவராமன்**, சென்னை-42

**'சி**வனாருக்கு லிங்க உருவம் எதற்கு' என்ற கேள்விக்கான விளக்கத்தைப் படித்துப் பயனடைந்தோம். அதிலும், சிவராத்திரியையொட்டி இப்படியான கேள்வி-பதிலை அளித்தது சிறப்பு.

- **ரா.கயல்விழி**, கும்பகோணம்

**கா**ந்தமலை முருகன் கோயிலைப் பற்றி படித்து சிலிர்த்தேன். விரைவில் காந்தமலைக்குச் சென்று வழிபட உள்ளேன். நன்றி!

- **மோகன்**, நாகர்கோவில்

**'ம**னிதனுக்குக் கோபம் என்ற குணம் மட்டும் இருந்தால், மற்ற நல்ல குணாதிசயங்கள் தெரியாமலே போய்விடும்' என்று கூறி, கோபத்தைத் தவிர்ப்பதற்கான அவசியத்தை மிக அருமையாக எடுத்துச்சொன்னது 'இளைஞர் சக்தி' பகுதி.

- **பா.ராஜேஷ்**, நன்னிலம்

**தி**ருப்பட்டூர் பிரம்மபுரீஸ்வரருக்கும் பாஸ்கர குருக்களுக்குமான பதினெட்டு ஆண்டுகால பந்தத்தைப் படித்து நெகிழ்ந்தேன்.

- **ச.ராகவன்**, திருநின்றவூர்

**'சி**வம்..தவம்..தரிசனம்' தொகுப்பு, அற்புதம். பொக்கிஷமாகக் கருதி, பூஜித்து வருகிறேன்.

- **க.கிரிஜாதேவி**, வடலூர்

**சி**வராத்திரி விரதம் இருப்பவர்களுக்கு கையேடாக இருந்தது சக்தி விகடனின் இணைப்புப் புத்தகம்.

- **ஜா.சீதா**, மதுரை

www.vikatan.com
தமிழின் நம்பர் 1 பெண்கள் இதழ் அவள் விகடன்

பதின்ம வயதில் இருக்கும் பிள்ளைகள், 40 வயதில் இருக்கும் கணவர் என்று இருவேறு எமோஷன்களில் இருப்பவர்களை அழகாக ஹேண்டில் செய்வதற்காகவே பெண்களுக்கு ஒரு சபாஷ் சொல்லலாம்!

இப்போது விற்பனையில்!






https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

# இறைவன் அழைத்த கடல்!



**இ**றைவன் விரும்பிய இடத்தில் ஏழு கடல்களின் அம்சத்துடன் கூடிய தீர்த்தங்கள் தோன்றியுள்ளன. இவற்றை, சப்த சாகர தீர்த்தங்கள் என்பர். இறைவன் பலமுறை இத்தகைய கடல் தீர்த்தங்களைப் படைத்திருக்கிறான் என்பதைப் புராண வரலாறுகள் கூறுகின்றன.

இறைவன் மண்மீது மாமன்னனாக வந்து மதுரையில் மீனாட்சி அம்பிகையை மணந்து முடிபுனைந்து அரசாட்சி செய்தார். அப்போது மீனாட்சியின் தாயான காஞ்சன மாலையார் மருமகனான சிவபெருமானிடம் கடல் நீராட விரும்புவதாகக் கூறினாள். சிவபெருமான் நீங்கள் கடலைத் தேடிச் செல்ல வேண்டாம். கடலையே இங்கு வரவழைக்கிறேன், என்று கூறினார். அவரது விருப்பத்தை உணர்ந்த ஏழு கடல்களும் மதுரையில் ஒரே தீர்த்தமாகத் தோன்றின. அதற்கு ஏழு கடல் தீர்த்தம் என்பது பெயர். அந்தத் தீர்த்தத்தின் கரையில் காஞ்சன மாலையார் ஆலயம் உள்ளது. குந்தி தேவிக்காக ஏழு கடல்களும் திரண்டு வந்து தீர்த்தம் ஆன தலம் நல்லூர் ஆகும். உபமன்யு முனிவர் பால் வேண்டி அழுதார். பெருமான் அவருக்காகப் பாற்கடலையே அங்கு அழைத்துப் பாலூட்டும்படி செய்தார். மணிவாசகப் பெருமானுக்காகவும் ஒருமுறை பாற்கடலை அழைத்ததாகக் கூறுகின்றனர். அது, திருப்பாற்கடல் தீர்த்தம் எனும் பெயரில் சிதம்பரத்தில் உள்ளது.

**- பூசை.அருணாவசந்தன்**

## நீங்களும் வாழ்த்துங்களேன்!

**28.2.17 முதல் 13.3.17 வரை கீழ்க்காணும் இனிய வைபவத்தைக் கொண்டாட இருக்கும் வாசகர்களுக்கு சக்தி விகடனின் வாழ்த்துகள்! அவர்களின் வாழ்வில் சகல வளங்களும் சந்தோஷமும் பொங்கிப் பெருகிடும் வகையில், திருக்கடையூர் அபிராமி அம்மை சமேத அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பு பூஜை செய்து, பிரசாதம் சம்பந்தப்பட்ட வாசகர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.**

### பிறந்த நாள்

எஸ்.ஜெயஸ்ரீ, அருப்புக்கோட்டை
டி.சுஜன் ஆதித்யன், சேலம்
ஜீ.வி.சோமு, மதுரை; அபிஷேக், நாமக்கல்
எஸ்.ரம்யா, கும்மிடிப்பூண்டி; புஷ்பா, திருப்பூர்
கீதா நடராஜ், சங்ககிரி; அஞ்சனா, நாமக்கல்
இராதாகிருஷ்ணன், தாரமங்கலம்
எஸ்.முரளிதரன், திருச்சி; அகிலேஷ், சென்னை
என்.செல்வக்குமார், ஈரோடு; காளிஸ்ரீ, மதிரை
ஹெச்.ஸ்வேதா, சென்னை-44; ர.முருகன், மதுரை
எம்.ராஜேந்திரபிரசாத், சென்னை -63
டி.எஸ்.விந்திகா, சென்னை-26
சுதாராஜு, சென்னை-49; ராம்முகில், திருச்சி
செந்தில், சென்னை-22; பத்மப்பிரியா, ஊட்டி
சுமதி, ஆரல்வாய்மொழி; தீபா, புதுவை
தி.யாழினி, தேவகோட்டை; எஸ்.ஆத்யா, சென்னை
சத்யநாராயணன், சென்னை,
ஸ்ரீகாந்த், சென்னை; அர்ச்சிதா, சென்னை-88

**இனிய நாள்:** ------------------------------------------
(நீங்கள் சந்திக்கவுள்ள இனிய நாள் குறித்த விவரம்)

**பெயர்:** ------------------------------------------

**நட்சத்திரம்:**------------------------------------------

**முகவரி:** ------------------------------------------

\------------------------------------------------------

\------------------------------------------------------

\------------------------------------------------------

**இ.மெயில்:** ------------------------------------------

**தொலைபேசி:** ------------------------------------------

அடுத்து 14.3.17 முதல் 27.3.17 வரை வரையிலுமான பிறந்தநாள், திருமணநாள் மற்றும் சஷ்டியப்தபூர்த்தி கொண்டாட இருக்கும் வாசகர்கள் தங்களது பெயர், நட்சத்திரம், தேதி ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்பிவையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: 'சக்தி விகடன்' வாழ்த்துங்களேன் பகுதி, 757,அண்ணா சாலை, சென்னை-600 002.

அனுப்பவேண்டிய கடைசி தேதி: 23.3.17



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw


GRT
G.R.Thanga Maligai
JEWELLERS
Since 1964

# தெய்வீக வெள்ளி

## உங்களது பிரார்த்தனைகளுக்கு
## புனிதம் சேர்க்கும் உயர்தர ஜிஆர்டி வெள்ளி!

இல்லத்திற்கும் பூஜை அறைக்கும் மங்களம் சேர்ப்பதில் தெய்வீகத் தன்மை நிறைந்தது வெள்ளி. ஜிஆர்டியின் பிரத்தியேக வெள்ளி கலெக்ஷனை அலங்கரிக்கும் திருவிளக்குகள், பூஜை தட்டு, பூஜை மணி, ஊதுபத்தி ஸ்டாண்டு, சூடத் தட்டு மற்றும் இதர பூஜை பொருட்களில் இருந்து மனதிற்குப் பிடித்ததை தேர்ந்தெடுங்கள். உங்கள் இல்லத்தை இறையருள் மிளிரச் செய்யுங்கள்.



நேர்த்தியான கலைத்திறன்

பிரம்மாண்டமான சில்வர் கலெக்ஷன்

**சென்னை:** தி.நகர்: **உஸ்மான் ரோடு** Ph: 044-2434 5062; **கோட்ஸ் ரோடு** Ph: 044-2346 1515
அடையார் | அண்ணாநகர் | நங்கநல்லூர் | பழைய வண்ணாரப்பேட்டை | பெரம்பூர் | ஃபீனிக்ஸ் மார்க்கெட் சிட்டி
பூவிருந்தவல்லி | புரசைவாக்கம் | ரெட்ஹில்ஸ் | தாம்பரம் | வேளச்சேரி

**தமிழ்நாடு | புதுச்சேரி | ஆந்திர பிரதேஷ் | தெலுங்கானா | கர்நாடகா**

**துபாய் | மலேசியா | சிங்கப்பூர்** **Shop online at: www.grtjewels.com | mail@grtjewels.com**


https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

■ இ.கார்த்திகேயன்

திருநெல்வேலி – தூத்துக்குடி மார்க்கத்தில், சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது வல்லநாடு. இங்கிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ள 'அகரம்' கிராமத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீஅஞ்சேல் தசாவதாரப் பெருமாள் ஆலயமும், இந்த ஆலயத்தில் மாசி மாதம் வளர்பிறை துவாதசி திருநாளில் நடைபெறும் 'தசாவதார ஜயந்தி' வைபவமும் பிரசித்திப்பெற்றவை.

அற்புதமான இந்த வைபவத்துக்குக் காரணமாக, கோயிலின் தலபுராணம் சொல்லும் திருக்கதை சுவாரஸ்யமானது.

முற்காலத்தில், இந்த அகரம் கிராமத்தில் வசித்துவந்த அந்தணத் தம்பதிக்கு 'மித்ரசகா' என்ற மகன் பிறந்தான். மிகவும் சூட்டிகையாகத் திகழ்ந்த மித்ரசகா, வேதங்களோடு புராண, இதிகாச காவியங்களையும் கற்றுத்தேர்ந்தான்.

அந்தக் காலத்தில், அகரம் கிராமத்தில் தினமும் தெய்விக நாடகங்களும் பாகவதக் கச்சேரியும் நடைபெறும். ஒருமுறை இந்தக் கிராமத்துக்கு வந்த நாடகக்குழு ஒன்று, பல நாள்கள் தங்கியிருந்து ராமாயணக் கதையை நாடகமாக நடத்தியது. அந்த நாடகத்தை தினமும் தவறாமல் கண்டு ரசித்துவந்த மித்ரசகாவுக்கு, தானும் நாடகக்குழு ஒன்று அமைத்து ஸ்ரீமந் நாராயணனின் புகழைப் பரப்ப வேண்டும் என்று ஆசை பிறந்தது. எனவே, நண்பர்களை ஒன்றிணைத்து நாடகக்குழு ஒன்றை



# ஒரே சந்நிதியில்...



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw



உருவாக்கினான். நாடகத்துக்கு அவன் தேர்ந்தெடுத்தது தசாவதாரக் கதையை.

விரைவில் அகரம் கிராமத்தில் அரங்கேறிய நாடகத்தின் புகழ், எல்லை கடந்தும் பரவியது. இந்த நிலையில், விஷ்ணு பக்தரான காஷ்மீரத்து மன்னன் குங்குமாங்கதன், மித்ரசகாவின் பெருமையை அறிந்து, தனது நாட்டுக்கும் வந்து அந்த நாடகத்தை நடத்தும்படி கேட்டுக் கொண்டான். மன்னனின் அழைப்பை ஏற்ற மித்ரசகா, தன் குழுவினருடன் காஷ்மீரத்துக்குச் சென்று நாடகம் நடத்தினான். மித்ரசகாவின் தசாவதார வேடங்களில், சாட்சாத் பெருமாளே எழுந்தருள்வதாகக் கருதி போற்றினார்கள் காஷ்மீரத்து மக்கள். தினமும் நாடகத்தை ரசித்துவந்த மன்னனின் மகள் சந்திரமாலினி,



# 10 அவதாரங்கள்!

www.vikatan.com



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7lw

மித்ரசகாவிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தாள். தனது விருப்பத்தைத் தந்தையிடமும் பகிர்ந்து கொண்டாள். அதைக்கேட்டு மிகவும் அகமகிழ்ந்த மன்னன், அவளை மித்ரசகாவுக்குத் திருமணம் செய்துவைத்தான். அதன்பிறகு, தம்பதி சமேதராக இருவரும் சேர்ந்து பெருமாளின் தசாவதாரப் பெருமைகளை உலகெங்கும் பரப்பினர்.

காலங்கள் ஓடின. வயது முதிர்ந்ததும் மனைவியுடன் சொந்த ஊரான அகரத்துக்கே வந்து சேர்ந்தான் மித்ரசகா. அங்கே தினமும் தாமிரபரணியில் நீராடி, துதிப்பாடல்கள் பாடி பெருமாளைத் தரிசித்து வந்தனர் இருவரும். இந்நிலையில் ஒருநாள் மித்ரசகா பரமபதம் அடைந்தான். சந்திரமாலினி மிகவும் வருந்தினாள். கணவனின்றி வாழவே பிடிக்கவில்லை அவளுக்கு. ஒருநாள், நதிதீரத்துக்குச் சென்றவள் உயரமான ஒரு பாறையின் மீது ஏறி, அங்கிருந்து ஆற்றில் குதித்தாள். ஆற்று வெள்ளம், அவளை வெகு வேகமாக இழுத்துச் செல்ல ஆரம்பித்தது. இந்த நிலையில், ஓரிடத்தில் ஆற்றின் நடுவே திடுமென தோன்றிய முதியவர் ஒருவர், சந்திரமாலினியைத் தன் கைகளில் ஏந்திக் காப்பாற்றிக் கரைசேர்த்தார். மயக்கம் தெளிந்த சந்திரமாலினி, தன்னைக் காப்பற்றிய முதியவரிடம், "என்னை ஏன் காப்பாற்றினீர்கள்?" என்று கேட்டதுடன், தன் நிலையைச் சொல்லி அழுது புலம்பவும் செய்தாள். அப்போது, பெரியவர் மறைந்துபோக, ஸ்ரீமந் நாராயணனே அவளுக்குக் காட்சி தந்தார். "அஞ்சேல்... சந்திரமாலினி!" என்று அபயம் அளித்தவர், 'ஓம் நமோ பகவதே வாசுதேவாய' என்ற மந்திரத்தை அவளுக்கு உபதேசித்து, தினமும் அதை உச்சரித்து வரும்படி அருள்புரிந்து மறைந்தார்.

தெய்வ தரிசனத்தால் பூரித்துப்போனாள் சந்திரமாலினி. தாமிரபரணி நதிக்கரையில், பகவான் உபதேசம் செய்த பவித்ரமான அந்த இடத்தில் தியான ஆசிரமம் அமைத்து (இந்த இடத்தில்தான் திருக்கோயில் அமைந்துள்ளது), அவர் அருளிய மந்திரத்தை ஜபித்துவந்தாள். அத்துடன், மாதம்தோறும் வரும் ஏகாதசி விரதங்களையும் முறைப்படி கடைப்பிடித்து வந்தாள்.

நாள்கள் கழிந்தன. ஒரு மாசி மாதத்தின் வளர்பிறை துவாதசி திருநாளில், பிரம்மமுகூர்த்த வேளையில் நதியில் நீராடிவிட்டு வந்த சந்திரமாலினி ஏகாதசி விரதத்தைப் பூர்த்தி செய்து, மந்திரம் ஜபிக்க ஆரம்பித்தாள். அப்போது நிகழ்ந்தது அந்த அற்புதம்! வானில் சூரியகோடிப்




www.vikatan.com
https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7lw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

## நினைத்தது நிறைவேறும்... கல்யாணம் கைகூடும்!

புதன் மற்றும் சனிக்கிழமைகளில் இந்தக் கோயிலுக்குச் சென்று மூலவருக்குச் சிறப்பு அபிஷேகம் செய்து, வெள்ளை வஸ்திரமும், துளசி மாலையும் சாத்தி, நெய் தீபம் ஏற்றி வழிபட்டால் நினைத்தது நிறைவேறும்.

உற்சவர் கல்யாண சீனி வாசனுக்கும் தேவிகளுக்கும் கல்யாண மாலை போல ரோஜாப் பூ மாலை சாற்றி கல்கண்டு நெய்வேத்யம் செய்து வழிபட்டால் திருமணத்தடை நீங்குமாம். இடது மூலையிலுள்ள வேணுகோபாலனுக்கும் தேவி களுக்கும் துளசி மாலை சாற்றி, நெய் தீபமேற்றி பால் பாயாசம் வைத்து வழிபட்டால் குழந்தை பாக்கியம் கிட்டுமாம். குடும்பத் தில் மறைந்த முன்னோர்களுக்கு திதி, தர்ப்பணம் என்ற பித்ரு பூஜையைச் சரியாக செய்யாமல் விட்டவர்கள் பித்ருகளின் சாபத்துக்கு ஆளாகி கடன் பிரச்னை, திருமணத் தடை, குழந்தை தாமதம், குழந்தை பேரின்மை ஆகிய பல சோதனைகளை எதிர்கொள்கின்றனர். பித்ருதோஷம் போக்க, சித்திரை, தை, ஆடி, ஐப்பசி, தை மாத பிறப்பன்றும் அல்லது எல்லா அமாவாசை நாளன்றும் இறந்தவர்களின் திதி நாள்களிலும் இங்கு வந்து தட்சிண கங்கையான தசாவதாரத் தீர்த்தக்கட்டத்தில் நீராடி, நதிக்கரையில் பித்ருதோச பூஜைகளைச் செய்துவிட்டு தசாவதாரப் பெருமாளை தரிசித்துச் சென்றால் பித்ரு தோஷம் நீங்கி பித்ருகளின் ஆசி பெற்று சுபம் உண்டாகும் என்கின்றனர், பலன் பெற்றவர்கள்.



துர்மரணம் அடைந்தவர்களுக் கும் சாந்தி திதி பூஜை செய்யலாம். தசாவதார மூர்த்திகளுக்கு எண்ணெய்க்காப்பு சாற்றி, மஞ்சள் பொடி திருமஞ்சனம் செய்து, நீள வெள்ளை வஸ்திரம் சாற்றி மல்லி அல்லது முல்லைப்பூ மாலை அணிவித்து சர்க்கரைப் பொங்கல் நைவேத்யம் செய்து வழிபடலாம்.





www.vikatan.com
https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw





பிரகாசத்துடன் ஓர் ஒளி தோன்ற, மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனர், பரசுராமர், ராமர், பலராமர், கிருஷ்ணர், கல்கி என பத்து அவதாரங்களும் ஒன்றிணைந்த கோலத்தில் அவளுக்குக் காட்சி தந்தார் பகவான். மேலும் அவளிடம், "வேண்டும் வரம் என்ன?" என்றும் வினவினார்.

"தாமிரபரணியில், இந்த தசாவதார தீர்த்தக் கட்டத்தில் நீராடி, தங்களின் பத்து அவதாரங்களையும் வழிபடுவோருக்கு பித்ரு சாபம் முதற்கொண்டு சகலவிதமான சாபங்களில் இருந்தும் விமோசனம் அளிக்க வேண்டும்" என்று வேண்டினாள் சந்திரமாலினி. "அப்படியே ஆகட்டும்" என்று அருளிய பெருமாள், அவளுக்கும் வைகுந்தப் பேறு கிடைக்க வரம் தந்து மறைந்தார். அதன்படி, அதே மாசி துவாதசி திருநாளில் சந்திரமாலினி முக்தி பெற்றாள்.

தாமிரபரணி நதி தீரத்தில், சந்திரமாலினி தசாவதார தரிசனம் பெற்ற இடம், 'தசாவதார தீர்த்தக்கட்டம்' என்ற பெயரில் விளங்குகிறது. மேலும், பிரம்மன் நீராடியதால் 'பிரம்ம தீர்த்தம்'; சிவனார் எழுந்தருளிய தீர்த்தமாதலால் 'சம்பு தீர்த்தம்' ஆகிய பெயர்களும் இந்த தீர்த்தக் கட்டத்துக்கு உண்டு. இதுகுறித்த மகிமையை வேதவியாசர் அருளிய தாமிரபரணி மகாத்மியம் (60-வது அத்தியாயம்) அழகுற விளக்குகிறது.

தாமிரபரணியின் கரையில் அழகுற அமைந்திருக்கிறது ஆலயம். மூலவர், அஞ்சேல் தசாவதாரப் பெருமாளாகக் காட்சி அளிக்கிறார். சந்திரமாலினிக்கு 'அஞ்சேல்' என அபயம் அளித்ததால் இப்படியொரு திருநாமம் ஸ்வாமிக்கு. பெருமாள், முதலில் தேவியர் இல்லாமல் காட்சியளித்து, அதன் பிறகே தசாவதாரக் கோலங்களைக் காட்டி அருளினார் என்பதால், இத்தலத்தில் தேவியருடன் இல்லாமல் தனியாகவே காட்சி தருகிறார். ஸ்தல விருட்சம் அரசமரம். உற்சவர் ஸ்ரீதேவி-பூதேவியுடன் கல்யாண ஸ்ரீநிவாஸராக அருள்கிறார்.

கோயிலின் வலது மூலையில் சீதா, லட்சுமணன், ஆஞ்சநேயருடன் பட்டாபிஷேகக் கோலத்தில் அருளும் ஸ்ரீராமனும், இடது மூலையில் ருக்மிணி, சத்யபாமாவுடன் ஸ்ரீவேணுகோபாலனும் அருள்கிறார்கள்; விஸ்வக்சேனரும் அருகில் உள்ளார்.

தனிச்சந்நிதியில் திகழும் - ஒரே கல்லில் வடிக்கப்பட்ட தசாவதார மூர்த்தியர் தரிசனம், இந்தக் கோயிலின் சிறப்பம்சம். இவர்களில், மச்ச அவதார மூர்த்தி-கேது தோஷம்; கூர்ம மூர்த்தி-சனிதோஷம்; வராக மூர்த்தி-ராகு தோஷம்; நரசிம்மர் மற்றும் பலராமர் - குரு தோஷம்; ஸ்ரீராமன் - சூரியனால் ஏற்படும் பாதிப்புகள்; ஸ்ரீகிருஷ்ணர் - சந்திரனால் ஏற்படும் தோஷங்கள்; கல்கி அவதார மூர்த்தி - புதன் தோஷம்... இந்த அடிப்படையில் ஒவ்வொரு மூர்த்தியும் ஒரு கிரக தோஷத்தைப் போக்கும் தெய்வங்களாகத் திகழ்கிறார்கள் என்பது பக்தர்களின் நம்பிக்கை. கல்கி அவதாரம் எடுக்குமுன்பே, சந்திரமாலினிக்கு அந்த அவதாரத்தைக் காட்டி அருளிய பெருமையும் இந்தத் தலத்துக்கு உண்டு.

சந்திரமாலினிக்குத் தசாவதார கோலம் காட்டியருளிய திருநாளே 'தசாவதார ஜயந்தி' வைபவமாகக் கொண்டாடப்படுகிறது. மாசி மாதம், வளர்பிறை துவாதசி திருநாளன்று இந்த வைபவம் நடைபெறுகிறது. அன்று மூலவருக்கும், உற்சவருக்கும் 21 வகை திரவியங்களால் சிறப்புத் திருமஞ்சனம் நடைபெறும். மாலையில் கருடசேவை நடைபெறும். இந்த வைபவத்தில் கலந்துகொண்டு, பெருமாளைத் தரிசித்து வழிபட்டு வந்தால், நம் இல்லத்தில் இன்னல்கள் யாவும் நீங்கும்; திருவருள் கைகூடும்.

படங்கள்: **எல்.ராஜேந்திரன்**


www.vikatan.com
https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

# சக்தி விகடன் சந்தாதாரர் ஆகுங்கள்!

ஆன்மிகம் மணக்கும் ஆனந்த ஆலயம்

## சந்தா தொடர்பான விவரங்களுக்கு: 044 - 6680 2901




| சந்தா விவரம் | இந்தியா | |
|---|---|---|
| | தமிழ்நாடு | மற்ற மாநிலங்களில் |
| 6 மாதம் | ரூ.325 | ரூ.350 |
| 1 வருடம் | ரூ.650 | ரூ.700 |

சந்தா சேர விரும்புபவர்கள் இங்கே உள்ள கூப்பனை தெளிவாக நிரப்பி எங்களுக்கு அனுப்பவும்.

**சந்தா செலுத்தும் காலம்**

தேவையை ✓ செய்க

☐ ஆறு மாதங்கள்

☐ ஒரு வருடம்

**அலுவலக உபயோகத்துக்கு மட்டும்**

தொகை: ---------------------

டி.டி.எண்: ---------------------

தேதி: ---------------------

பெயர் : .................................................... வயது:..............

முழு முகவரி : ....................................................

....................................................

மாவட்டம்: ....................................................

PIN: ☐☐☐☐☐☐ தொலைபேசி : வீடு: ........................ மொபைல்: ..............................

EMAIL ID: ....................................................

சந்தா தொகையை 'AV PUBLISHERS PVT LTD' என்ற பெயரில் டி.டி. or காசோலை எடுத்து அனுப்ப வேண்டிய முகவரி: சந்தா பிரிவு, சக்தி விகடன், 757, அண்ணா சாலை, சென்னை - 600 002.

**சந்தா தொடர்பான குறைகளைப் பதிவு செய்ய - 044 6607 6407**



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw





https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

# சுவாதியில் சுபகாரியங்கள் செய்யலாமா?

**? ‘ஒவ்வொரு நாளும் பூஜைக்குப் பயன்படுத்த, அன்று மலர்ந்த மலர்களையே பயன்படுத்த வேண்டும்’ என்று புத்தகம் ஒன்றில் படித்தேன். பெரும்பாலும் இதற்கு சாத்தியம் இல்லாத இன்றைய சூழலில், பூக்கள் கிடைக்கவில்லை என்பதற்காக, பூஜையைத் தவிர்க்க முடியுமா? தாங்கள்தான் வழிகாட்ட வேண்டும்.**

– *சுந்தரி திருஞானம்,* மதுரை-2

! அன்றாடம் பூஜையில் மணம் கமழும் பூக்களைப் பயன்படுத்தலாம். மல்லிகை, செண்பகம், தாமரை, செம்பருத்தி, அரளி, தாழம்பூ, நந்தியாவட்டை, பாரிஜாதம், கோளாம்பி, சங்கு புஷ்பம், தும்பை ஆகிய பூக்களாலும், துளசி, வில்வம், பிச்சகம், மருக்கொழுந்து போன்றவற்றையும் கொண்டு பூஜிக்கலாம்.

முகர்ந்து மகிழும் பொருள்களில் ஒன்று புஷ்பம். இறைவன் முகர்ந்து மகிழ்வதற்காக அவருக்குப் புஷ்பத்தைச் சமர்ப்பிக்கிறோம். பூக்கள் கிடைக்காத சூழலில், குங்குமம் மற்றும் அட்சதை ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

தினசரி பூஜைக்கு, அன்று பறித்த பூக்களைப் பயன்படுத்துவது சிறப்பு. சேமித்து வைக்கப்படும் பூக்கள் பூஜைக்குச் சிறப்பானவை அல்ல. ஓர் இரவைத் தாண்டிவிட்டால், அவற்றின் தரம் குறைந்துவிடும்.



குளிர்சாதனப் பெட்டி, மலர்ச்சி குறையாத வகையில் பூக்களைப் பாதுகாக்கும் என்பது உண்மைதான். ஆனால், காலம் கடந்த தன்மையைக் குளிர்சாதனப் பெட்டியால் மாற்றிவிட முடியாது. காலம் முக்கியமானது.

நெருக்கடியான சூழலில்... குளிர்சாதனப் பெட்டியில் பூக்களை வைத்திருந்து பயன் படுத்துங்கள். பூஜைதான் முக்கியம். அன்றலர்ந்த மலர்கள் இல்லையே என்பதற்காக பூஜையைத் தவிர்க்கக்கூடாது.

எனினும், தங்களது சிந்தனைக்கு ஒரு வார்த்தை... தினமும் பூக்களைப் பறித்து பூஜைக்குப் பயன்படுத்தும்படியான சூழல் இருந்தும் அப்படிச் செய்யாமல் இருப்பது தவறு.

இன்னொரு விஷயம்... பல நாள்கள் வைத்திருந்து பயன்படுத்தும் சிறப்பு பெற்ற பூக்களும் உண்டு. தாமரையை மொட்டாகச் சேமித்து வைத்து இரண்டு மூன்று தினங்கள் வரை பயன்படுத்தலாம். துளசி, வில்வம் போன்றவற்றை பல நாள்கள் வைத்திருந்து பயன்படுத்தலாம். இவை இரண்டும் காய்ந்து போனாலும் பயன்படுத்தக் கூடியவை.

**? நவகிரகத்தை வாரத்தின் எல்லா நாள்களிலும் வலம் வந்து வழிபடலாமா?**

– **வி.வேல்முருகன்,** மானாமதுரை

! சாமி கும்பிட கிழமை கிடையாது. நமக்கு சௌகரியப்படும்போதெல்லாம் வழிபடலாம். வேறு வேலை



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

இல்லை; காலையில் இருந்து மாலை வரை கோயிலிலேயே இருக்க முடியும் என்றால்... நாள் முழுக்க நமஸ்காரம் பண்ணுங்கள். காலை வேளைகளில் பிரதட்சணம் பண்ணுங்கள். பகவானுக்கு சண்டே மற்றும் கவர்ன்மென்ட் ஹாலிடேஸ் எல்லாம் கிடையாது. அதனால் நாள், கிழமை எதுவும் பார்க்காதீர்கள். எப்போது வேண்டுமானாலும் ஆராதனம் செய்யலாம்.

## ? சுப காரியங்களின்போது மாவிலைத் தோரணம் கட்டுவது ஏன்?

– **க.சங்கரன்,** சென்னை-88

! தோரணத்தில் மாவிலை மட்டுமே இடம் பெறும் என்று சொல்ல முடியாது. தென்னங்கீற்று கொண்டும் தோரணம் கட்டுவார்கள். அதன் இடையிடையே மாவிலையைச் சேர்ப்பார்கள். வசந்த காலத்தில் மாம்பூ பூத்துக்குலுங்கும். அதன் இளந்தளிர், பூக்கள், அதிலிருந்து பெருகும் மது ஆகியவற்றை பறவைகள் உண்டு மகிழும். குறிப்பாக, குயிலினம் அதை உட்கொண்டு தனது குரல்வளத்தைப் பெருக்கிக்கொள்ளும் என்று கவிகள் கூறுவார்கள்.



அதன் நறுமணம், சுற்றுச்சூழலை ரம்மியமாக்கும். இறைவனைக் குடியிருத்தும் கும்பத்தில் மாவிலைக் கொத்து இருக்க வேண்டும். அதற்கு, மரங்களின் அரசன் என்ற பெயர் உண்டு (விருக்ஷ ராஜஸமுத் பூதசாகாயா:...). வேள்வியின்போது, நெய்யை அக்னியில் சேர்க்க மாவிலையைப் பயன்படுத்துவார்கள். மந்திரத்தில், புனிதமான நீரை மாவிலையால் தெளிப்பதுண்டு. கும்பாபிஷேகத்தின்போதும், பந்தல்கால் நாட்டும் விழாவிலும்... கோபுரக் கலசம் மற்றும் பந்தல்காலில் மாவிலைக் கொத்தைக் கட்டுவார்கள். திருமணத்தில் நுகத்தடியிலும் மாவிலை இருக்கும். பெண்களின் சௌளத்தில் மாவிலைக் கொத்தைப் பயன்படுத்துவார்கள்.

பண்டைய நாளில் பல் துலக்குவதற்கு மாவிலை பயன்படுத்தப்பட்டது. பெரிய அண்டாவில் நீரைப்பிடித்து, வெயிலில் சுட வைத்து, அதில் மாவிலையைக் கிள்ளிப்போட்டு, அந்த வெந்நீரில், பிணி அகன்ற ரோகிகள் நீராட வேண்டும் என்கிறது ஆயுர்வேதம்.

வாடிப்போன மாவிலைகள் பயிரினங்களுக்கு உரமாக மாறுவதுண்டு. வனஸ்பதியில் சிறந்தது மா. முக்கனிகளில் ஒன்று மாம்பழம். ஜீவராசிகளுக்கு இருப்பிடம் அளித்து உதவும்; வெப்பத்தைத் தாங்கி நமக்கு நிழல் தந்து உதவும்; இயற்கை வளமான மாவிலை, மனித வாழ்க்கைக்குப் பயன்படும் பொருளாகத் திகழ்கிறது.

இத்தனையும் தெரிந்த பிறகும், பிளாஸ்டிக் மாவிலைத் தோரணம் கட்டும் பண்பாடு வளர்வதுதான் அதிசயமாக இருக்கிறது.

## ? மந்திரங்களை மனதுக்குள் சொல்ல வேண்டுமா அல்லது சத்தமாக ஜபிக்க வேண்டுமா? அதேபோல், குறிப்பிட்ட மந்திரங்களால் பகைவரை அழிக்கலாம் என்கிறார்களே... அது உண்மையா?

– **சு.செல்லத்துரை,** சென்னை-44

! மந்திரங்களை மனதுக்குள்ளும் சொல்லலாம். உதடுகள் மட்டும் அசைய... பிறர் காதில் விழாதபடியும் சொல்லலாம் அல்லது மற்றவர்கள் காதில் விழும்படி உரக்கவும் சொல்லலாம்.

வேதம், மந்திரங்களின் தரம் மற்றும் அவற்றின் பயன் ஆகியவற்றையொட்டி வரையறுக்கப்பட்ட பாகுபாடு உச்சரிப்பில் உண்டு. 'ரிக்குகளை உரக்கச் சொல்; யஜுஸை உதட்டு அசைவுடன் பிறர் காதில் விழாமல் சொல்; சாமத்தைப் பலர் காதில் விழும்படி சொல்!' என்ற பாகுபாடு வேதத்தில் உண்டு.

உரக்கச் சொல்லும்போது, மனமும் புலன்களும் ஈடுபாட்டைத் தக்கவைக்க முடியாமல் போக வாய்ப்பு உண்டு. மனதில் மட்டுமே அசைபோடும்போது மனம் வேறொன்றை நினைக்காது; ஈடுபாடு சிதறாது. நடைமுறையில் எப்படி இருந்தாலும், மந்திரங்களை மனதில் அசைபோடுவதே, மந்திரங்களின் முழுப் பயனுக்கும் உத்தரவாதம் தருகிறது. அதையே பின்பற்றுங்கள்; வெற்றி நிச்சயம்.

மந்திர உச்சாடனத்தின்போது கேட்பவர்களை



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

யும் ஈடுபடுத்த வேண்டுமெனில், உரக்கச் சொல்வதே சிறப்பு. இதனால் கேட்பவர்களும் பயன்பெறுவர்.

தாங்கள் கேட்ட அடுத்தகேள்விக்கு வருகிறேன்... மந்திரங்கள் தீமை செய்யாது. மந்திரத்தை மனதில் அசைபோடுபவனுக்கு, மந்திரம் பாதுகாப்புக் கவசம். நம்மைப் பாதுகாக்கும் மந்திரத்தைத் தீமை அளிப்பதாக எப்படிக் கூற இயலும்? வேலி, பயிரை விழுங்காது. 'தீமைகளை அகற்ற மந்திரம் சொல்' என்கிறது தர்மசாஸ்திரம்.

மனம் சுத்தமாக இருப்பதற்காகச் செய்யப்படும் வேண்டுகோள் எப்படித் தீமையாகும்? நன்மைகளை நல்ல முறையில் நிறைவேற்ற உள்ளத்தில் தெளிவு தேவை. அதை அளிப்பதே மந்திரம்.

கண்ணனைப் பகைவனாக நினைத்தான் கம்சன். அவனது நினைவே கம்சனைத் திக்கு முக்காட வைத்தது! 'ஹயக்ரீவன் என்ற அரக்கன் விஜய யாத்திரைக்குக் கிளம்பி விட்டான்' என்ற தகவல் வந்ததும், அமராவதி நகரத்தின் கோட்டை வாசலைச் சாத்தித் தாழிட்டு உள்ளே ஒளிந்து கொண்டான் இந்திரன். அன்றாட அலுவல்களை கவனிக்க அவனது மனம் இடம்கொடுக்கவில்லை என்பது புராணத் தகவல். குரங்கு உருவம் ஏதும் பவனி வருவதைப் பார்த்தால், 'அது வாலியாக இருக்குமோ' என்று எண்ணி சுக்ரீவன் நடுங்குவான் எனும் தகவலும் உண்டு.

பயத்தில் இருந்து மனம் விடுபட மந்திரமே அருமருந்து. மருந்து தீங்கிழைக்குமா?

**? என் பெண்ணுக்கு சுவாதி நட்சத்திரத்தன்று திருமணத்துக்கு நாள் குறித்திருக்கிறோம்.**



**சுவாதியில் திருமணம் நடத்தலாமா?**

**- மேகலா கண்ணன்,** கூந்தலூர்

**!** சுப காரியங்களைத் துவங்கும் நேரம் சுப வேளையாக, அதாவது நல்ல நேரமாக இருப்பது அவசியம். அந்த சுப வேளை, நமது எண்ணம் சிறப்பாக நிறைவேற ஒத்துழைக்கும்.

வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்தும் இணைந்து சுப வேளையை முடிவு செய்யும். இதில் நட்சத்திரத்தின் பங்கும் சிறப்பானது. நாம் செய்யப்போகும் காரியத்துக்கு ஏற்ற, அதற்கு இணையான இயல்புகொண்ட நட்சத்திரத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். வேதத்தின்மூலம் நட்சத்திரங்களின் இயல்புகளை அறியலாம்.

திருமணம், ஆண்-பெண் இணைதல், படிப்பு, வேலை, வியாபாரம், புதுமனை புகுதல், எதிரியைச் சந்தித்தல், பயணம், சண்டை-சச்சரவு, விவாதம், போர், விளையாட்டு போன்ற காரியங்களைத் துவங்கும்போது, நமது மனதுக்கு உகந்த நிலையில் செயல்படும் நட்சத்திரங்களை ஏற்கலாம்; அதற்குக் குந்தகமான நட்சத்திரங்களைத் தவிர்த்துவிட வேண்டும். நட்சத்திரங்களின் இயல்புகளை வரையறுக்கும் நூல்கள் ஏராளம் இருக்கின்றன.

உதாரணமாக... வரனிடம் பெண்ணை ஒப்படைக்கும் வேளையில், சுவாதி நட்சத்திரத்தின் சேர்க்கை இருந்தால், அவளது வருங்காலம் செழிக்கும். எனவே, சுவாதி நட்சத்திரத்தன்று நீங்கள் தாராளமாக உங்கள் பெண்ணின் திருமணத்தை நடத்தலாம். அதேபோல் போர்த் தளவாடங்கள் செய்யத் துவங்கும் வேளையில், விசாக நட்சத்திரம் இணைவது சிறப்பு. இப்படி ஒவ்வொரு நட்சத்திரத்தையும், அதன் சேர்க்கையால் சிறப்படையும் காரியங்களையும் அறிந்து செயல் படுவது நல்லது.

ஜோதிடத்தில் பலன் சொல்லும் பகுதி, நம்முடைய முன்னோர்களால் படைக்கப்பட்டது. சுப வேளையை வரையறுக்கும் பகுதி, இயற்கையின் அன்பளிப்பு. அதை, வான சாஸ்திரம் என்று பாகுபடுத்திச் சொல்லலாம். வேளையை வரையறுக்கும் பகுதியை முகூர்த்த சாஸ்திரம் என்றும் சொல்வதுண்டு.

நாம் ஈடுபடும் செயல் வெற்றி பெற, நமது தகுதியும் முக்கியம். எனினும், அதன் நிறைவுக்குக் காலத்தின் ஒத்துழைப்பும் அவசியம்.

**- பதில்கள் தொடரும்...**



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

# சித்திர ராமாயணம்

▪ பி.ஸ்ரீ.

## புதிய புத்திர ஸ்வீகாரம்

ராமனின் தாயைப் பரதன், குகனுக்கு அறிமுகப்படுத்துவது என்றால் சாதாரண வாய்ப் பேச்சோ, பாஷையோ, வாக்கு வன்மையோ, போதுமா? தன் இதயத்துடிப்பை, உள்ளுக்குள்ளே கிடந்த ஆத்திரத்தை, பொங்கிய உணர்ச்சி வெள்ளத்தை அப்படியே வெளியிட்டு விட்டானல்லவா?

அந்தப் பரதனையும், குகனையும், ராமனின் தாயையும் அப்படியே கவிதைப் படமாய்ப் பார்த்தோம். ஆனால், பரதனுடைய உணர்ச்சி களைக் கவனிக்கக் குகனுக்கு அவகாசம் ஏது?

'ராமனைப் பெற்ற தாய்' என்று தெரிந்ததும், தன் உணர்ச்சிக்குள்ளே தன்னை இழந்துவிடும் குகன் சாஷ்டாங்கமாய்க் கோசலையின் காலில் விழுகிறான். அழுகிறான். ஒரு குழந்தையைப் போல் அழுகையைத் தவிர வேறு பாஷை தெரியவில்லை. "எனது துன்பத்தில் இவ்வளவு அனுதாபம் காட்டுகிறானே, பார்த்தால் காட்டு மனிதன்; இவன் யாரோ?" என்று உடனே கேட்கிறாள் கோசலை. உடனே பதில் வருகிறது பரதன் வாயிலிருந்து.

'இன் துணைவன் இராகவனுக்(கு)' என்று பதில் சொல்லுகிறான். 'ராமனுக்கு இனிய துணைவன்; கோசலைக்கு அருமைப் புதல்வன்' என்பதை வெளிப்படையாகச் சொல்லவில்லை. "ராமனுக்குத் தம்பியாகிய இவன் லட்சுமணனுக்கும் சத்துருக்னனுக்கும் எனக்கும் தமையன்" என்று மாத்திரம் சொல்லுகிறான்.

இவ்வுறவினால் கிடைத்துவிட்ட ராஜ குலத்தை யும், அக்குலப் பொருத்தம் குகனுக்கு உண்டு... அது, குகனுடைய தோற்றத்திலேயே காணக்கிடக்கிறது என்பதையும், 'இவன் யார்?' என்ற வினாவுக்கு நேர் விடையான பெயரையும் சொல்கிறான் பரதன்:

> 'குன்றனைய திருநெடுந்தோள் -
> குகன் என்பான் இந்நின்ற குரிசில்'

என்று தெரிவித்துத் தன் பேச்சை முடிக்கிறான்.

'நம்மைப்போன்ற அரசன், நம்முடைய குலத்தோடு ஐக்கியப்பட்ட அரசன்' என்று அறிமுகப்படுத்திய பரதனின் குணாதிசயத்தை என்னென்பது? ராமன் குகனோடு கொண்டாடிய சகோதர உறவு இப்போது பரதனால் அங்கீகரிக்கப் படுகிறது.

## ஸ்வீகாரம்

குகன், கோசலை காலில் விழுந்து அழுததும், பரதனுக்கும் கண்கள் கலங்கிவிட்டன. சத்துருக்னனும் கண்ணைத் துடைத்துக் கொண் டான். அம்மூவரையும் அந்நிலையில் பார்த்ததும் மூவரும் தன் மைந்தர்கள் என்றே தெரிந்துவிடுகிறது கோசலைக்கு.

"என்ன பாக்கியம் பெற்றேன்! அங்கே, காட்டுக்குள்ளே இருமைந்தர்; இங்கே மும்மைந்தர்" என்று தீர்மானிக்கிறாள். அப்படியே ஆசியும் கூறுகிறாள்:

> 'நீவிர் ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை
> நெடுங்காலம் அளித்திர்!' என்று.

அம்மூவரின் கண்களும் கலங்கியது கண்டு இதயத்தெளிவும் ஆறுதலும் பெற்ற தாய், "என் அருமைப் பிள்ளைகளே! நீங்கள் துயரத்தால் ஏன் வருந்த வேண்டும்?" என்றே கேட்க ஆரம்பித்து விட்டாள். ராம லட்சுமணர் நாடு நீங்கிக் காடு சேர்ந்ததும், தன் மக்கள் நால்வரில் இருவரை இழக்கும்படி வந்ததே கேடு என்று பரிதவித்தவள்தான். இப்போது "அது கேடன்று; நன்மைதான்!" என்று சொல்லத் தோன்றுகிறது.

ஆம், நால்வரை ஐவராக்கிய நன்மையாகி விட்டதாம். இருவர் காடு சென்றதும், அவர்கள் குகனைச் சகோதரனாகப் பெற்ற தனால்,



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

கோசலைக்கு ஐந்து பிள்ளைகள்! "இவனோடு சேர்ந்து நீங்கள் ஐவரும் ஒருவராகவே விசாலமான கோசல நாட்டை அரசாள வேண்டும்" என்று ஆசீர்வதிக்கிறாள்.

பிறகு குகன், கோசலையின் பக்கத்திலே நின்ற சுமித்திரையை நோக்குகிறான். ஒரு பெண்ணோ, ராணியோ நிற்பது போலவா தோன்றுகிறது? அறமே ஓர் உருவம்கொண்டு அப்படி நிற்கிறது என்று தோன்றுகிறது, கவிஞனுக்கு.

குகனுக்கோ, கோடையில் மாலை வேளையிலே நீர் நிறைந்த ஒரு பெரிய குளக்கரையை அடைந்தது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது. ஆம், அன்பு நிறைந்து ததும்பும் தடாகம் அந்த அறப்பெருஞ் செல்வி, இளையராணி. தென்றல் கொணர்ந்து தெளிக்கும் திவலைகள் போல் அன்புத் திவலைகள் குகனுள்ளத்தைக் குளிர்விக் கின்றன.

## இளையராணியை அறிமுகப்படுத்துதல்

குகன், பரதனை நோக்கி, "ஐயா! இவர் யார்?" என்று கேட்கிறான். இந்தக் கேள்வியையும் பரதனது விடையையும் இதோ கேளுங்கள் சுமித்திரை நிற்கும் அந்த நிலையையும் பாருங்கள்:

'அறந்தானே என்கின்ற
அயல்நின்றாள் தனைநோக்கி,
'ஐய! அன்பின்
நிறைந்தாளை உரை'என்ன,
'நெறிதிறம்பாத் தன்மெய்யை
நிற்ப தாக்கி
இறந்தாந்தன் இளந்தேவி,
யாவர்க்கும் தொழுகுலமாம்
இராமன் பின்பு
பிறந்தானும் உளன்என்னப்
பிரியாதான் தனைப்பயந்த
பெரியாள்' என்றான்.


அறமே உருவெடுத்து வந்து நிற்பது போல் கோசலாதேவிக்கு அருகே நின்ற சுமித்திராதேவியைக் குகன் நோக்கி, "பரதனே! அன்பு நிறைந்த இந்த அம்மாள் யார்? தெரியவில்லையே, இன்னாரென்று சொல்ல வேணும்" என்று கேட்டதும், பரதன் பதில் சொல்லத் தொடங்கினான். சக்கரவர்த்தியின் முதல்தேவி என்று கோசலாதேவியைத் தெரிவித்தவன், உண்மைக்காக உயிரைக் கொடுத்த தியாகமூர்த்தியின் இளந்தேவி என்று சுமித்திரையை அறிமுகப்படுத்துகிறான்.

தசரதர் சக்கரவர்த்தியாகவும் பெரியவர்; மனிதராகவும் பெரியவர். சிற்றரசர்கள் தலைவாசலிலே வந்து காத்து நிற்கும் அவ்வளவு பெரிய சக்கரவர்த்தி, தனி மனிதராகப் பார்த்தால் இன்னும் பெரியவர்; சத்தியத்தைவிட்டு ஓர் அங்குலம் விலகத்தெரியாமல், அவ்வளவு நெருங்கித் தன் பிறவியோடு பிறவியாக ஒட்டிப்போன அந்தச் சத்தியம் இவ்வுலகில் நிலை நிற்பதற்காகத்தும் உயிரையே கொடுத்துவிட்டாராம்.

அத்தகைய சக்கரவர்த்திக்குத் தகுந்த பட்ட மகிஷி கோசலாதேவி என்றால், இத்தகைய தியாக வீரருக்கு இசைந்த தருமபத்தினி சுமித்திராதேவி என்கிறான் பரதன்.

'வேந்தர் வைகும் முற்றத்தான்' அதாவது - 'சக்கரவர்த்தியாக வாழ்ந்தவனின் முதல்தேவி'







https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

என்று கோசலையைக் குறிப்பிட்டவன், 'இறந்தாந்தன் இளந்தேவி' என்று சுமித்திரையைக் குறிப்பிடுகிறான். பரதனுடைய உண்மை நிறைந்த இதயம் பேசுகிறது எல்லையற்ற சோகத்துடன் இல்லையா?

பிறகு, புத்திர சம்பத்திலும் சுமித்திராதேவி, கோசலாதேவிக்குக் குறைந்தவள் இல்லை என்கிறான். ராமனைப் பெற்றுத் துறந்த பெருமை கோசலைக்கு உண்டென்றால், இளையவனைப் பெற்றுத் துறந்த பெருமை இளந்தேவிக்கு உண்டல்லவா? இப்பெருமைதான் கொஞ்சமோ? காட்டிலும் போய் ராமனுக்குப் பணி செய்து கொண்டிருக்கும் லட்சுமணனை நினைத்துப் பார்த்ததும், உணர்ச்சிப் பொங்குகிறது கங்கை வெள்ளம் போல.'அவன் ஒருவன்தானே 'ராமனின் தம்பி' என்ற பெயருக்கு உரியவன்? லட்சுமணன் இல்லையென்றால், ராமனுக்குத் தம்பியாக யாரும் பிறக்கவில்லை என்றுதானே கருதவேண்டியிருக்கும்?' – இது பரதன் நினைப்பு.

தானும் சத்ருக்னனும் தம்பியாக இல்லையாம்; ராமனுக்குப் பயன்படாததால், பணிசெய்யாததால். ஆகவே, சுமத்திராதேவியை. "ராமனுக்குப் பின்னே பிறந்த தம்பியும் ஒருவன் உண்டு என்பதை மெய்ப்பித்துப் பிரியாது பணிசெய்து கொண்டிருக்கும் லட்சுமணனைப் பெற்றுத் துறந்த பெரியாள் என்று அறிமுகப்படுத்துகிறான் குகனுக்கு.



## கைகேயி நிலை

இந்தச் செய்யுள், சுமித்திரையைக் கோசலையின் பக்கத்தில் நின்றதாகக் குறிப்பிடுவதால், கைகேயி சிறிது தூரத்தில் விலகி நிற்பதாய் ஊகித்துக்கொள்ள வேண்டும். இது அந்த இதயங்களுக்கு இடையே உள்ள தூரத்தை நினைப்பூட்டுகிறது. ராமன் தாய்க்கு அருகில் நிற்கவும் கூசுகிறது, பரதன் தாயின் உள்ளம். கைகேயிக்குப் பச்சாதாபம் ஏற்பட்டிருக்கிறதென்று கருதுவதும் தவறாகாது.

ராமனின் தாயையும், லட்சுமணனின் தாயையும் குகனுக்கு அறிமுகப்படுத்தியபின், பரதன் தன் தாயையும் அறிமுகப்படுத்துகிறான். இவன் அறிமுகப்படுத்தும் முறையே கைகேயியின் பச்சாதாபத்தைப் பூர்த்திசெய்து அவளை முற்றும் திருத்திவிடுகிறது என்று ஊகிக்கலாம்.

பரதன் அறிமுகப்படுத்துவதற்கு முன்பு கவிக்கூற்றே மிகவும் கடுமையாய் வந்து விழுகிறது. "சுமித்திராதேவியைச் சொன்ன வாயால் கைகேயி தேவியையும் சொல்ல வேண்டியிருக்கிறதே" என்று கவிஞன் உள்ளம் திகைக்கிறது. 'ஐயோ! கொடிய கைகேயியும் குகன் பார்வைக்கு இலக்காகிவிடுவாளே' என்று திகைப்புடன் உள்ளக்கொதிப்பும் கவிக்கூற்றாக வெளிப்படப் போகிறது.

கோசலை, சுமித்திரா ஆகியோர் துறவிலே, அறத்திலே, அன்பிலே பெரியவர்கள் என்றால், கைகேயி கொடுமையில் பெரியவள் என்று குறிப்பிடுகிறான்.

**சுடுமயா னத்திடைத்தன் துணைஏகத்**
**தோன்றதுயர்க் கடலின் ஏகக்**
**கடுமையார் கானகத்துக் கருணைஆர் கலிஏகக்**
**கழற்கால் மாயன்**
**நெடுமையால் அன்றளந்த உலகெல்லாம் தன்மனத்தே**
**நினைத்து செய்யும்**
**கொடுமையால் அளந்தாளை 'யார் இவர் என்று உரை'**
**என்னக் குரிசில் கூறும்.**

'அறியாது செய்த கொடுமையன்று கைகேயி செய்தது; ஆராய்ந்து பார்த்து அறிவோடு துணிந்து செய்தது' என்பதைத் 'தன்மனத்தே நினைத்து செய்யும் கொடுமை' என்று வற்புறுத்துகிறான் கவிஞன்!

*(2.11.47, 9.11.47 மற்றும் 16.11.47 ஆனந்த விகடன் இதழ்களில் இருந்து)*



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition
https://t.me/joinchat/aaaaaedow77rs3ryirm7tw

கோடிக்கணக்கான
தமிழர்கள்
தினமும்
வாசிக்கும்
ரசிக்கும்
நேசிக்கும்
விகடனின்
பக்கங்களை
அலங்கரிக்க...
நீங்கள் தயாரா?

# ஓர் எண்ணம்... ஓர் எழுத்து... ஓர் இயக்கம்.

ஒரு வாட்ஸ்அப் தகவல்
ஒரு ஃபேஸ்புக் ஸ்டேட்டஸ்
ஒரு மொபைல் க்ளிக்
ஒரு ஸ்கூப் வீடியோ...

**ஒரு கணம்
உலகை உலுக்கும்...
உங்கள் அடையாளத்தைச்
செதுக்கும்!**



**விகடன் மாணவப் பத்திரிகையாளர்
பயிற்சித் திட்டம் 2017-18**

https://t.me/joinchat/aaaaaedow77rs3ryirm7tw

world edition
https://t.me/joinchat/aaaaaedow77rs3ryirm7tw

# வருங்காலப் பத்திரிகையாளர்களை வரவேற்கிறோம்...

## மாணவப் பத்திரிகையாளர் பயிற்சித் திட்டம் 2017–18

இளமையின் விசையை, திறமையின் திசையைத் தீர்மானிக்கும் ஒரு தங்கத் தருணம்... இதோ!

சமூக மாற்றத்துக்கு விதையாக, சமூக வளர்ச்சிக்குப் பாதையாக இருக்க விரும்பும் கல்லூரி மாணவர்களுக்கு... களம் அமைக்கிறது விகடன். ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அச்சு மற்றும் காட்சி ஊடகங்களில் பயிற்சிபெற வாய்ப்பு அளித்து, பட்டை தீட்டிப் பயிற்சி தரும் விகடன் மாணவப் பத்திரிகையாளர் பயிற்சித் திட்டத்தின் அடுத்த அத்தியாயம் ஆரம்பம்.

நம் கையில் இருக்கும் செல்போன் தலைசிறந்த தகவல்தொடர்பு ஊடகமாக மாறியிருக்கும் இந்த நவீன காலத்தில் யூடியூப், ஃபேஸ்புக், வாட்ஸ்அப் வழியே ஒவ்வொருவருக்கும் ஏராளமான செய்திகள் வந்து சேர்கின்றன. அந்தச் செய்திகளைப் படிக்கும் 'வாசகர்' நிலையில் இருந்து, செய்தியை உருவாக்கி உலகத்துக்கு வழங்கும் 'செய்தியாளர்' நிலைக்கு உங்களை உயர்த்த, களம் அமைத்துத் தருகிறது இந்தத் திட்டம். விகடன் பத்திரிகையாளர் திட்டத்தில் பயிற்சி பெற்றவர்கள், பல துறைகளில் தங்களுக்கெனத் தனி முத்திரை பதித்து, வெற்றிப் பாதைகளில் பயணிக்கிறார்கள். பத்திரிகை, தொலைக்காட்சி, சினிமா, சட்டம், இலக்கியம், தொழில்நுட்பம் என, தாங்கள் தடம் பதிக்கும் அனைத்துத் துறைகளிலும் வெற்றியாளர்களாக வலம்வருகிறார்கள். இதோ, இது உங்களுக்கான நேரம்.

இளமைக்கு 'ஆ.வி', உண்மைக்கு 'ஜூ.வி', பெண்மைக்கு 'அவள்', அறிவுக்கு 'சுட்டி', அருளுக்கு 'சக்தி', பொருளுக்கு 'நாணயம்', பயணத்துக்கு 'மோட்டார்', வளமைக்கு 'பசுமை', நலத்துக்கு 'டாக்டர்', அறுசுவைக்கு 'அவள் கிச்சன்' இல்லறம் சிறக்க 'அவள் மணமகள்' இணையத்தில் 'விகடன் டாட் காம்', வைரல் களமான யூடியூபில் 'விகடன் டி.வி' என உலகின் கடைக்கோடித் தமிழன் வரை நீண்டிருக்கின்றன விகடனின் கரங்கள். அதைப் பற்றிக்கொண்டு இணைந்து பயணிக்க, இது ஓர் அட்டகாசமான வாய்ப்பு.

1.7.99-க்கு முன் பிறந்த கல்லூரி மாணவ-மாணவிகள் அனைவரும் இந்தத் திட்டத்தில் பங்கேற்கலாம். இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவ-மாணவியர், தற்போது (2016-2017) கல்லூரியில் படிப்பவராகவும், அடுத்த ஆண்டு (2017-2018) கல்லூரிப் படிப்பைத் தொடர்பவராகவும் இருக்க வேண்டும். அதாவது, 2016-2017-ம் ஆண்டில் பள்ளி இறுதி ஆண்டு படிப்பவர்களோ அல்லது கல்லூரியில் எந்தப் பிரிவிலும் இறுதி ஆண்டு படிப்பவர்களோ, விண்ணப்பிக்க இயலாது. தபால் மூலம் கல்வி பயில்பவர்கள் இந்தத் திட்டத்தில் கலந்துகொள்ள இயலாது.

இந்தத் திட்டத்துக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், இத்துடன் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தாளை தமிழில் பூர்த்திசெய்து, கோரப்பட்டிருக்கும் இணைப்புகளோடு 15.03.17-ம் தேதிக்குள் எங்களுடைய பரிசீலனைக்கு அனுப்பவேண்டியது அவசியம் (விண்ணப்பத்தைப் பிரதி எடுத்தும் பயன்படுத்தலாம்). தகவல்தொடர்புக்காக உங்களுடைய அலைபேசி எண் அவசியம் தேவை. விண்ணப்பம் குறித்த முழு விவரங்களை, அடுத்து வரும் பக்கங்களில் காணலாம்.

ஆயிரக்கணக்கான மாணவ-மாணவிகள் புகுந்து விளையாடும் சவாலான களம் இது. உற்சாகமாகக் களம் இறங்க உங்களையும் அழைக்கிறோம். வாழ்த்துகள்!

– ஆசிரியர்

ஆன்லைனில் விண்ணப்பிக்க: student.vikatan.com
மொபைலில் விண்ணப்பிக்க உங்கள் ஸ்மார்ட்போனில் இந்த QR Code-ஐ ஸ்கேன் செய்யவும்.

https://t.me/joinchat/aaaaaedow77rs3ryirm7tw

world edition

https://t.me/joinchat/aaaaaedow77rs3ryirm7tw

## விண்ணப்பத் தாள்

மாணவர்/மாணவி பெயர் : ................................................

பிறந்த தேதி (10-ம் வகுப்பு) சான்றிதழ்படி — நாள் [ ][ ] மாதம் [ ][ ] வருடம் [ ][ ]

தந்தை/காப்பாளர் பெயர் : ................................................

படிக்கும் கல்லூரி : ................................................

கல்லூரியின் முகவரி : ................................................

................................................

................................................ பின்கோடு [ ][ ][ ][ ][ ][ ]

மாவட்டம் : [ ]

2016-17-ல் கல்லூரியில் படித்துக்கொண்டு இருக்கும் வகுப்பு, பிரிவு, வருடம் : ................................................

இந்தப் படிப்பு, மேலும் எத்தனை ஆண்டு : ................................................

வீட்டில் இருந்து கல்லூரிக்குச் செல்பவரா?

இல்லையெனில் விவரம் : ஹாஸ்டல் [ ] உறவினர் வீடு [ ]

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி :

................................................

................................................

................................................

பின்கோடு [ ][ ][ ][ ][ ][ ]

மாவட்டம் : [ ]

தொலைபேசி எண் : செல்பேசி எண் :

மின்னஞ்சல் முகவரி :

தாங்கள் எந்தத் துறையில் பயிற்சிபெற விரும்புகிறீர்கள்? (ஒன்றை ✓ செய்யவும்)

- ☐ நிருபர் ☐ புகைப்படக்காரர் ☐ நிருபர் + புகைப்படக்காரர்
- ☐ வீடியோ எடிட்டர் ☐ நிகழ்ச்சித் தயாரிப்பாளர் (இணையம்)
- ☐ நிகழ்ச்சித் தொகுப்பாளர் (இணையம்)

சொந்தமாக டிஜிட்டல் வீடியோ கேமரா இருக்கிறதா? ஆம் / இல்லை

ஆம் என்றால் விவரம்: ................................................

இதற்கு முன்பு இந்தத் திட்டத்துக்கு நீங்கள் விண்ணப்பித்திருந்தால், அது குறித்த விவரம்: ................................................

சமுதாய - அரசியல் அமைப்புகளில் உறுப்பினராக இருக்கிறீரா? ஆம் / இல்லை

ஆம் என்றால் விவரம்: ................................................

தமிழ், ஆங்கிலம் தவிர வேறு மொழிகள் தெரியுமா? தெரியும் / தெரியாது

தெரியும் என்றால், தெரிந்த மொழிகள் ................................................

உங்கள் உறவினர்கள் பத்திரிகைத் துறையில் இருந்திருக்கிறார்களா... இருக்கிறார்களா? ஆம் / இல்லை

ஆம் என்றால், அவர்களைப் பற்றிய விவரம்: ................................................

................................................

கல்லூரிப் படிப்பு தவிர, தற்போது கற்றுக்கொள்ளும் வேறு விஷயங்கள்:

(கம்ப்யூட்டர், இசை, விளையாட்டு போன்றவை): ................................................

தேதி: ................................................ கையொப்பம்




இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கும் செல்வன்/செல்வி ................................................ தேர்ந்தெடுக்கப்பட்டால், கல்லூரிப் படிப்பைத் தொடர்வதுடன் ஆனந்த விகடன், ஜூனியர் விகடன், அவள் விகடன், சுட்டி விகடன், சக்தி விகடன், நாணயம் விகடன், மோட்டார் விகடன், பசுமை விகடன், டாக்டர் விகடன், அவள் கிச்சன், அவள் மணமகள், விகடன்.காம் நிருபராக/புகைப்படக்காரராக ஒரு வருடம் பணிபுரிந்து பயிற்சி பெறுவதற்கு நான் சம்மதிக்கிறேன்.

தேதி: தந்தை/காப்பாளர் கையொப்பம்

(அடுத்த பக்கம் பார்க்கவும்)



https://t.me/joinchat/aaaaaedow77rs3ryirm7tw

# விண்ணப்பத்துடன் தவறாமல் அனுப்பவேண்டியவை:

(அ) **கீழ்க்காணும் தலைப்புகளில் ஏதாவது ஒன்றை, சொந்தக் கையெழுத்தில் தெளிவாகப் புரியும்படி தமிழில் கட்டுரையாக எழுத வேண்டும். கட்டுரை, நான்கு பக்கங்களுக்குமேல் இருக்கக் கூடாது. தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதவும்.**

1) ஜல்லிக்கட்டு - பண்பாட்டு அடையாளமா, மிருகவதையா?

2) உங்கள் பார்வையில் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆட்சி?

3) ஆனந்த விகடனின் 'ஆண்பால் பெண்பால் அன்பால்' தொடர் கட்டுரையை நீங்கள் எழுதினால்...

4) மோடியின் ஆட்சியும் அவருடைய பொருளாதாரக் கொள்கையும் வேலைவாய்ப்பை உருவாக்குமா?

5) 'பைரவா', 'சென்னை-28 II', 'மாவீரன் கிட்டு' இவை மூன்றும் சமீபத்தில் வெளியான தமிழ் சினிமாக்கள். இந்த மூன்று படங்களில் எந்த வகையான சினிமா தமிழ் சினிமாவின் வளர்ச்சிக்கும், சினிமா ரசிகர்களின் ரசனைக்கும் அவசியம் என நினைக்கிறீர்கள்? இதைப் பற்றிய உங்கள் கருத்துகளை விரிவாக எழுதுங்கள்.

6) ஜல்லிக்கட்டுக்கான மாணவர் புரட்சி, தமிழகம் முழுக்க பெரும் அதிர்வலைகளை உண்டாக்கியது. உங்கள் பார்வையில் அந்தப் புரட்சி பற்றிய மூன்று நிமிட வீடியோ வேண்டும். வீடியோவுக்கான ஸ்கிரிப்ட்டை எழுதி அனுப்புங்கள் அல்லது அந்த வீடியோவை உருவாக்கி youtube-ல் பதிவேற்றி அந்த லிங்க்-ஐ ஆன்லைன் விண்ணப்பம் மூலம் அனுப்பலாம்.

7) இணையத்தில் பரவிவரும் ட்ரோல், மீம்ஸ் கலாசாரம் பற்றி யோசித்திருக்கிறீர்களா? இதை நெட்டிசன்ஸ் பாசிட்டிவாகப் பயன்படுத்துகிறீர்களா அல்லது லைக்ஸ்"க்காக இறங்கி அடிக்கிறீர்களா? கலகல உதாரணங்கள் முன்வைத்து அலசி ஒரு கட்டுரை எழுதி அனுப்புங்கள்.

8) ஏரி, குளம், கண்மாய்... உள்ளிட்ட நீர்நிலைகளை ஏன் பாதுகாக்க வேண்டும்? உங்கள் சுற்றுவட்டாரத்தில் உள்ள குறிப்பிடத்தக்க நீர்நிலை பற்றியும், அதன் தற்போதைய நிலை குறித்தும் எழுதவும். அந்த நீர்நிலை மூலம் பயன்பெற்றவர்களின் அனுபவங்களையும் சேர்த்து அனுப்பினால் சிறப்பு.

9) இன்றைய இளைஞர்கள் பெரும்பாலானோர் ஃபேஸ்புக், ட்விட்டர், வாட்ஸ்அப் போன்ற சமூகதளங்களிலேயே தங்களின் பெரும்பான்மையான நேரத்தைச் செலவிடுகின்றனர். குழந்தைகளோ வீடியோ கேம், கார்ட்டூன் சேனல்... கட்டமைக்கும் உலகத்துக்குள் மூழ்கிக்கிடக்கின்றனர். இது சரியா? இதனால் ஏற்படும் பாதிப்புகள், இந்தப் பிரச்னைக்கான தீர்வுகள் குறித்து ஒரு கட்டுரை தயார்செய்யுங்கள்.

(ஆ) **புகைப்படத் துறையில் மட்டும் பயிற்சிபெற விரும்பும் மாணவ - மாணவியர், மேற்கூறிய கட்டுரையை அனுப்பத் தேவை இல்லை. அதற்குப் பதிலாக, எதிர்வரும் நாட்களில், தங்கள் பகுதியில் நடக்கும் ஏதாவது ஒரு சம்பவத்தைப் படமாக, வீடியோவாக எடுத்து, அவற்றுக்கான குறிப்புகளோடு அனுப்பவேண்டும். ஒவ்வொரு புகைப்படத்தின் பின்புறத்திலும் தங்களின் பெயரையும் முகவரியையும் குறிப்பிட வேண்டும்.**

(இ) **'நிருபர் + புகைப்படக்காரர்' பிரிவுக்கு விண்ணப்பம் செய்பவர்கள், மேற்கூறிய (அ, ஆ) இரண்டையும் செய்து அனுப்ப வேண்டும்.**

(ஈ) **வீடியோ எடிட்டர், நிகழ்ச்சித் தயாரிப்பாளர், நிகழ்ச்சித் தொகுப்பாளர் பிரிவுகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் தாங்கள் பங்களித்த வீடியோக்களை சி.டி./டி.வி.டி வடிவில் அனுப்ப வேண்டும். (இதே விண்ணப்பத்தை ஆன்லைனில் பூர்த்திசெய்தால், அதற்கான லிங்க்குகளை (Link) குறிப்பிட்டால் போதும்.)**

இந்தத் திட்டத்தில் பங்குபெற விரும்பும் மாணவ - மாணவியர், விண்ணப்பத்தாளை உண்மையான தகவல்களுடன் முழுமையாகப் பூர்த்திசெய்து, 15.03.17-ம் தேதிக்குள் எங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

எந்தக் காரணம் கொண்டும் கட்டுரைகளையும் புகைப்படங்களையும் திருப்பி அனுப்ப இயலாது. அஞ்சல்தலைகளை இணைக்கத் தேவை இல்லை. இந்தத் திட்டம் சம்பந்தமாக எந்தக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ள இயலாது.

அடுத்தகட்டமாக சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய நான்கு ஊர்களில் எழுத்துத் தேர்வு நடக்கும். இதுகுறித்த தகவல், தங்களுக்குக் கடிதம் மூலம் அனுப்பிவைக்கப்படும் முதல் கட்டத்தில் தேர்வுபெறும் மாணவமணிகள், மேற்கண்ட ஊர்களில் ஏதாவது ஒன்றில் தேர்வு எழுத அழைக்கப்படுவார்கள்.

எங்களிடம் இருந்து எழுத்துத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாதவர்கள், முதல் கட்டப் பரிசீலனையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டுகிறோம்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி: மாணவப் பத்திரிகையாளர் பயிற்சித் திட்டம், ஆனந்த விகடன், 757, அண்ணா சாலை, சென்னை - 600 002.**

world edition
https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw
https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

# பஞ்சாங்கக் குறிப்புகள்

**கணித்தவர்: சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்**

**துர்முகி வருடம் மாசி மாதம் 16-ம் தேதியிலிருந்து மாசி 29-ம் தேதி வரை**

(28.02.17 முதல் 13.03.17 வரை)

| கிழமை | ராகுகாலம் | எமகண்டம் |
|---|---|---|
| ஞாயிறு | 4.30 - 6.00 | 12.00 - 1.30 |
| திங்கள் | 7.30 - 9.00 | 10.30 - 12.00 |
| செவ்வாய் | 3.00 - 4.30 | 9.00 - 10.30 |
| புதன் | 12.00 - 1.30 | 7.30 - 9.00 |
| வியாழன் | 1.30 - 3.00 | 6.00 - 7.30 |
| வெள்ளி | 10.30 - 12.00 | 3.00 - 4.30 |
| சனி | 9.00 - 10.30 | 1.30 - 3.00 |

* சூரியோதயம் காலை 6:00 மணி என்கிறபடி

| தேதி (ஆங்கிலம்) | தேதி (தமிழ்) | கிழமை | நட்சத்திரம் | திதி | யோகம் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| பிப். 28 | மாசி 16 | செவ்வாய் | உத்திரட்டாதி (பூரட்டாதி காலை 6:50 மணி வரை) | துவிதியை | மரண/அமிர்த யோகம் | சந்திர தரிசனம் |
| மார்ச் 1 | 17 | புதன் | ரேவதி | திருதியை (காலை 4:45 மணிக்கு மேல் சதுர்த்தி) | மரண யோகம் | சுபகாரியங்கள் தவிர்க்கவும். |
| 2 | 18 | வியாழன் | அசுவினி | சதுர்த்தி/பஞ்சமி (சதுர்த்தி பகல் 2:45 மணி வரை) | அமிர்த/சித்த யோகம் | சுபகாரியங்கள் செய்யலாம். சதுர்த்தி விரதம் |
| 3 | 19 | வெள்ளி | பரணி | சஷ்டி (பஞ்சமி பகல் 12:35 மணி வரை) | சித்த யோகம் | சஷ்டி விரதம் |
| 4 | 20 | சனி | கார்த்திகை | சப்தமி (சஷ்டி காலை 10:15 மணி வரை) | அமிர்த யோகம் | கார்த்திகை விரதம் |
| 5 | 21 | ஞாயிறு | ரோகிணி | அஷ்டமி (சப்தமி காலை 7.50 மணி வரை) | சித்த யோகம் | சுபகாரியங்கள் தவிர்க்கவும். |
| 6 | 22 | திங்கள் | மிருகசீரிடம் | நவமி | அமிர்த/சித்த யோகம் | சுபகாரியங்கள் தவிர்க்கவும். |
| 7 | 23 | செவ்வாய் | திருவாதிரை | தசமி | மரண/சித்த யோகம் | சுபகாரியங்கள் தவிர்க்கவும். |
| 8 | 24 | புதன் | புனர்பூசம் | ஏகாதசி | சித்த யோகம் | சுபகாரியங்கள் செய்யலாம். சர்வ ஏகாதசி |
| 9 | 25 | வியாழன் | பூசம் (மாலை 5:35 மணிக்கு மேல் ஆயில்யம்) | துவாதசி | அமிர்த/சித்த யோகம் | சுபகாரியங்கள் செய்யலாம். |
| 10 | 26 | வெள்ளி | ஆயில்யம் (மாலை 5:10 மணிக்கு மேல் மகம்) | திரயோதசி | மரண யோகம் | பிரதோஷம் |
| 11 | 27 | சனி | மகம் (மாலை 5.10 மணிக்கு மேல் பூரம்) | சதுர்த்தசி | அமிர்த/சித்த யோகம் | மாசி மகம்/நடராஜர் அபிஷேகம் |
| 12 | 28 | ஞாயிறு | பூரம் (மாலை 5.40 மணிக்கு மேல் உத்திரம்) | பௌர்ணமி | சித்த/அமிர்த யோகம் | பௌர்ணமி விரதம்-பூஜை, ஹோலி பண்டிகை. |
| 13 | 29 | திங்கள் | உத்திரம் | பிரதமை | சித்த யோகம் | சுபகாரியங்கள் தவிர்க்கவும். |



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

## மேஷம்



அசுவினி, பரணி
கிருத்திகை 1-ம் பாதம்

**மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் தருணம் இது.**

**தொ**லைநோக்குச் சிந்தனை உள்ளவர்களே!

உங்கள் ராசிநாதன் செவ்வாய் ராசியிலேயே உச்சம் பெற்று அமர்ந்திருப்பதாலும், பூர்வ புண்ணியாதிபதி சூரியன் லாப வீட்டில் தொடர்வதாலும் எதிரிகளும் நண்பர்களாவார்கள். எதிர்பாராத பணவரவு உண்டு.

குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். மகளின் திருமணம் ஏற்பாடாகும். சொத்து வாங்க முன்பணம் தருவீர்கள். அரசு காரியங்கள் விரைந்து முடியும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். சுக்கிரன் சாதகமான வீடுகளில் செல்வதால் செல்வாக்குக் கூடும். பூர்வீகச் சொத்து பிரச்னை தீரும். வாழ்க்கைத்துணையின் உடல்நலம் சீராகும். புதன் சாதகமான நட்சத்திரங்களில் செல்வதால், பழைய கடனில் ஒருபகுதியைத் தந்து முடிப்பீர்கள். ராகுவும் சனியும் சாதகமாக இல்லாததால் வீண் டென்ஷன், வேலைச்சுமை, மறைமுக எதிர்ப்பு வந்து நீங்கும். வியாபாரத்தில் லாபம் பெருகும். புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் கடினமான வேலைகளையும் எளிதாக முடிப்பீர்கள். கலைத் துறையினரே! உங்களின் படைப்புகளுக்குப் பரிசும் பாராட்டும் கிடைக்கும்.

## ரிஷபம்



கிருத்திகை 2,3,4-ம் பாதம்,
ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்


**புதிய பாதையில் பயணிக்கும் வேளை இது.**

**எ**திலும் யோசித்துச் செயல்படுபவர்களே!

சூரியன் 10-ல் தொடர்வதால், புதிய முயற்சிகள் வெற்றியடையும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பதவிகள் தேடி வரும். புது வேலை கிடைக்கும். சொந்த ஊரில் மதிப்பு மரியாதை கூடும். அரசால் அனுகூலம் உண்டு. புதனும், சுக்கிரனும் சாதகமான வீடுகளில் செல்வதால், எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பூர்வீகச் சொத்தை சீர்செய்வீர்கள்.

கண்டகச் சனி தொடர்வதால், பேச்சில் கடுமை காட்டாதீர்கள். குரு 6-ல் மறைந்திருப்பதால் வீண் பழி, வதந்திகள், பகை, வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படக்கூடும். ஆனால் 10-ம் தேதி முதல் குரு வக்கிரமாகி 5-ம் இடத்தில் அமர்வதால் தடைகள் நீங்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். குலதெய்வக் கோயிலைப் புதுப்பிக்க உதவுவீர்கள். வியாபாரத்தில், கடையை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் உங்களைக் குறை கூறிக்கொண்டிருந்த அதிகாரியின் மனப்போக்கு மாறும். சக ஊழியர்கள் உதவுவார்கள். கலைத் துறையினரே! உங்களின் திறமைகள் வெளிப்படும்.

## மிதுனம்



மிருகசீரிடம் 3,4-ம் பாதம்,
திருவாதிரை, புனர்பூசம் 1, 2,3-ம் பாதம்

**சிந்தித்து செயல்பட்டு சாதிக்கும் நேரம் இது.**

**வி**வாதம் செய்வதை விரும்பாதவர்களே!

ராசிநாதன் புதன் சாதகமான வீடுகளில் செல்வதால், உற்சாகம் பிறக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். பழைய சொத்தை விற்றுவிட்டு, புது வீடு வாங்குவீர்கள். யோகாதிபதி சுக்கிரன் சாதகமான நட்சத்திரங்களில் செல்வதால், ஓரளவு பணம் வரும். விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும். சனியும் ராகுவும் வலுவாக இருப்பதால், வேற்று மொழியினரால் ஆதாயம் அடைவீர்கள். சிலருக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். செல்வாக்கு கூடும்.

9-ம் தேதி வரை குரு 5-ல் தொடர்வதால், பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். ஆனால் 10-ம் தேதி முதல் குரு வக்கிரமாகி 4-ல் அமர்வதால், தாயாருடன் மோதல் ஏற்படலாம். சூரியன் 9-ம் வீட்டில் நிற்பதால், தந்தைக்கு நெஞ்சு வலி, முழங்கால் வலி வந்து நீங்கும். அரசு காரியங்கள் இழுபறியாகும். வியாபாரத்தில், கடையை விரிவுபடுத்துவீர்கள். பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சர்வசாதாரணமாக செய்து முடிப்பீர்கள். கலைத்துறையினரே! உங்களுடைய படைப்புத்திறன் வளரும்.


https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition  https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

# கடகம்



**புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்**

**பலம் பலவீனத்தை உணரும் காலம் இது.**

**ம**ண் மணம் மாறாத அன்பர்களே!

சுக்கிரன் சாதகமான நட்சத்திரங்களில் செல்வதால், புத்துணர்ச்சி பெருகும். கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். கேட்ட இடத்தில் பண உதவி கிடைக்கும். சனி 5-ல் நிற்பதால், பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். கர்ப்பிணிப் பெண்கள் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

8-ல் சூரியன் நிற்பதால், பெற்றோரின் உடல்நலம் பாதிக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. செவ்வாய் 10-ல் நிற்பதால், புது வேலை கிடைக்கும். சொத்து பிரச்னைக்குச் சுமுகத் தீர்வு காண்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களைப் புரிந்துகொள்வர். தாயாருடன் இருந்த கருத்து மோதல்கள் விலகும். ராகுவும் கேதுவும் சரியில்லாததால் மன இறுக்கம், பொருள் இழப்புகள் வந்து நீங்கும். வியாபாரத்தில், போட்டிகளைத் தாண்டி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில், சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். கலைத்துறையினரே! விமர்சனங்களைத் தாண்டி முன்னேறுவீர்கள்.

# சிம்மம்



**மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்**

**பிரச்னைகள் முடிவுக்கு வரும் காலம் இது.**

**அ**றிவும் அனுபவமும் உள்ளவர்களே!

உங்களின் யோகாதிபதி செவ்வாய் 9-ம் வீட்டில் உச்சம்பெற்று அமர்ந்திருப்பதால், சவால்களில் வெற்றி பெறுவீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். கணவன்-மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். மகனுக்குப் புது வேலை கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். புது வீடு கட்ட லோன் கிடைக்கும். வீடு, மனை வாங்குவதும் விற்பதும் லாபகரமாக முடியும்.

அர்த்தாஷ்டமச் சனி தொடர்வதால், முக்கிய கோப்புகளைக் கவனமாகக் கையாளுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. குரு 3-ல் நிற்பதால், வேலைச்சுமையால் பதற்றம், எதிர்பாராத பயணங்கள் வந்து நீங்கும். 10-ம் தேதி முதல் குரு வக்கிரமாகி 2-ல் அமர்வதால், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். திடீர் பணவரவுக்கும் வாய்ப்புண்டு. வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில், உயரதிகாரிகளால் பிரச்னைகள் வந்தாலும் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். கலைத்துறையினரே! திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும்.

# கன்னி



**உத்திரம் 2,3,4-ம் பாதம், அஸ்தம், சித்திரை 1,2-ம் பாதம்**

**எதிர்ப்புகளைக் கடந்து முன்னேறும் தருணம் இது.**

**ம**ற்றவர்களின் உதவிகளை மறக்காதவர்களே!

யோகாதிபதி சுக்கிரன் சாதகமான வீடுகளில் செல்வதால், மாறுபட்ட அணுகுமுறையால் பழைய சிக்கல்களுக்குத் தீர்வு காண்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்து கைக்கு வரும். சூரியன் 6-ல் நிற்பதால், பேச்சில் கம்பீரம் பிறக்கும். அரசு அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். வீடு, மனை வாங்குவீர்கள். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும்.

4-ம் தேதி வரை ராசிநாதன் புதன் 6-ல் மறைந்திருப்பதால் சோர்வு, நண்பர்களுடன் வாக்குவாதம் வந்து போகும். 5-ம் தேதி முதல் புதன் சாதகமாவதால், தடைப்பட்ட வேலைகள் முடியும். செவ்வாய் 8-ல் மறைந்திருப்பதால், முன்கோபம், ரத்த அழுத்தம், சகோதர வகையில் பிணக்குகள் வந்து நீங்கும். 10-ம் தேதி முதல் குரு வக்கிரமாகி ஜன்ம குருவாக அமர்வதால், ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை. சனி 3-ல் தொடர்வதால், வியாபாரத்தில் புதிய திட்டங்கள் வகுத்து லாபத்தைப் பெருக்க முற்படுவீர்கள். உத்தியோகத்தில், எதிரியாக நினைத்த சக ஊழியர்கள் வலியவந்து நட்புறவாடுவார்கள். கலைத்துறையினரே! கடின உழைப்பால் சாதித்துக் காட்டுவீர்கள்.



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

# துலாம்



**சித்திரை 3,4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3-ம் பாதம்**

**தானே தனக்கு உதவி என்று உணரும் நேரம் இது.**

**போ**ராட்டக்குணம் கொண்டவர்களே!

லாப வீட்டில் ராகு நிற்பதால், வீண் தயக்கங்கள் நீங்கும். எதிர்பார்த்த தொகை, கைக்கு வரும். மனதுக்கு இதமான செய்திகள் வந்து சேரும். வீடு கட்ட வங்கிக்கடன் கிடைக்கும். 5-ல் சூரியனும் கேதுவும் நிற்பதால், பிள்ளைகளிடம் கண்டிப்பு வேண்டாம். பூர்வீகச் சொத்து பராமரிப்புச் செலவுகள் அதிகமாகும். வழக்கில் அலட்சியம் வேண்டாம்.

4-ம் தேதி வரை புதன் 5-ல் நிற்பதால், உறவினர்கள் உதவியாக இருப்பர். சுக்கிரன் 6-ல் மறைந்திருப்பதுடன், 5-ம் தேதி முதல் புதனும் 6-ல் மறைவதால் தந்தைக்கு மருத்துவச் செலவுகள், பணப்பற்றாக்குறை வந்து போகும். 9-ம் தேதி வரை குரு ராசிக்குள் நிற்பதால், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். 10-ம் தேதி முதல் குரு வக்கிரமாகி 12-ல் மறைவதால், திடீர் பயணங்கள் அதிகரிக்கும். வியாபாரத்தில் பற்று-வரவு சுமார்தான். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. கலைத்துறையினரே! உங்களுடைய படைப்புகளைப் போராடி வெளியிட வேண்டிவரும்.

# விருச்சிகம்



**விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை**


**அனுபவ அறிவால் வெற்றி பெறும் நேரம் இது.**

**து**யரங்களைக் கண்டு துவளாதவர்களே!

ராசிநாதன் செவ்வாயும், ஜீவனாதிபதி சூரியனும் சாதகமாக இருப்பதால் நினைத்தது நிறைவேறும். கடனாகக் கொடுத்த பணம் கைக்கு வரும். புது பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். புது வீடு கட்டி, கிரகப்பிரவேசம் செய்வீர்கள். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். வழக்கு சாதகமாகும்.

புதன் சாதகமாக இருப்பதால் அறிவுத் திறமையால் முன்னேறுவீர்கள். ஜன்மச் சனி தொடர்வதால், கை கால் வலி, தலைச்சுற்றல், வயிற்று வலி வந்து நீங்கும். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், வாழ்க்கைத்துணை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். 10-ம் தேதி முதல் குரு வக்கிரமாகி அமர்வதால் திடீர் யோகம் உண்டாகும். வியாபாரத்தில் புதிய தொடர்புகள் கிடைக்கும்; நெளிவுசுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் தொடர்ந்து உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். கலைத்துறையினரே! வேற்றுமொழி வாய்ப்புகளால் புகழ் பெறுவீர்கள்.

# தனுசு



**மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்**

**தொட்ட காரியம் துலங்கும் வேளை இது.**

**நெ**ருக்கடியிலும் நேர்மை தவறாதவர்களே!

பாக்கியாதிபதி சூரியனும், பூர்வ புண்ணியாதிபதி செவ்வாயும் வலுவாக அமர்ந்திருப்பதால், பிரச்னைகளில் இருந்து விடுபடுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். தடைப்பட்ட வேலைகள் முழுமையடையும். மகளின் திருமண முயற்சிகள் சாதகமாகும். சொத்துச் சேர்க்கை உண்டாகும்.

புதன் சாதகமாக இருப்பதால், பண வரவு அதிகரிக்கும். உறவினர்களிடம் அளவாகப் பழகுவது நல்லது. சுக்கிரன் சாதகமான வீடுகளில் செல்வதால், ஆடை - ஆபரணம் சேரும். வெளியூர்ப் பயணங்களால் திடீர் திருப்பம் உண்டாகும். 9-ம் தேதி வரை ராசிநாதன் குருபகவான் சாதகமாக இருப்பதால், வசதி, வாய்ப்புகள் உண்டாகும். ஆனால் 10-ம் தேதி முதல் குரு வக்கிரமாகி 4-ல் தொடர்வதால் வேலைச்சுமை, அவமதிப்புகள் ஏற்படலாம். வியாபாரத்தில், புதிய போட்டியாளர்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் உங்களின் அணுகு முறையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு தருவார்கள். கலைத்துறையினரே! கௌரவிக்கப்படுவீர்கள்.



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

## மகரம்



உத்திராடம் 2,3,4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதம்

**காத்திருந்து காய் நகர்த்தும் காலம் இது.**

பகைவருக்கும் உதவும் மனம்கொண்டவர்களே!

புதனும், சுக்கிரனும் சாதகமான நட்சத்திரங்களில் செல்வதால், மனதில் தெளிவு பிறக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். பழைய வீட்டை நல்ல விலைக்கு விற்றுவிட்டு, புது இடம் வாங்குவீர்கள். எதிர்பார்த்த உதவிகள், எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வரும்.

செவ்வாய் சாதகமான நட்சத்திரங்களில் செல்வதால், தாயாரின் உடல்நிலை சீராகும். சொத்து வாங்குவது, விற்பது சுலபமாக முடியும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். துரோகிகளை அடையாளம் கண்டுகொள்வீர்கள். 2-ல் சூரியனும் கேதுவும் நிற்பதால், அரசு காரியங்கள் தாமதமாக முடியும். வழக்கில் அவசரம் வேண்டாம். 10-ம் தேதி முதல் குரு வக்கிரமாகி 9-ம் வீட்டில் அமர்வதால், இழுபறி நிலை மாறும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். சக ஊழியர்களிடம் அளவாகப் பழகவும். கலைத்துறையினரே! பழைய நிறுவனத்திலிருந்து புதிய வாய்ப்புகள் வரும்.

## கும்பம்



அவிட்டம் 3,4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3-ம் பாதம்

**முயற்சியால் இலக்கை எட்டும் வேளை இது.**

கொள்கைப்பிடிப்பு கொண்டவர்களே!

சுக்கிரன் சாதகமாக இருப்பதால், எதையும் திட்டமிட்டு செய்வீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். வராமலிருந்த பணம் கைக்கு வரும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். வாழ்க்கைத்துணை வழியில் நல்ல செய்தி உண்டு. புதன் சாதகமான வீடுகளில் செல்வதால், தடைப்பட்ட விஷயங்களைச் சாமர்த்தியமாக நிறைவேற்றுவீர்கள். நட்பு வட்டம் விரியும்.

செவ்வாய் உச்சம் பெற்று அமர்ந்திருப்பதால், மனோபலம் அதிகரிக்கும். தொழிலதிபர்களின் நட்பு கிடைக்கும். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டாகும். 9-ம் தேதி வரை குரு வலுவாக இருப்பதால், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து நல்ல செய்திகள் வரும். 10-ம் தேதி முதல் குரு வக்கிரமாகி 8-ல் மறைவதால், வீண் அலைச்சல், செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் புதிய மாற்றங்களைக் கொண்டு வருவீர்கள். உத்தியோகத்தில் கட்டுப்பாடுகள் நீங்கும். உங்களுக்கு எதிராகச் சிலர் செயல்படலாம். கலைத்துறையினரே! மூத்த கலைஞர்களின் நட்பால் சாதிப்பீர்கள்.

## மீனம்



பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

**வளைந்துக்கொடுத்து முன்னேறும் நேரம் இது.**

மனசாட்சிக்கு மதிப்பளித்து செயல்படுபவர்களே!

ராகு 6-ம் வீட்டில் நிற்பதால், தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். பணம் வரும். வி.ஐ.பி-களின் தொடர்பு கிடைக்கும். உறவினர்கள், நண்பர்கள் வகையில் ஆதாயம் உண்டு. பூர்வீகச் சொத்து பிரச்னைக்குச் சுமுகத் தீர்வு காண்பீர்கள். விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள்.

12-ல் சூரியனும் கேதுவும் நிற்பதால், முன்கோபம், சிறுசிறு விபத்துகள் வந்து நீங்கும். வழக்கில் நிதானம் அவசியம். சுக்கிரனும், புதனும் சாதகமாக இருப்பதால், புதியவர்கள் நண்பர்களாவார்கள். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் அடைவீர்கள். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் குறையும். ராசிநாதன் குரு 10-ம் தேதி முதல் வக்கிரமாகி 7-ல் அமர்வதால், உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். வாழ்க்கைத்துணை வழியில் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டாகும். புதிய பங்குதாரரைச் சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் முக்கியக் கோப்புகளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். கலைத்துறையினரே! உங்களுடைய கலைத்திறன் வளரும்.



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition
https://t.me/joinchat/aaaaaedow77rs3ryirm7tw



சுற்றுலாவா! யோசிக்கவே வேண்டாம்

# ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி

RECOGNIZED GOVT. OF INDIA TOURISM



98421 62265
98428 62265
98421 62246
98421 62215
98424 47305

**H.O.:** 10, வடக்கு ஆவணி மூலவீதி, மதுரை - 1. போன்: 0452-2626481, 2622561, 2622656.
**International:** 89A, வடக்கு ஆவணி மூலவீதி, மதுரை - 1. போன்: 0452-2322653, 2322654, 2322655.
www.murugantravel.com | murugan_travels@yahoo.co.in

# 2017 Economic Train & Flight Tours

## ECONOMIC PILGRIMAGE TOUR

**TOUR - A 14 Days**
ஜெய்ப்பூர் – அமிர்தசரஸ் – காசி 17.03.17, 17.04.17, 17.05.17 மற்றும் மாதந்தோறும் 17–ம் தேதி முதல் 14 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.**12,990/–**.

**TOUR - B 12 Days**
டெல்லி – காசி 06.03.17, 18.03.17, 06.04.17, 26.04.17 மற்றும் மாதந்தோறும் 6, 18–ம் தேதி முதல் 12 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.**10,490/–**

**TOUR - BK 14 Days**
டெல்லி – காசி – கொல்கத்தா 06.03.17, 18.03.17, 06.04.17, 26.04.17 மற்றும் மாதந்தோறும் 6, 18–ந் தேதி முதல் 14 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.**12,990/–**

**TOUR - C 20 Days**
ஆல் இந்தியா – காசியாத்திரை, 14.03.17, 14.04.17, 14.05.17 மற்றும் மாதந்தோறும் 14–ம் தேதி முதல் 20 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.**18,990/–**

**TOUR - K 12 Days**
பஞ்சதுவாரகா – சோம்நாத் 18.03.17, 18.04.17, 18.05.17 முதல் 12 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.**11,990/–**

**TOUR - L 17 Days**
பத்ரிநாத் – கேதார்நாத் – கங்கோத்ரி – யமுனோத்ரி 2.5.17, 10.5.17, 19.5.17, 10.6.17, 19.6.17 முதல் 17 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.**15,990/–**

**TOUR - M 18 Days**
பத்ரிநாத் – கேதார்நாத் – காசியாத்திரை 1.5.17, 9.5.17, 18.5.17 முதல் 18 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.**16,590/–**

**TOUR - P 15 Days**
சிம்லா – குளு – மணாலி – காசி 18.03.2017, 09.04.2017, 18.04.2017, 03.05.2017 முதல் 15 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.**11,990/–**

## JOLLY TOUR

**TOUR - CA 10 Days**
**DELHI - SIMLA - KULLU - MANALI**
16.04.17, 23.04.17, 03.05.17, 15.05.17 including all Accommodation adult Rs.**11,990**/-

**TOUR - [illegible] 11 Days**
**DELHI - SIMLA - KULLU - MANALI**
16.04.17, 23.04.17, 03.05.17, 15.05.17 including all Accommodation adult Rs.**12,490**/-

**TOUR - CB 12 Days**
**DELHI - AMIRTASARAS - KASHMIR - VAISHNAVADEVI** 14.04.17, 24.04.17, 11.05.17, 16.05.17 including all Accommodation adult Rs.**12,990**/-

**TOUR - [illegible] 13 Days**
**DELHI- AMIRTSAR - KULLU - MANALI**
04.04.17, 11.04.17, 02.05.17, 11.05.17 including all Accommodation adult Rs.**12,990**/-

**TOUR - CCI 14 Days**
**DELHI - JAIPUR - KULLU - MANALI**
03.04.17, 18.04.17, 03.05.17 including all Accommodation adult Rs.**13,990**/-

**TOUR - [illegible] 8 Days**
**DARGLING - GANGTOK**
18.04.17, 27.04.17, 01.05.17, 17.05.17 including all Accommodation adult Rs.**10,990**/-

**TOUR - D 11 Days**
கொல்கத்தா – காசி 19.03.17, 19.04.17, 19.05.17 மற்றும் மாதந்தோறும் 19–ம் தேதி முதல் 11 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.10,490/–

**TOUR - ESK 11Days**
ஷீரடி – ஆக்ரா – காசி 09.03.17, 09.04.17, 09.05.17 மற்றும் மாதந்தோறும் 9–ம் தேதி முதல் 11 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.9,990/–.

**TOUR - ENK 11 Days**
நைமிசாரண்யம் – அயோத்தி – காசி 21.03.17, 21.04.17, 21.05.17 மற்றும் மாதந்தோறும் 21–ம் தேதி முதல் 11 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.10,490/–

**TOUR - F 6 Days**
ஷீரடி – பண்டரிபுரம் – மந்திராலயம் – சனிசிங்கனாப்பூர் 01.03.17, 08.03.17, 15.03.17, 22.03.17 மற்றும் மாதந்தோறும் 1, 8, 15, 22–ம் தேதி முதல் 6 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.5,990/–

**TOUR - G 9 Days**
ஆக்ரா – காசி 09.03.17, 21.03.17, 09.04.17, 21.04.17 மற்றும் மாதந்தோறும் 9, 21–ம் தேதி முதல் 9 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.8,490/–

**TOUR - H 9 Days**
அமிர்தசரஸ் – வைஷ்ணவதேவி 20.03.17, 20.04.17, 20.05.17 மற்றும் மாதந்தோறும் 20–ம் தேதி முதல் 9 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.8,990/–

**TOUR - J 12 Days**
அயோத்தி – நேப்பாள் – காசி 7.03.17, 07.04.17, 07.05.17 முதல் 12 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.11,990/–.

**TOUR - Q 14 Days**
காஷ்மீர் – வைஷ்ணவிதேவி – காசி 21.4.17, 3.05.17, 10.5.17, 20.5.17 முதல் 14 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.12,490/–

**TOUR - S 15 Days**
நவஜோதிர்லிங்கம் 18.03.17, 18.04.17, 18.05.17 முதல் 15 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு 13,490/–

## FOREIGN TOUR - 98421 17415

### 3 நாள் தாய்லாந்து(பாங்காங்-பட்டாயா)

டைகர் Zoo, Alcazar Show, Coral Island, Cruise Dinne, BKK City Tour. வாரந்தோறும் வியாழக்கிழமை புறப்படுகிறது. ரூ.25,990/–.

### 4 நாள் துபாய் - அபுதாபி (Shopping festival)

துபாய் சிட்டிடூர் – Desert Safari - Dhow Cruise – அபுதாபி டூர். புறப்படும் தேதிகள்: 02,09,11,16,22,31 மார்ச் மற்றும் வாரந்தோறும்.

### 5 நாள் ஸ்ரீலங்கா சுற்றுலா

கொழும்பு – கண்டி – நவுரலியா – கதிர்காமம். புறப்படும் தேதிகள்:11.3.17, 22.3.17, 11.4.17, 22.4.17 மற்றும் வாரந்தோறும்.

### 6 நாள் மலேசியா - சிங்கப்பூர்

சிங்கப்பூர் சிட்டி டூர் – யுனிவர்சல் ஸ்டூடியோ – செந்தோசா தீவு – Jurong பறவை பூங்கா – பத்துமலை முருகன் – ஜென்டிங் ஹைலேண்ட் – கோலாலம்பூர். புறப்படும் தேதிகள்: 10.03.17, 18.03.17, 24.03.17, 10.04.17, 18.04.17, 24.04.17 மற்றும் வாரந்தோறும்.

**TOUR - CE 10 Days**
**KOLKATTA - DARJILING - GANGTOK**
18.04.17, 27.04.17, 10.05.17, 18.05.17 including all Accommodation adult Rs.**12,990**/-

**TOUR - CF 11 Days**
**HYDERABAD - MUMBAI - GOA** 20.04.17, 01.05.17, 20.05.17 including all Accommodation adult Rs.**12,990**/-

**TOUR - CJ 16 Days**
முக்திநாத் – நேப்பாள் – காசி 5 திவ்யதேசங்கள் 18.03.17, 14.04.17, 15.05.17 முதல் 16 நாட்கள், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.21,590/–

## DOMESTIC FLIGHT TOURS - 98421 62246

**TOUR - DF1 2 Days**
ஷீரடி – சனி சிங்கநாப்பூர் 1 இரவு 2 பகல், புறப்படும் தேதிகள்: வாரந்தோறும் சனிக்கிழமை. நபர் 1–க்கு ரூ.11,990/–

ஷீரடி – மகாலட்சுமி டெம்பிள் 1 இரவு 2 பகல், புறப்படும் தேதிகள்: வாரந்தோறும் செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமை. நபர் 1–க்கு ரூ.9,990/–

**TOUR - DF2 5 Days**
காசி – கயா – புத்தகயா 4 இரவுகள் – 5 பகல், வாரந்தோறும் புதன்கிழமை தோறும், அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.27,990/–

**TOUR - DF3 5 Days**
சிம்லா – குளு – மணாலி 4 இரவுகள் – 5 பகல், புறப்படும் தேதிகள்: ஏப்.12,19,26, மே.3,10,17,24,31. அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.21,990/–

**TOUR - DF4 8 Days**
சிம்லா – குளு – மணாலி 7 இரவுகள் – 8 பகல், புறப்படும் தேதிகள்: ஏப்.9,16,23, மே.2,7,14,20,21 அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு சென்னையிலிருந்து ரூ.24,990/–.

**TOUR - DF5 6 Days**
டார்ஜிலிங் – கேங்டாங் – கொல்கத்தா 5 இரவுகள் – 6 பகல், புறப்படும் தேதிகள்: ஏப்.13,20,27, மே.4,11,18,25. அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.28,990/–

**TOUR - DF6 5 Days**
அந்தமான் – ஹேவலோக் 4 இரவுகள் – 5 பகல், புறப்படும்தேதிகள்: தினந்தோறும். அனைத்து செலவுகளும் உட்பட நபர் 1–க்கு ரூ.24,990/–

கிளைகள்: சென்னை, வடபழனி – 98424 47305, 044–24730451, 24730453, பெரியமேடு – 99655 62265, மேற்கு மாம்பலம் – 73737 62265, காஞ்சிபுரம் – 73730 62265, திருச்சி – 98421 62410, கோவை – 98428 62265, திருநெல்வேலி – 98421 62215, பாண்டி – 98421 62269, தஞ்சாவூர் – 98421 62267, புதுக்கோட்டை – 98420 62265, திருப்பூர் – 73396 22265, ஈரோடு – 99655 62416, சேலம் – 99655 62260, பழனி – 98421 53054, பெங்களூர் – 09738005546, 080 23111444

**குரூப் சுற்றுலா, தனி நபர் சுற்றுலா, ஹனிமூன் பேக்கேஜ், மற்றும் கம்பெனி குரூப் சுற்றுலா – 73737 62416, 98421 62265.**

world edition
https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw



■ பிரேமா நாராயணன்

# மண வாழ்க்கை அருளும்

- நாளொன்றுக்கு ஐந்துமுறை நிறம் மாறும் சிவலிங்கம்.
- நவகிரகம் இல்லாத திருக்கோயில்.
- சாந்தசொரூபியாகக் காட்சி தரும் அஷ்டபுஜ காளி.
- குந்திதேவிக்கு தோஷ நிவர்த்தி அளித்த 'சப்த சாகர' தீர்த்தம்.
- யானை நுழையமுடியாத மாடக் கோயில்.
- வேறெந்த சிவாலயத்திலும் காண்பதற்கரிய சிறப்பாக... பக்தர்களின் தலையில் திருவடி (சடாரி) வைக்கும் திருத்தலம்.

அப்பப்பா... ஒரு தலத்துக்கு இத்தனைச் சிறப்புகளா? எங்கு உள்ளது இந்த சிவக்ஷேத்திரம்?

உங்களுக்குள் எழும் இதே கேள்விகள், இந்தக் கோயிலைப் பற்றி அறிந்ததும் நமக்குள்ளும் எழுந்தன.

தஞ்சை மாவட்டம், பாபநாசம் அருகிலுள்ள நல்லூர் எனும் தலத்துக்குத்தான் இத்தனைச் சிறப்புகளும் என்பதை அறிந்ததும், உடனே கிளம்பிச் சென்றோம், நல்லூர் தலத்தைத் தரிசிக்க!

தஞ்சையிலிருந்து கும்பகோணம் செல்லும் சாலையில் பாபநாசத்தில் இறங்கி, இடதுபுறம் பிரியும் சாலையின் உள்ளே சென்றால், 3 கி.மீ. தூரத்திலேயே வந்துவிடுகிறது நல்லூர்.

கோயிலை அடைந்ததும் முதலில் நம் கண்களில்படுவது, ராஜ கோபுரத்துக்கு எதிரே உள்ள பெரிய தீர்த்தக்குளம்தான். ஏழு கடல்களும் இதில் வந்து கலப்பதாக ஐதிகம். எனவே 'சப்த சாகரம்' என்று அழைக்கப்படுகிறது. கும்பகோணம் மகாமகக் குளத்தின் பெருமைக்கு சற்றும் குறைந்ததல்ல, இந்த சப்த சாகரத்தின் கீர்த்தி. மழை பொய்த்ததால், இப்போது நீரின்றி வறண்டு கிடந்தாலும் குளத்தின் பிரமாண்டம் மலைக்கவைக்கிறது!

நான்கு புறங்களிலும் 12 படித்துறைகளுடன் விளங்கும் இந்தத் திருக்குளம், ஆதியில் பிரம்மனால் உருவாக்கப்பட்டது. நான்கு திசைகளிலும் நான்கு வேதங்களையும் நடுவே சப்த கோடி மகா மந்திரங்களையும் வைத்து இந்தக் குளத்தை பிரம்மதேவர் புனிதமாக்கினார் என்கிறது, இவ்வூரின் தலபுராணம். கோயிலுக்குள் நுழைந்து, கோயில் அலுவலகத்தில் இருந்த உள்ளூர் மணியம் நடராஜனிடம் நம்மை அறிமுகப்படுத்திக் கொண்டோம். அவர், மிகுந்த மகிழ்ச்சியோடு நம்மை வரவேற்றதுடன், நம்முடனேயே வந்து, கோயில் பற்றியும் அதன் சிறப்புகள் பற்றியும் விவரமாகக் கூறினார்.

"இந்தக் குளம் சாதாரணமான குளம் இல்லை... மாசி மகத்தன்று, கும்பகோணம் மகாமகக் குளத்தில் குளித்தால் என்ன பலன்



ஸ்ரீபஞ்சவர்ணேஸ்வரர்



ஸ்ரீகிரிசுந்தரி





www.vikatan.com

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

# மாடக்கோயில்!






https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

## திருநல்லூர் அற்புதங்கள்!

முசுகுந்த சக்கரவர்த்தி இந்திரனிடமிருந்து சிவ மூர்த்தத்தைப் பெற்றுக்கொண்டு திருவாரூர் செல்லும் வழியில், நல்லூரில் மூன்று நாள் இருந்து வழிபட்ட பிறகே, ஆரூர் கொண்டு சென்றாராம். இதை அருணகிரிநாதர் திருப்புகழில் பாடியுள்ளார்.

இங்குள்ள சோமாஸ்கந்தர் அரச கோலத்தில், திருவாரூர் தியாகராஜர் போன்று காட்சி தருகிறார். மாசிமகப் பெருவிழாவின் 5-ம் நாளன்று, இவர் மாடக்கோயிலில் மூலவருக்கு முன்பாக எழுந்தருள, அங்கே ஆராதனை முடிந்ததும் படிகளில் இறங்கி வருவார். அப்போது, இருபுறமும் அடியார்கள் வெண்சாமரம் வீச, அதையும்மீறி தன்னுடைய திருமுகத்தில் வியர்வைத் துளிகள் அரும்ப, இந்தப் பெருமான் ஆவேசத்துடன் வரும் காட்சி அனைவரையும் மெய்சிலிர்க்கச் செய்யும்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் வந்து தங்கி வழிபட்டு, போற்றிப் பாடிய திருத்தலம் இது. சேக்கிழார், அமர்நீதி நாயனார், அருணகிரிநாதர் போன்ற அடியார்களும் சித்தர்களும் முனிவர்களும் வழிபட்டு வரம்பெற்ற தலம் இது. அமர்நீதி நாயனார் முக்தி அடைந்த ஆடி மாதம் பூர நன்னாளில், அவருடைய வரலாறு இங்கே விழாவாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இரண்யாட்சனை வதம் செய்வதற்காக நரசிம்ம வடிவம் வேண்டி திருமால் தவம் செய்ய, இத்தலத்தின் இறைவன் அவருக்கு நரசிம்ம வடிவை அளித்தாராம். அந்த அசுரன் அழிந்தபிறகு, பெருமாளை நரசிம்மக் கோலத்துடனேயே தமது கருவறை விமானத்தில் மேற்குமுகமாக இருக்கப் பணித்தாராம் சிவனார். அந்தத் திருவடிவை இன்றைக்கும் நாம் கருவறை விமானத்தில் தரிசிக்கலாம்.

இந்தக் கோயிலின் மேற்கு கோபுர வாயிலின் மேல்புறத்தில் பலிபீடம் வடிவில் இருக்கும் மூர்த்தியே

கிடைக்குமோ, அதே பலன் இதில் நீராடினால் கிடைக்கும் என்பது நம்பிக்கை" என்று தொடங்கிய மணியம், அந்தக் குளத்தின் புராணச் சிறப்பு குறித்து மேலும் விவரித்தார்.

‘‘பாண்டவர்களின் தாய் குந்திதேவி, கர்ணனை ஆற்றில் விட்டதால் தனக்கு ஏற்பட்ட தோஷத்தைப் போக்குமாறு இறைவனிடம் பிரார்த்தித்தாள். அதன் பலனாக, ‘ஒரேநாளில் ஏழு சமுத்திரங்களில் நீராடினால் தோஷம் நீங்கும்; மன நிம்மதி கிடைக்கும்’ என்று அறிந்தாள். ஆனால், பெண்ணாகிய தனக்கு ஒரே நாளில் ஏழு சமுத்திரங்களில் நீராடுவது சாத்தியமா என்ற கலக்கம் உண்டானது அவளுக்கு.

அவளின் அந்தக் கலக்கத்தைத் தீர்க்கும் பொருட்டு, ஏழு சமுத்திரங்களின் தீர்த்தத்தையும் இந்தக் குளத்துக்கு வரும்படி அருள்பாலித்தார் இறைவன். குந்திதேவியும் இந்தத் தீர்த்தத்தில் நீராடி, நல்லூர் பெருமானுக்குப் பூஜை செய்து, மன நிம்மதியும் தோஷ நிவர்த்தியும் அடைந்தாள் என்கிறது தலபுராணம். இதை மெய்ப்பிக்கும் வகையில், குந்தி சிவபூஜை செய்யும் சிற்பம் ஒன்றும் இங்கு இருக்கிறது.

குந்திதேவி, இந்தத் தலத்தில் நீராடி தனது தோஷம் நீங்கப்பெற்றது ஒரு மாசிமக நாளாகும். எனவே இந்த சப்தசாகர தீர்த்தத் தில் நீராடுவதால் கும்பகோணம் மகாமக குளத்தில் நீராடிய பலன் கிடைக்கும் என்கின்றன புராணங்கள். அதுமட்டுமல்ல, தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், ஒரு மண்டல காலம் இந்தத் திருக்குளத்தின் பன்னிரண்டு படித்துறைகளிலும் நீராடி, பன்னிரு முறை கோயிலை வலம் வந்து, சிவனாரை வழிபட்டால், அந்த நோய் அகலும் என்பது நம்பிக்கை. அதேபோல், மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இங்கே வந்து நீராடுவது, ரொம்ப விசேஷம்" என்றார் நடராஜன்.





https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7lw

கணநாதர். இப்படியான திருவடிவம் இந்தத் தலத்திலும் காசியிலும் மட்டுமே வழிபடப்படுகிறது. ஆண்டுக்கு ஒரு முறை இரவில் நடக்கும் 'கணநாதர் பூஜை' விசேஷமானது. இதில் கலந்துகொள்ள, பெண்களுக்கு அனுமதி இல்லை.

ஒருமுறை ஆதிசேஷனுக்கும் வாயு பகவானுக்கும் தங்களில் பெரியவர் யார் என்பதில் போட்டி எழுந்தது. ஆதிசேஷன் கயிலை மலையை இறுகப் பற்றிக்கொள்ள, வாயுதேவன் மலையை அசைக்க முற்பட்டு பலத்த காற்றை வீசச் செய்தார். இந்தப் போட்டியைக் கண்டு தேவர்கள் அஞ்சினர். பின்னர், அவர்களது வேண்டுகோளுக்கு இணங்கி ஆதிசேஷன் பிடியைச் சிறிது தளர்த்தினார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, கயிலையின் இரண்டு சிகரங்களைப் பெயர்த்து, ஒன்றை திருநல்லூரிலும், மற்றொன்றை அருகிலுள்ள ஆவூரிலும் விடுவித்தாராம் வாயு. நல்லூரில் விழுந்த சிகரமே பஞ்சவர்ணேஸ்வரர் எழுந்தருளும் மலையாகும். அதனால் இத்தலம் 'தென் கயிலாயம்' எனவும் போற்றப்படுகிறது.

ராஜகோபுர வாயில் வழியாக உள்ளே நுழைந்தால், விசாலமான முதல் பிராகாரத்தை அடையலாம். அங்கே கொடிமர விநாயகர், கொடிமரம், பலிபீடம், நந்தீஸ்வரரைத் தரிசிக்கலாம். வடக்கில் வசந்த மண்டபமும், தெற்கில் துலா மண்டபமும் உள்ளன. அமர் நீதி நாயனார் தராசுத் தட்டில் ஏறி அமர்ந்த கதை நிகழ்ந்தது இந்த துலா மண்டபத்தில் தான். அடுத்ததாக ஒரு சிறு கோபுரத்துடன் ஒரு வாயில். அதில் நுழைந்தால், நேர் எதிரில் காசி பிள்ளையாரைத் தரிசிக்க முடியும். அவரை வணங்கிவிட்டு இடதுபுறம் திரும்பி, படிக்கட்டுகளில் ஏறிச்சென்றுதான் ஸ்வாமி சந்நிதியை அடைய முடியும்.

“மற்ற கோயில்களைப் போல, இங்கே ராஜ கோபுரத்திலிருந்து நேரே கருவறைக்குப் போக முடியாது. ஏனெனில், இது மாடக்கோயில்; கோச்செங்கட்சோழன் கட்டியது” என்கிறார் மணியம். 'மாடக்கோயில்' என்பது, யானை ஏறிப் புக முடியாதவாறு அமைந்தது. பிரதான வாயிலும் அடுத்தடுத்த வாயில்களும் நேர்க்கோட்டில் அமைந்திருக்காது. உள் பிராகாரத்தில் நுழைந்து, சில படிக்கட்டுகள் ஏறிச்செல்வதுபோன்று மூலவர் சந்நிதி அமைக்கப்பட்டிருக்கும்.

திருவானைக்கா திருத்தலத்தின் தலப் புராணம் தெரியும்தானே. சிவபக்தியில் சிறந்த சிலந்தியும் யானையும் ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டதையும், இறுதியில் யானைக்கும் சிலந்திக்கும் எம்பெருமான் மோட்சம் அளித்த திருக்கதையையும் மிக அழகாக விவரிக்கும் திருவானைக்கா தலத்தின் புராணம். சிவபுண்ணியம் காரணமாக மறுபிறவியில் கோச்செங்கட்சோழனாகப் பிறந்த சிலந்தி, பூர்வஜன்ம பயனால், யானைகள் நுழையமுடியாத மாடக் கோயில்களாக பல சிவாலயங்கள் எழுப்பியதாக வரலாறு.






https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7lw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

அவற்றில் இந்த நல்லூர் திருக்கோயிலும் ஒன்று. இந்த மாடக்கோயிலைமலை மல்கு கோயில், வானமருங் கோயில், மல்லார்ந்த கோயில் என்றெல்லாம் போற்றுகிறார் திருஞானசம்பந்தர்.

புராணப் பின்னணியை அறிந்தபடியே உள் பிராகாரத்தை வலம் வருகிறோம். அப்பர், சம்பந்தர், சுந்தரர், குந்திதேவி சிவனைப் பூஜிக்கும் திருக்கோலம், இத்தலத்துக்கு வந்து முக்தி பெற்ற அமர்நீதி நாயனார், சண்டேசுவரர், துர்கை, நடராசர் நர்த்தனமாடும் திருச்சிற்றம்பலம், சனீஸ்வரர், பைரவர், சூரியன், சந்திரன் மற்றும் அம்பிகையுடன் இரு சிவலிங்கத் திருமேனிகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

இவர்கள் அனைவரையும் வணங்கி வலம் வந்தபிறகே, மாடத்தில் ஏற வேண்டும். இந்தப் பிராகாரத்தின் மத்தியில் சுமார் 14 அடி உயர மாடத்தில் இருக்கின்றன, ஸ்வாமி மற்றும் அம்பாள் சந்நிதிகள்.

தென்புறமாக இருக்கும் படிகளில் ஏறி உள்ளே நுழைந்தால், முதலில் கண்களில் படுவது அம்பாள் சந்நிதி. அழகே உருவாக, ஆஜானுபாகுவாகக் காட்சி தருகிறாள் கிரிசுந்தரி. தமிழில் 'மலையழகி' என்று திருப்பெயர். பெயருக்கேற்ப அழகிய உருவம் கொண்டு, மடிசார் புடவையும், மந்தகாசப் புன்னகையுமாக நம்மை ஆட்கொள்கிறாள். அன்னையை வணங்கிவிட்டு, ஸ்வாமி சந்நிதிக்குள் நுழைகிறோம்.

கிழக்கு நோக்கி அருளும் ஸ்ரீகல்யாண சுந்தரேஸ்வரரின் திருமேனி, ஆன்மிக





தேவியருடன் ஸ்ரீமுருகப் பெருமான்

அற்புதங்களில் ஒன்று. ஆம்! தினமும் ஆறு நாழிகைக்கு ஒருமுறை நிறம் மாறுகிறது இந்த சுயம்பு லிங்கம். முதல் ஆறு நாழிகையில் தாமிர நிறத்தில் காட்சி தரும் இந்தச் சிவனாரின் லிங்கத் திருமேனி, அடுத்தடுத்து முறையே இளஞ்சிவப்பு, உருக்கிய தங்கம், நவரத்தினப் பச்சை ஆகிய வண்ணங்களில் காட்சி தரும். கடைசி ஆறு நாழிகைகளில், இன்ன நிறம் என்று இனம்காண இயலாத ஒரு நிறத்தில் காட்சியளிப்பாராம் இந்த சிவனார்.


இப்படி ஐந்து நிறங்களில் காட்சி தருவதால், ஸ்ரீபஞ்சவர்ணேஸ்வரர் என்றும், இந்தத் தலத்தில் அமர்நீதி நாயனார், அப்பர் ஆகியோரை ஆட்கொண்டதால் ஸ்ரீஆண்டார் என்றும், அகத்தியருக்குத் திருமணக் கோலத்தைக் காட்டியமையால் ஸ்ரீகல்யாணசுந்தரர் என்றும், மிகப் பேரழகுடன் திகழ்வதால் சுந்தரநாதன், சவுந்தரநாயகர் ஆகிய பெயர்களாலும் அழைக்கப்படுகிறார் இந்தச் சிவனார்.

சதுர வடிவ ஆவுடையாருடன் கிழக்கு நோக்கி காட்சி தரும் இந்த லிங்கத் திருவுருவில் துளைகள் இருப்பதைக் காணலாம். 'பிருங்கி முனிவர் வண்டு உருவில் இறைவனை வழிபட்டதைக் குறிக்கும் துளைகள் இவை' என்கிறார்கள். அகத்தியருக்குக் காட்டியருளிய அம்மையப்பரின் திருமணக்கோலம், சுதை வடிவில் திகழ்கிறது.



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw






ஸ்ரீ அஷ்டபுஜகாளி

## எப்படிச் செல்வது?

தஞ்சாவூர் - கும்பகோணம் மார்க்கத்தில், பாபநாசத்தை அடுத்து வாழைப்பழக்கடை என்ற ஊர் வரும். அங்கிருந்து பிரியும் சாலையில், சுமார் 1 கி.மீ. பயணித்தால் நல்லூரை அடையலாம். தஞ்சாவூரில் இருந்து சுமார் 28 கி.மீ. தொலைவிலும் கும்பகோணத்தில் இருந்து 15 கி.மீ. தொலைவிலும் இந்தத் தலம் உள்ளது.



ஸ்தல விருட்சம்

அவர்களுக்கு இருபுறமும் திருமாலும், பிரம்மாவும் காட்சி தர, அகத்தியர் வழிபடும் நிலையில் நிற்கிறார். மூலவருக்குப் பக்கத்தில் ஒரு சிறிய லிங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இது அகத்திய லிங்கம் எனப்படுகிறது. ஒரே ஆவுடையார் மீது இரண்டு லிங்கங்கள் இருப்பது ஒரு சிறப்பம்சம். இப்படி ஓர் அமைப்பு தமிழகத்தில் வேறு எந்தக் கோயிலிலும் இல்லை. இதன் புராணப் பின்னணி சுவாரஸ்யமானது.

சிவ-பார்வதி திருமணத்தைக் காண உலகின் அனைத்து ஜீவ கோடிகளும் கயிலையில் குவிந்ததால், உலகம் சமநிலை இழந்தது. வடக்கு தாழ்ந்து, தெற்கு உயர்ந்தது. ஆகவே, உலகைச் சமன் செய்ய தெற்கு நோக்கிச் செல்லும்படி அகத்தியரைப் பணித்ததுடன், அவர் விரும்பும் தலங்களில் தமது திருமணக்கோலத் தரிசனம் கிடைக்கும் என்றும் அருள்புரிந்தார் சிவபெருமான்.

அதன்படியே, தெற்குநோக்கி நகர்ந்த அகத்தியர், தாம் விரும்பிய இடங்களில் எல்லாம் சிவனாரின் திருமணக்கோலத்தைக் கண்டு இன்புற்றார். அப்படியான தலங்களில் இதுவும் ஒன்று. அவர் இங்கு வழிபட்டபோது, இங்குள்ள லிங்கத்தின் வலதுபுறம் மற்றொரு லிங்கத்தை வைத்து பூஜித்து பேறு பெற்றாராம். ஆக, இரண்டு லிங்கங்களையும் ஒருங்கே தரிசிக்கும் பாக்கியம் நமக்கு!

அகத்தியருக்கு இறைவன் கல்யாணக் கோலத்தில் காட்சி தந்த தலம் என்பதால், ஆதி காலம் தொட்டே நல்லூர்தான், திருமணப் பரிகாரத் தலமாக விளங்கிவருகிறது.

"இந்த விஷயம் பல பேருக்குத் தெரியல. இங்கே வந்து சங்கல்பம் பண்ணி, கல்யாண சுந்தரரை வணங்கி வழிபட்டு, மாலை வாங்கிச் சென்றால், 90 நாட்களுக்குள் திருமணம் கைகூடும். இது, பலரும் கண்கூடாகக் கண்ட உண்மை" என்று சிலிர்ப்புடன் விவரிக்கிறார் மணியம்.

மூலவரை நாள்முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம்; அவ்வளவு அழகு. மற்ற சிவலிங்க ரூபங்கள் போல இல்லாமல் மெலிந்து, நீண்டு காட்சி தருகிறது. நாம் போன காலை நேரத்தில் தாமிர நிறத்திலும் பிறகு உருக்கிய தங்க நிறத்திலும் காட்சி தந்தார் கல்யாணசுந்தரேஸ்வரர். ஸ்வாமியின் இந்த லிங்கத் திருமேனி எதனால் ஆனது? செம்பா... கல்லா... உலோகமா... இதுவரை, எவருக்கும் புலப்படாத அற்புதம் அது! சுயம்புவாகத் தோன்றிய இந்த லிங்க மூர்த்தியின் பாணம், பூமிக்கடியில் வெகுதூரம் நீண்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

ஆரத்தி காண்பித்த பின் அர்ச்சகர்


www.vikatan.com
https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

அனைவரின் தலையிலும் திருவடியை (சடாரி போன்றது) வைத்து எடுத்தார். வேறு எந்த சிவாலயத்திலும் இப்படியான வழக்கம் கிடையாது. இங்கு மட்டும் எப்படி?

திருச்சத்திமுற்றம் தலத்தைத் தரிசித்த அப்பர் பெருமான், 'இறைவனின் திருவடிகளை தன் சிரசில் வைத்து அருள வேண்டும்' என்று வேண்டிக்கொண்டாராம்.

அவரது விண்ணப்பம், இந்த நல்லூர் திருத்தலத்தில் நிறைவேறியது. இந்தத் தலத்துக்கு வந்த அப்பரின் தலைமீது தன் திருவடிகளைச் சூட்டி அருளினாராம் இறைவன்.

'நினைந்துருகும் அடியாரை' என்று தொடங்கி, 'நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே' என்று முடியும் பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும், தம் தலையில் இறைவன் தன் திருவடியைச் சூட்டி அருளியதைக் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறார் அப்பர்.

இதையொட்டியே, இங்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் திருவடி சுமக்கும் பாக்கியம் கிடைக்கும் வகையில், சிவன் பாதம் பொறித்த சடாரியைத் தலையில் வைத்து எடுக்கிறார்கள்.

இறைவனின் திருவடிகளைத் தலையில் சூடி, மனமுருகிப் பிரார்த்தனை செய்தபின், அங்கேயே வலம்வந்து, அம்பிகையைத் தொழுது, மீண்டும் படிகளில் இறங்கி உள் பிராகாரத்தை வலம் வருகிறோம். இறங்கும் போது இடப்பக்கச் சுவரில் அமர்நீதி நாயனாரை, சிவன் ஆட்கொண்ட கதை ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. மாடக்கோயிலை விட்டு வெளிப்பிராகாரம் வந்தால் தென்திசையில் அமைந்திருக்கிறது, அஷ்டபுஜ காளி சந்நிதி. வேறெங்கிலும் காண்பதற்கரிய திருக்கோலத்தில், திருமுகத்தில் சிறிதும் உக்கிரம் இல்லாமல் சாந்த சொரூபியாக அருள்பாலிக்கிறாள், சூலாயுதபாணியான இந்தக் காளிதேவி.

"பெருமானின் கல்யாண கோலத்தை இங்கே கண்டதால், காளியின் முகத்தில் கோபத்துக்குப் பதில் சாந்தம் நிலவுகிறது" என்கிறார் அங்கிருந்த அர்ச்சகர். கருவைக் காக்கும் காளிதேவி இவள். இந்தப் பகுதியைச் சேர்ந்த பெண்கள் கருவுற்றால், நல்லமுறையில் குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டிக்கொண்டு, இந்தக் காளியின் சந்நிதியில் வளைகாப்பு வைபவத்தை நடத்துகின்றனர். மேலும் சந்தனக்காப்பு, முடிக் காணிக்கை ஆகிய பிரார்த்தனைகளும் நடைபெறுகின்றன. இக்கோயிலில் நவகிரகங்கள் கிடையாது. "இறைவனே அனைத்துமாய் திகழ்கிறார் என்பதால், இந்தக் கோயிலில் நவகிரகங்கள் அமைக்கப்படவில்லை'' என்கிறார்கள், உள்ளூர் பக்தர்கள்.

ஐந்தைந்து (கூட்டு) இலைகளுடன் திகழும் வில்வ மரமே இக்கோயிலின் ஸ்தல விருட்சம். பழைமையான இந்த மரத்தை 'ஆதிமரம்' என அழைக்கின்றனர். அப்படியே வெளியே வந்து கொடிமரத்தின் முன்பாக வணங்கி எழுந்து, சில நிமிடங்கள் அமர்ந்து தியானித்த பிறகு, கோயிலில் இருந்து விடைபெற்றோம்.

"வடபாற் கயிலையும் தென்பால் நல்லூரும் தம் வாழ்பதியே" என்று இத்தலத்தை கயிலைக்கு ஒப்பாக வைத்துப் போற்றியுள்ளார் அப்பர். இறைவனின் திருமேனி இயற்கையிலேயே நிறம் மாறும் அதிசயத்தைக் கண்டு உருகி, உவகை பெறுவதுடன், கயிலாய தரிசன புண்ணியத்தையும் பெற்றுச் சிறந்திட, நீங்களும் ஒருமுறை திருநல்லூருக்குச் சென்று வாருங்களேன்.

படங்கள்: குணசீலன்

## 'கல்யாண வரம் கைகூடும்!'

நீண்டகாலமாக வரன் அமையாமல் திருமணம் தடைப்பட்டு, அதனால் மனம் வருந்தித் தவிக்கும் அன்பர்கள், இக்கோயிலுக்கு வந்து வழிபட்டு வரம் பெறலாம்.

திருமணம் ஆகவேண்டிய நபரை இங்கே அழைத்து வந்து, மூன்று மாலைகள் வாங்கிக்கொள்ள வேண்டும். இரண்டு மாலைகளை முறையே ஸ்வாமிக்கும் அம்பாளுக்கும் அணிவித்துப் பிறகு, அந்த அன்பரை ஸ்வாமி சந்நிதியில் அமரவைத்து, மூன்றாவது மாலையை அவருக்கு அணிவித்து, சங்கல்பம் செய்து வழிபட்டு, பிராகார வலம் வர வேண்டும். அந்த மாலையை அவர்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்று பூஜை அறையில் வைத்துவிடலாம். "இங்கு வந்து திருமண வரத்துக்காக வழிபட்டுச் சென்றால் விரைவில் கல்யாணம் கைகூடும். கல்யாணம் நடந்ததும் தம்பதி சமேதராகக் கோயிலுக்கு வந்து வணங்கிச் செல்ல வேண்டும். ஏற்கெனவே பெற்றுச் சென்ற மாலையைக் குளத்தில் போட்டுவிட வேண்டும்" என்கிறார் கண்ணன் குருக்கள்.



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

# VIKATAN NOW

## வலை'தலம்'!




அலகுமலை வேலனுக்கு அபிஷேகம்! - திருப்பூர்



சீமைக் கருவேல மரங்களை அகற்றுவதும் இறைபணியே!- அசத்தும் ஆன்மிகத் தொண்டர்கள்!

3.5K



ஆன்மிகத் தகவல்கள் மற்றும் ஆன்மிகச் செய்திகளுக்கு எப்போதும் இணைந்திருங்கள் சக்தி விகடனுடன்...



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

# எனக்கு எல்லாமே

■ த.கதிரவன்



நெற்றியில் துலங்கும் குங்குமத் திலகம், இயல்பான அமைதியை அதிகமாக்கிக் காட்டும் வெண்ணிற ஆடை, இவருக்கென பிரத்யேகமான அடையாளமாகவே ஆகிவிட்ட மார்புக்கு குறுக்காகக் கட்டியிருக்கும் கரங்கள், பேச்சில் நிதானம்... முக்கியமாக தோற்றத்திலும் வார்த்தைகளிலும் அத்தனை எளிமை.

ஆம்! நீங்கள் கணித்தது மிகச் சரிதான்!

கடந்த ஞாயிற்றுக்கிழமையின் காலைப்பொழுதை, மிக இனிமையாக்கியது, ஏவி.எம்.சரவணனுடனான அந்தச் சந்திப்பு!

திரைப்படம், சினிமா உலகம் என்று வழக்கமான விஷயங்களைத் தவிர்த்து, வழிபாடு, பிரார்த்தனை, இஷ்டதெய்வம் என நகர்ந்தது உரையாடல். ஆன்மிகத்தில் அவருக்கு இருக்கும் ஈடுபாடும் நம்மை பிரமிக்கவைத்தது.

"நகரத்தார் சமுதாயத்தில் ஒரு பழக்கம் உண்டு; அதாவது ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு தெய்வத்தைச் சார்ந்தது எனச் சொல்வார்கள். அந்த வகையில், என் தாத்தா காலத்திலிருந்து எங்கள் குடும்பத்தைப் 'பிள்ளையார்பட்டி விநாயகர்' கோயிலோடு சேர்த்துத்தான் சொல்வார்கள். ஆனால், என் தந்தை மெய்யப்ப செட்டியாருக்கு இஷ்டதெய்வம் முருகன்தான்!

குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கூடியிருக்கும் இடத்தில், ஏதாவது ஒரு முருகன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால், யாராவது ஒருவர் எழுந்து நிற்பார்; அந்த அளவுக்கு எங்கள் வீட்டில் முருகன் பெயர் நிறைந்திருக்கிறது. பெண் பிள்ளைகள் என்றால், அம்பாள் பெயர் சூட்டுவது வழக்கம்" என்று வார்த்தைகளில் மென்மை கோத்து முன்னுரை கொடுத்தவர், தன்னுடைய இஷ்ட தெய்வம் குறித்துப் பேச ஆரம்பித்தார்.



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

# ஸ்ரீ சாயி தான்!



"அப்பாவுக்கு முருகன் மேலிருந்த அபரிமிதமான பக்தியால், ஓவியர் கொண்டையராஜு. அவர்களை வீட்டுக்கே வரவழைத்து, ஸ்பெஷலாக ஒரு முருகன் ஓவியத்தை வரைந்து தரச்சொல்லி வாங்கி வைத்திருந்தார். வீட்டில் எங்கு திரும்பினாலும் அந்த முருகர்தான் காட்சியளிப்பார்.

இப்படி, வீட்டில் இருக்கும் அத்தனை பேருமே முருக பக்தர்கள்தான். ஆனால், எனக்கோ கடந்த பத்து, பன்னிரண்டு ஆண்டுகளாக சாயிபாபா மீது ஈடுபாடு அதிகமாகி இருக்கிறது" என்று கூறும் ஏவி.எம்.சரவணன், அனுதினமும் தமது வழிபாட்டு வழக்கங்களாகச் சொன்ன விஷயங்கள், நம்மை சிலிர்க்கவைக்கின்றன.

''தினமும் காலை 4 மணிக்கு ஷீர்டி சாயிபாபாவுக்கு நடைபெறும் அபிஷேகத்தை, டி.வி-யில் நேரலையாய் காட்டுவார்கள். அதைத் தரிசிப்பதற்காகவே, அதிகாலை எழுந்துவிடுவேன். கண்கள் வைபவத்தை தரிசிக்க, எனக்குள் பிரார்த்தனைகள் ஓடிக்கொண்டிருக்கும்.

தெரிந்தவர்கள், உறவுக்காரர்களில் எவருக்கேனும் உடல்நிலை சரியில்லையெனில், சீக்கிரம் அவர்கள் குணமாக வேண்டும், பிரசவத்துக்குக் காத்திருக்கும் பெண்கள் எனில், அவர்களுக்கு சுகப் பிரசவம் நிகழ வேண்டும் என்றெல்லாம் பிரார்த்தித்துக்கொள்வேன். சிலநேரங்களில், உடல்நலம் இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் முதியோர்கள், அந்த வேதனையில் இருந்து விடுபட்டு சீக்கிரம் இறைவனின் திருவடியை அடையட்டும் என்றுகூட இறைஞ்சுவது உண்டு'' என்றவர், சற்று நிதானித்துவிட்டு மேலும் தொடர்ந்தார்...

"மற்றவர்களுக்காக மனம் உருகிச் செய்ததில் நிறைய காரியங்கள் நிறைவேறியிருக்கின்றன. 'அதற்கு முழுக்காரணம் நான்தான்' என்று சொல்லமாட்டேன். மற்றவர்களின் கோரிக்கையை இறைவனிடம் கொண்டு செல்வதில் நானும் பங்குகொள்கிறேன் என்ற சந்தோஷம், திருப்தி எனக்கு இருக்கிறது... அதுபோதும் எனக்கு!'' என்கிறார்


https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition
https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7lw

காவாய் கனகத்திரளே போற்றி! ஓம் கயிலை மலையானே போற்றி!! போற்றி!!

சாளகிராமம்

திருக்கயிலாய யாத்திரையில்

## 12 வருட அனுபவமுள்ள சேவையில் முதல் நிறுவனம்

# திருக்கயிலாயம் மானஸரோவர் முக்திநாத் யாத்ரா 2017

மே சித்ரா பௌர்ணமி, ஜுன் புத்த பூர்ணிமா சிறப்பு தரிசனம் - மே முதல் செப்டம்பர் வரை மாதம் ஒரு குழு

## புறப்படும் நாள் : மே 6, ஜீன் 5, ஜீலை 4 ஆகஸ் 3, செப் 1

| | | | |
|---|---|---|---|
| பஸ் மூலம் காட்மாண்டிலிருந்து கயிலாயம் தரிசித்து வர 14 நாட்கள் | காட்மாண்டிலிருந்து நேபாள் கஞ்ச் பஸ் மூலம் சென்று நேபாள் கஞ்ச்லிருந்து ஹெலிகாப்டர் வழியாக கயிலாயம் தரிசித்து வர 10 நாட்கள் | காட்மாண்டிலிருந்து விமானம் மற்றும் ஹெலிகாப்டர் வழியாக கயிலாயம் தரிசித்து வர 10 நாட்கள் | லக்னோவிலிருந்து ஹெலிகாப்டர் வழியாக கயிலாயம் தரிசித்து வர 9 நாட்கள் |
| ரூ. 99,000/- | ரூ. 1,59,000/- | ரூ. 1,69,000/- | ரூ. 1,42,900/- |



## சாளகிராம முக்திநாத் யாத்ரா

புறப்படும் மாதங்கள் : மார்ச், ஏப்ரல், மே, ஜுன், ஜுலை, ஆகஸ்ட், செப் மாதம் இரண்டு குழு

சென்னையிலிருந்து இரயில் வழி 11 நாட்கள் விமானம் வழி 6 நாட்கள்



முக்திநாத்தில் ராமாநுஜர் ஆயிரமாவது ஆண்டின் அவதார திருவிழா (01-05-2017)

சாளக்கிராம தர்சனம், ராமாநுஜர் தர்சனம், பசுபதி நாதர் தர்சனம், ஜலநாராயண, மனக்காம்னா, போக்ரா, காட்மாண்டு, போக்ரா to ஜோம்ஜோம் விமான கட்டணம் பிராமணர் உணவு, டீலக்ஸ் ரூம், நேபாள் பர்மிட், பஸ், சென்னை to காட்மாண்டு போகவர விமானம் மற்றும் இரயில் கட்டணம் தனி

**26,900/-** மட்டுமே 6 நாட்கள்

## ஏன் எங்களிடம் முன்பதிவு செய்ய வேண்டும்

உயர்தரமான ஹோட்டல், A/c பஸ், 4பேருக்கு ஒரு உதவியாளர், நேபாள் கைடு, திபெத் கைடு, கிரி மற்றும் சிவம் சார்பாக 18 முறை கயிலாயம் கிரிவலம் செய்த குரூப் லீடர் பிராமணர் உணவு, ஆக்ஸிசன் வசதி, யாக் வசதி, சிவம் குரூப் தனி விமானம் சிவாச்சாரியார் தலைமையில் மானஸரோவர் ருத்ரஹோமம், அனைத்து யாத்திரைகளுக்கும் இன்சூரன்ஸ் வசதி மற்றும் டிராவல் கிட் பேக்

## அனைத்து கிரி டிரேடிங் ஷோரூம்களிலும் எங்களது கயிலாயம் பற்றிய விவரம் கேட்டுப்பெறவும்

- கயிலையில் ஒளிப்பிழம்பு உலகாள்வதை காணலாம்
- மஹாலிங்கம் பொன்னாக மாறுவதை காணலாம்.
- தேவதைகள் மானசரோவரில் நீராடுவதை காணலாம்
- இந்திரனின் ஐராவத யானை, கயிலாயப் பதியை சுமந்திருக்கும் ரூபத்தை காணலாம்
- சிதம்பர பொற்கோயிலை காணலாம்
- கிழக்கு, தெற்கு, மேற்கு வடக்கு என நான்கு முகங்களை காணலாம்
- பொன்னிற அன்னங்களை காணலாம்.

## சென்ற வருடம் எங்கள் திருக்கயிலாயம் யாத்திரையில் கலந்து கொண்டவர்களின் ஆலோசனை கேட்டு முன்பதிவு செய்யவும்

எங்கள் நிறுவனத்துடன் கயிலை யாத்திரைக்கு வந்த சிவனடியார்களின் திருக்கயிலையில் அனுபவித்த ஆனந்தம், அற்புதம் மற்றும் அனுபவம் அனைத்தையும் நம்மிடம் பகிர்ந்து கொள்வதோடு, கிரி டிரேடிங் மற்றும் சிவம் குரூப் அறியுரை, வழிகாட்டுதலுடன் சென்ற வருடம் திருக்கயிலாயம் வந்தவர்களை பாராட்டி கயிலை மணி பதக்கம் வழங்கப்படும். மார்ச் 5ஆம் தேதி மயிலை கற்பகம் ஹோட்டலில் நடைபெறும். இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்பவர்கள் முன்பதிவு செய்துக்கொள்ளவும். குறைந்த இடங்களே உள்ளன. இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளவும். முன்பதிவு அவசியம்.

**நேபால் தலைமையிடமாக கொண்டு செயல்படும் நிறுவனம்!** **திபெத் நேபாள் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் !!**

## சிவம் குருப் ஹாலிடேஸ்

New No.79, T.S.V.koil Street, Mylapore, Chennai - 600 004

GIRI® For Indian Culture & Tradition

**PH : 044-2462 9878 / 9884111414 / 7338909350, Web : www.shivamholiday.com**

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7lw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

புன்னகையோடு. வியாழன்தோறும் குடும்பத்தோடு மகாபலிபுரம் சாயிபாபா கோயிலுக்குச் செல்வதை வழக்கமாக வைத்திருக்கிறார்.

மகாபலிபுரத்தில் இருந்து 10 கி.மீ. தூரத்துக்கு முன்னதாக இருக்கிறது 'சாய் நகர்'. அங்கே அன்பர் ரமணி, சாயிபாபா கோயில் ஒன்றைக் கட்டியிருக்கிறார். "இந்தக் கோயிலுக்குச் சென்று வருவதில் ஓர் ஆத்ம திருப்தி கிடைக்கிறது" எனச் சொல்லும் ஏவி.எம். சரவணன், அந்தக் கோயிலைப் பற்றிய விவரங்களையும் பகிர்ந்துகொண்டார்.

"இந்தக் கோயிலுக்கு மிகச் சாமான்யர்களும், நடுத்தர வர்க்கத் தினரும், மீனவக் குடும்பங்களுமே அதிகம் வருகிறார்கள். மேலும், மகாபலிபுரம், பாண்டிச்சேரி செல்பவர்களும் இந்தக் கோயிலுக்கு வந்து தரிசனம் செய்துவிட்டுப் போகிறார்கள். கோயிலில் வி.ஐ.பி-களுக்கு என்று எந்தச் சலுகையும் கிடையாது. எல்லோருக்கும் ஒரேவிதமான கவனிப்புதான். அர்ச்சனைத் தட்டில் ஆரம்பித்து தரிசனம் வரை எந்த இடத்திலும் எதற்காகவும் காசு வாங்குவது இல்லை. பாபா பற்றிய புத்தகத்தைக்கூட இலவசமாகவே தருகிறார்கள்.

'தான் கட்டிய கோயில்தானே' என்று ரமணியும் உரிமை எடுத்துக்கொள்வது இல்லை. அவரும் பக்தர்களோடு பக்தராக வரிசையில் நின்றுதான் தரிசனம் செய்கிறார். அந்த அளவுக்கு எளிமை."

கோயிலைக் குறித்துச் சிலாகிக்கும் ஏவி.எம் சரவணன், "வியாழக்கிழமை என்றால் காலையில் எட்டேகால் மணிக்கெல்லாம் கோயிலுக்குப் போய்விடுவோம். எனக்குத் தரையில் சப்பணமிட்டு உட்கார முடியாது என்பதால் நாற்காலியில் அமர்ந்து கொண்டுதான் பாபாவைத் தரிசிப்பேன்.

விஷ்ணு என்பவர்தான் பாபாவுக்கு அபிஷேகம் செய்வார். ரொம்ப அற்புதமாக... ஒரு குழந்தையைக் குளிப்பாட்டுவதுபோல், அபிஷேகம் செய்து, மந்திரங்கள் சொல்லி, தீபாராதனை காட்டி... பாபாவுக்கான அத்தனை சேவைகளையும் மனம் லயித்துச் செய்வார். எனக்கு அது ரொம்பப் பிடிக்கும். ஆராதனை நடக்கும் ஒன்றரை மணி நேரமும் என் கவனமெல்லாம் இறைவனின் திருவடியிலேயே குவிந்து நிற்கும். அந்த பேரானந்தம், வார்த்தை களில் விவரிக்க முடியாதது. எந்தச் சஞ்சலமும் இல்லாமல் மனம் முழுக்க இறைவனே நிறைந்திருக்கும் அற்புதமான தருணம் அது!

எனக்கு மட்டுமல்ல... என் ஒட்டுமொத்தக் குடும்பத்துக்கும் நிம்மதியையும் சந்தோஷத்தையும் தருவது, ஸ்ரீசாயி தரிசனம்தான். ஆமாம்... எங்களுக்கு எல்லாமே சாயிதான்!" - சொல்லும்போதே, ஏவி.எம் சரவணனின் கண்களில் பேரானந்தத்தை அடைந்துவிட்ட பரவசம் தெரிகிறது. ச





https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw





https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw




## இங்கு வந்தால்...

# இறப்பும் இல்லை பிறப்பும் இல்லை!

**தர்மோ மே சதுரங்க்ரிகஸ் ஸுசரித: பாபம் விநாசம் கதம்**
**காமக்ரோத மதாதயோ விகலிதா: காலா: ஸுகாவிஷ்க்ருதா:**
**ஜ்ஞானானந்த மஹெளஷதி: ஸுப லிதா கைவல்யநாதே ஸதாமான்யே**
**மானஸ புண்டரீக நகரே ராஜா வதம்ஸே ஸ்த்திதே**

*கருத்து:* தாமரையாகிய மனதில் ஏக சக்கரவர்த்தியும் எல்லோராலும் வணங்கப்பெறுபவருமாகிய சிவபெருமான் வீற்றிருப்பதால், தவம், தயை, தூய்மை, சத்தியம் ஆகிய நான்கு பாதங்களை உடைய தர்மம் கடைப்பிடிக்கப் படுகிறது. காமம், கோபம், கர்வம் நீங்கி பாவங்கள் நசித்துவிட்டன. எப்போதும் எல்லா காலங்களிலும் பேரின்பமே வெளிப்பட்டு ஞானானந்தம் என்னும் பயிர் தழைக்கச் செய்கிறது.

– *சிவானந்த லஹரி*



22

**ம**ஹா பெரியவா உலக நன்மைக்காக நீண்டநெடிய தவம் மேற்கொண்ட தேனம்பாக்கம், தலம், மூர்த்தி, தீர்த்தம் என்னும் மூன்று விசேஷங்களைக்கொண்ட புனிதத்தலமாகும்.

இங்குள்ள தீர்த்தம் பிரம்மதேவரால் ஏற்படுத்தப்பட்ட காரணத்தினால் பிரம்ம தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது.

இந்தத் தலத்தில்தான் பிரம்மதேவர் தம்முடைய படைப்புத் தொழிலை மேற்கொள்வதற்காக சிவபெருமானைத் தியானித்து யாகம் செய்தார். இப்படி, பிரம்மன் சிவ வழிபாடு செய்த தலம் என்பதால் 'பிரம்ம காஞ்சி' என்றும், சிவபெருமானுக்கு உரிய ஆஸ்தான தலம் என்பதால் 'சிவா ஸ்தானம்' என்றும் தலச் சிறப்புடன் திகழ்கிறது, தேனம்பாக்கம்.

இங்ஙனம் தீர்த்தச் சிறப்புடனும், தலச் சிறப்புடனும் திகழும் தேனம்பாக்கத்துக்கு, மூர்த்தியால் கீர்த்தி கிடைத்தது எப்படி?

இந்தத் தலத்தில், ஐயன் பிரம்மபுரீஸ்வரரின் கருவறையில் அம்மையப்பர் கணபதியுடன் சோமகணபதியாக திருக்காட்சி தருவதாகப் பார்த்தோம் அல்லவா? அந்தவகையில், 'மூர்த்தி விசேஷம்' கொண்டதாகவும் திகழ்கிறது, இந்தத் தலம்.

தேனம்பாக்கத்தில் பிரம்ம தீர்த்தத்தில் இருந்து எடுக்கப்படும் நீர்தான் ஐயன் பிரம்மபுரீஸ்வரரின் அபிஷேகத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, புனிதமான இந்தத் தீர்த்தத்தில் பக்தர்கள் ஸ்நானம் செய்ய அனுமதி கிடையாது. பாதங்களைக்கூட நனைக்கக்கூடாது. கைகளினால் தீர்த்தத்தை எடுத்து ப்ரோட்சணம் செய்துகொண்டாலே, பிரம்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்த புண்ணியம் கிடைத்துவிடும் என்கிறார்கள்.

இப்படி, மகிமைகள் பல கொண்ட தேனம்பாக்கத்தில்தான் ஜகத்குரு ஆதிசங்கரர் தம்முடைய இறுதிக்காலத்தில் வந்து தங்கி இருந்ததாகச்



www.vikatan.com
https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

சொல்கிறார்கள்.

அப்படி, ஆதி ஆசார்யர் விஜயம் செய்த இந்தப் புண்ணியம்பதியில், உலக நன்மைக்காக ஏகாந்தமாகத் தவம் மேற்கொள்ள திருவுள்ளம் கொண்டார் மஹா பெரியவா. தாம் அங்கே தவம் மேற்கொள்ள ஒரு சிறு குடிலே போதும் என்றும் சொல்லிவிட்டார்.

தேனம்பாக்கத்தில் அவர் தங்கியிருந்த காலத்தில், தினமும் தம் திருக்கரங்களால் ஒரு கட்டு தர்ப்பையை எடுத்து, தம்முடைய குடிலை தாமே சுத்தம் செய்துகொள்வாராம். அத்துடன், தினமும் விஷ்ணு சஹஸ்ரநாமம் ஜபித்தபடியே விஷ்ணு காஞ்சி வரை சென்று வருவாராம். ஷண்மத ஸ்தாபனம் செய்த ஆசார்யரின் வழித்தோன்றல் அல்லவா மஹா பெரியவா?!

தேனம்பாக்கத்தில் நாளும் வேத கோஷம்



ஒலிக்க வேண்டும் என்பது மஹா பெரியவா திருவுள்ளம். அதன் காரணமாகவே மஹா பெரியவா பெயரில் இங்கே ஒரு வேத பாடசாலையும் நடைபெற்று வருகிறது. சதா காலமும் வேத கோஷம் ஒலிப்பதன் காரணமாக இந்தத் தலம் புனித அதிர்வலைகள் நிறைந்த தலமாகவும், அதன் பயனாக தரிசிப்பவர்களின் மனதில் அளவற்ற மன நிம்மதியைத் தருவதாகவும் திகழ்கிறது.

தேனம்பாக்கம் பிரம்மபுரீஸ்வரருக்கு 'இறவா ஸ்தானேஸ்வரர்' என்றும் ஒரு திருப்பெயர் உண்டு. 'தேவ தேவ மமாஸ்தானம் சிவாஸ்தானம் மிதம் க்ருதம்; சிவாஸ்தானேஸ்வரம் நாம ஸ்தானமேதத் பிரசித்தமத்' என்று சிறப்பித்துச் சொல்வார்கள். இந்த இறவாஸ்தானேஸ்வரரைத் தரிசித்து வணங்கினால், பிறப்பும் இறப்பும் இல்லா பேரின்பப் பெருநிலையை அடையலாம் என்று பெரியோர்கள் சொல்வார்கள்.

மற்ற தலங்களைவிடவும் இந்தத் தேனம்பாக்கம் திருத்தலத்துக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. ஆமாம், இந்தத் திருத்தலத்தால் இன்னும் சில திருத்தலங்கள் தோன்றினவாம்.

பிரம்மா யாகம் பண்ணின இடம் தேனம்பாக்கம் என்று நாம் முன்பே பார்த்தோம். ஆனால், யாகத்துக்கு அவர் சரஸ்வதியைக் கூப்பிடவில்லை. அதனால் சரஸ்வதிக்குக் கோபம். நதியாக உருவெடுத்து வேகமாக வந்தாள். ஊரையே மூழ்கடிக்கும் வேகம். அதனால், அந்த நதிக்கு வேகவதி என்றும் பெயர் உண்டு.

பிரம்மனின் யாகத்தைக் காக்க வேண்டும் என்றால், வேகவதியின் வேகத்தைத் தணித்தாக வேண்டுமே! அவளின் வேகத்தைத் தணிக்கும் பொருட்டு, சிவனாரின் ஆணைப்படி, வேகவதி வரும் வழியின் குறுக்கே மகா விஷ்ணு சயனம் கொண்டுவிட்டார். சரஸ்வதி(வேகவதி)யால் அவரைக் கடந்துவர முடியவில்லை. அதனால் யாகமும் நிறைவேறியது. சிவனார் சொன்னபடி மகா விஷ்ணு செய்த காரணத்தால், அவருக்குச் 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என்ற திருப்பெயர் ஏற்பட்டது.'யதோத்தகாரி' என்றும் அவருக்குப் பெயர் உண்டு. இந்தப் பெருமாள் கோயிலை இன்றும் காஞ்சியில் தரிசிக்கலாம்.

அதேபோல், பிரம்மாவின் யாகத்தில் தோன்றியவர்தான் வரதராஜ பெருமாள். இன்றைக்கும் அந்த உற்ஸவ மூர்த்தத்தில் அக்னி பட்ட வடுவைக் காணலாம். மேலும், சரஸ்வதி நதியாகப் பெருக்கெடுத்து வந்தபோது, உலகமே இருண்டுவிட்டதால், யாகம் நல்லபடி நிறைவேற பெருமாள் ஜோதிமயமாகத் தோன்றினார். அவர்தான் தூப்புல் பகுதியில் தீபப்பிரகாசர் என்றும் விளக்கொளி பெருமாள் என்றும் திருப்பெயருடன் கோயில் கொண்டுள்ளார். இப்படி சொன்னவண்ணம் செய்த பெருமாள், வரதராஜ பெருமாள், விளக்கொளி பெருமாள் என்று மூன்று திருத்தலங்கள் தோன்றுவதற்கு, தேனம்பாக்கம் தலமும், அங்கே பிரம்மன் நிகழ்த்திய யாகமுமே காரணம் என்கின்றன ஞானநூல்கள்.

துர்கையின் சாந்நித்தியமும் மிகுந்த திருத்தலம் தேனம்பாக்கம். காரணம் என்ன தெரியுமா?

**- திருவருள் தொடரும்**




www.vikatan.com

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

# ஆதவன் வழிபட்ட மாசி கோயில்கள்!



கும்பகோணம் அருள்மிகு ராமஸ்வாமி திருக்கோயிலில் அருளும் ராமனும் சீதையும், மாசி மகம் திருநாளன்று மகாமகக் குளத்துக்கு எழுந்தருளி, தீர்த்தம் வழங்குகிறார்கள்.

கரூரில் அமைந்திருக்கிறது அருள்மிகு கல்யாண பசுபதீஸ்வரர் திருக்கோயில். இந்த ஈஸ்வரரை, மாசி மாதத்தில் ஐந்து நாள்களில், சூரிய பகவான் தன் கிரணங்களால் வணங்கி வழிபடுகிறார்.

சிதம்பரம் - அருள்மிகு தில்லை காளியம்மன் கோயிலில், மாசி மாதம் பௌர்ணமி திருநாளன்று, சூரியக் கிரணங்கள் அம்பிகையின் மீது படிந்து வழிபடுவதைத் தரிசிக்கலாம். அதேபோல், திருச்சேறை செந்நெறியப்பர் ஆலயத்தில், மாசி மாதம் 13, 14, 15 ஆகிய தேதிகளிலும், மன்னார்குடி அருகேயுள்ள திருராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதர் கோயிலில், மாசி 22 முதல் 27-ம் தேதி வரையும் (மாலை நேரத்தில் மட்டும்) சூரியனின் வழிபாடு நிகழ்கிறது.

திருவெண்காடு தலத்தில் உறையும் அம்பிகை, அருகிலுள்ள திருநாங்கூரில் மதங்க முனிவருக்கு மகளாகப் பிறந்தவள். ஆகவே, மாசி மாதத்தில் திருவெண்காடு தலத்தில் நிகழும் இந்திரோத்சவத்தின்போது திருநாங்கூரிலிருந்து அம்பிகைக்குச் சீர் கொண்டு வரப்படுகிறது. திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜர் திருக்கோயிலில் மாசி மகத்தன்று, தியாகராஜரின் 18 வகை திருநடனங்களைக் கண்டு மகிழலாம்.

**- ஆர்.பத்மப்ரியா,** சேலம்

## ஆனந்த தாண்டவர்!

மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள திருத்தலம், ஆனந்த தாண்டவபுரம். ஆனந்த மாமுனிவருக்காக இறைவன் நடனத் திருக்கோலம் காட்டியருளிய ஊர் என்பதால் இப்பெயர். இங்கே அருளும் நடராஜப் பெருமான், தம்முடைய ஒரு காலின் கட்டைவிரலை ஊன்றி, மற்றொரு காலை நாசிக்கு நேராக உயரத் தூக்கியவண்ணம் ஆடல் கோலம் காட்டுகிறார்.

**- எஸ்.விஜயலக்ஷ்மி,** சென்னை-88



www.vikatan.com

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

■ டாக்டர் **ஜெயம் கண்ணன்**

**இறைவன் ஜோதி ஸ்வரூபம்! மெய்யடியார்கள் பலர் உணர்ந்த இந்த உண்மையை, இந்தக் கலியுகத்தில் மானிடர்களான நாமும் உணரவேண்டி பகவான் நமக்கு ஜோதியாகவே காட்சி தரும் இடங்கள் பல உள்ளன!**

**சபரிமலையில் மகரஜோதி, வடலூரில் ஜோதி தரிசனம் ... இவையெல்லாமே அந்த உண்மையை இன்றும் மெய்ப்பிக்கும் சாட்சியங்கள்.**

**ஊட்டத்தூரிலும் சுத்த ரத்தினமாய் ஜொலிக்கும் இறைவனின் லிங்கரூபம், தனக்குள் ஆரத்தி சுடரை உள்வாங்கி, ஜோதியைப் பிரதிபலிக்கிறது. வேறெந்த தலத்திலும் காண்பதற்கரிய இந்த அற்புதக் காட்சியை, அனவரதமும் தரிசித்துக்கொண்டே இருக்கலாம்; அவ்வளவு அற்புதமானது!**

பிரம்மதேவனுக்கு தோஷ நிவர்த்தி, மன்னர் ராஜராஜ சோழனுக்கு ஆயுள் நீடிப்பு, வேண்டுவோருக்கு வேண்டிய வரம் என வாரி வழங்கும் இந்த வள்ளலை, மாசி மாதத்தில் சூரிய பகவானும் விழுந்து வணங்கி, வழிபடுகிறார். ஆண்டுதோறும், மாசி மாதம் 12, 13, 14 தேதிகளில் (இந்த நாள்கள் ஒவ்வொரு வருடம் சிறிது மாறுபடலாம்) சூரியனின் கதிர்கள், கருவறைக்குள் வந்து மூலவர் லிங்கத்தின் மேல் விழுகின்றன. காலை நேரத்தில், 5 நிமிட நேரம் சூரியனார் சிவபூஜை செய்வது கண்கொள்ளாக் காட்சி!

நிதானமாக ஆரத்தியைக் காட்டி ஜோதி தரிசனம் செய்வித்த பின்னர், அர்ச்சகர், "வைகாசி பௌர்ணமி இங்கே ரொம்ப விசேஷம். குழந்தை இல்லாத தம்பதிகள், ஒரு வைகாசி பௌர்ணமி தினத்தில் இங்கே வந்து சுத்தரத்தினேஸ்வரருக்கு அர்ச்சனை செய்து வழிபாடு செய்யணும். அதற்கு பிறகு, தொடர்ந்து ஒவ்வொரு பௌர்ணமியிலும் இங்கே வந்து வழிபடுவதுடன், அடுத்த வைகாசி பௌர்ணமியில் வழிபாட்டை பூர்த்தி செய்யணும். இந்த மாதிரி வழிபாடு செய்த பல தம்பதிகளுக்கு குழந்தை பாக்கியம் கிடைச்சிருக்கு!" என்றபடி விபூதி பிரசாதம் வழங்க, பயபக்தியோடு பூசிக் கொண்டோம்.





www.vikatan.com
https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw


# உன்னத வாழ்வு தரும் உட்டத்தூர்!



அந்த விபூதியில் அப்படி ஒரு மணம்! திரையுலக பிரபலம் ஒருவர், இந்தக் கோயிலுக்கு வரும்போது, தென்பகுதியில் இருக்கும் கோசாலை ஒன்றில், பாரம்பர்ய முறையில் ஆசாரத்துடன் தயாரிக்கப்படும் விபூதியைக் கொண்டுவந்து கோயிலுக்கு வழங்கியதாகக் கூறினார் அர்ச்சகர்.

“பாக்கெட்டுகளில் விக்கிற, சென்ட் கலந்த, கலப்பட விபூதி எல்லாம் இங்கே உபயோகிக்கிற தில்லை” என்றும் சொன்னார்.

மூலவரை கண் நிறைய தரிசித்து, மனம் நிறைய வேண்டி வணங்கித் தொழுத பின், உள்பிராகாரம் வருகிறோம். அந்த மண்டபத்திலேயே வடக்கு திசையில், பிராகாரம் முடியும் இடத்தில், அதாவது மூலவர் சந்நிதிக்கு இடதுபுறத்தில் அமைந்திருக் கிறது, உலகப் பிரசித்திப்பெற்ற ஸ்ரீபஞ்சநதன





https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

# அரிதினும் அரிதான பஞ்சநதனக் கல்!

கடவுள் திருவுருவங்களைச் செதுக்குவதற்கு, ஆலிங்கநதனம், பஞ்சநதனம், சிங்கநதனம், யானைநதனம், யாழி நதனம் என்று ஐந்து வகையான சிலாக்கற்கள் உள்ளன. இதில் 'பஞ்ச நதனம்' என்ற பாறை தெய்விக வல்லமை மிக்கது என்பது சிற்பக்கலை வல்லுநர்களது கருத்து.

▸▸ நவரத்தின மோதிரம் எப்படி தனது ஒளியால் நமது கவனத்தை ஈர்க்குமோ, அதைப்போன்று பஞ்சநதனக் கல்லும் சக்தி வாய்ந்த கதிர்களைப் பரவச்செய்து நமக்குள் ஆற்றலை நிரப்புகிறது. இத்தகைய பஞ்சநதனக் கல்லாலான ஊட்டத்தூர் நடராஜர் சிலை, ஆசிய கண்டத்தின் ஆன்மிக அதிசயம்.

▸▸ பஞ்சநதனக் கல் என்பது, பார்ப்பதற்கு வழக்கமான கருங்கல்லைப் போன்ற தோற்றம் கொண்டதுதான். எனினும் சில தருணங்களில் கருநீலமாகவும், கரும்பச்சை வண்ணத்திலும்கூட காட்சியளிக்கும். 'பல கோடி சூரியன்களின் சக்தியை உள்ளடக்கியது இந்தக் கல்' என்பது சித்தர்கள் வாக்கு.

அது எப்படி என்று கேட்கத் தோன்றும். கண்ணுக்குத் தெரியாத ஒரு நுண்ணிய அணுவுக்குள், எவ்வளவு மகத்தான அணுசக்தி புதைந்திருக்கிறது! அண்டத்தையே அழிக்க வல்ல ஆற்றல், ஓர் அணுவுக்குள் இருக்கிறது என்பதையே நாம் அரை நூற்றாண்டுக்கு முன்புதானே அறிந்தோம்? அதே போலத்தான், பஞ்சநதனப் பாறையின் சக்தியும்!


▸▸ இந்த வகைப் பாறைகள் அரிதினும் அரிதானவை. பத்து லட்சம் கோடி பாறைகள் உருவாகும்போது, அவற்றுள் ஒன்றே ஒன்றுதான் பஞ்சநதனப் பாறையாக மாறும் வாய்ப்பு உண்டு என்றும் சித்தர்கள் விளக்கியுள்ளார்கள்.

▸▸ சூரியனிலிருந்து பூமிக்கு வரும் கிரணங்களில் பலவகை உண்டு. அவை ஒவ்வொன்றும் ஒருவித ஆற்றலுடன் திகழும். பூமியில் வாழும் உயிர்கள் அந்தக் கதிர்களை கிரகித்து, தமக்குத் தேவையான சக்தியை அதிலிருந்து பெற்று உயிர் வாழ்கின்றன. அவ்வகையில், சூரியனிலிருந்து வெளிப்படும் 'சிற்சபேச' கதிர்களை தனக்குள் ஈர்க்கிறது பஞ்சநதனப் பாறை. பக்தியில் மூழ்கித் திளைத்து பரமாத்மாவைத் தரிசிப்பவருக்கு, இதை உணர




www.vikatan.com
https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw



முடியும்.

▸▸ பஞ்சநதனப் பாறைகளால் பஞ்ச ஸ்வரங்களையும் உருவாக்க முடியும். இந்தப் பாறையைத் தட்டினால், இசையின் அடிநாதமான சப்த ஸ்வரங்களில் ஐந்து ஸ்வரங்களை கேட்க முடியும்.

▸▸ பஞ்சநதனப் பாறையின் இன்னோர் அபூர்வமான சிறப்பு, மனிதக் கரங்களால் இதைச் செதுக்கி சிலைகள் செய்ய முடியாது. சித்தர்களின் ஆன்மிகச் சக்தியால், பஞ்சநதனப் பாறைகளில் இறைவனின் உருவங்கள் தானாகவே உருவாகும் என்று சொல்லப்படுகிறது.

அவ்வகையில் ஊட்டத்தூரில் அருள்பாலிக்கும் ஆடல் வல்லானின் விக்கிரகம், உளி இல்லாமல் செதுக்கப்பட்டது என்கிறார்கள். இதைப்போல பல கோயில்களில் அருள்பாலிக்கும் நந்தி உருவங்கள், தெய்விக சக்தியால் உருவாக்கப் பட்டிருக்கின்றன என்றாலும், பஞ்சநதனக் கல்லில் உருவான மூர்த்தி ஊட்டத்தூர் நடராஜர் மட்டுமே எனலாம்.

▸▸ 'நவ லிங்க பூஜை' எனப்படும் ஒன்பதுவிதமான பூஜைகளை நிறைவுசெய்த பின்னரே, பாறையில் பஞ்சநதன நடராஜர் உருவம் தோன்றும் என்றும், அதன் பிறகுதான் மானிடர்கள் தரிசனம் செய்ய முடியும் என்றும் கூறுவர். ஆகவேதான், பஞ்சநதனப் பாறையும் அதில் உருவான நடராஜ மூர்த்தியின் தரிசனமும் சாந்நித்தியம் மிகுந்ததாகச் சொல்லப்படுகிறது.

இவ்வளவு மகத்துவங்கள் மிகுந்த ஊட்டத்தூர் ஆடல்வல்லானை, வாழ்வில் ஒருமுறையேனும் தரிசித்து, நமது பிரார்த்தனைகளையும் கோரிக்கை களையும் அவரின் திருவடியில் சமர்ப்பித்தால், அவை அத்தனையும் நிச்சயம் நிறைவேறும்.

நடராஜர் - ஸ்ரீசிவகாமசுந்தரி அம்மன் சந்நிதி.

கோயிலை வலம் வந்து ஒவ்வோர் இடத்தைக் கடக்கும்போதும், ஒவ்வொரு சந்நிதியில் தரிசிக்கும் போதும், அவற்றின் புராதன கீர்த்தியிலும் அழகிலும் மெய்ம்மறந்து நிற்கும் அதேநேரம், இந்தச் சிறப்புகளுக் கெல்லாம் முதன்மையானதாகத் திகழும் 'பஞ்சநதன நடராஜரை எப்போது தரிசிக்கப் போகிறோம்?' என்ற பேராவல் நமக்குள் எழுவதையும் தவிர்க்க முடிய வில்லை.

இதோ... நமது பேரவாவினைப் பூர்த்திசெய்யும் சந்நிதிக்கு வந்துவிட்டோம். ஸ்ரீநடராஜருக்கும் சிவகாமி அம்மனுக்கும் சேர்ந்தே, சற்றுப் பெரிதாக... சிறு மண்டபம் போன்று அமைந்திருக்கிறது இந்தச் சந்நிதி. உயரமான பீடத்தில், வழக்கத்தை விடப் பெரிய வடிவில் இருக்கிறார் நடராஜர். எல்லா இடங்களிலும் ஐம்பொன் உலோகத்திலேயே நடராஜரைப் பார்த்த நம் கண்களுக்கு, கருங்கல் விக்கிரகமாகத் திகழும் இந்த ஆடல்வல்லானின் தரிசனம் வித்தியாசமாகவும் விசேஷமாகவும் இருக்கிறது. பல்லாண்டு காலமாக அபிஷேகங்கள் கண்டு கண்டு, பளபளப்பு ஏறி மினுமினுக்கும் இந்த நடராஜ மூர்த்தத்தின் அழகை என்னவென்பது?! இமைக்கவும் மறந்து, அணு அணுவாக உள் வாங்கினோம்!

"ஓ... இவர்தான் அந்த மகா சக்தி வாய்ந்த பஞ்ச நதன நடராஜரா? இவர்முன் நின்று என்ன நினைத் தாலும் நடந்துவிடும் என்று படித்திருக்கிறேன்!" என்று நான் கூறியதை ஆமோதித்தார் நடராஜ குருக்கள்.

"மிக அரிதான 'பஞ்சநதனம்' என்னும் கல்லால் ஆன மூர்த்தி இவர். ஆசியாவிலேயே இதுபோன்ற மூர்த்தி இவர் மட்டும்தான் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.



பாறைகளின் மேல் படரும் 'அந்தக நரிமணம்' என்கிற அபூர்வ மூலிகையின் வேர், குறிப்பிட்ட ஓரிரு பாறைகளைப் பிளக்கும். அப்படியான பாறையையே 'பஞ்சநதனக் கல்' என்று சொல்கிறார்கள். சூரியனின் கதிர்களிலிருந்து, பன்மடங்கு ஆற்றலை ஈர்க்கும் வல்லமை இந்தக் கல்லுக்கு உண்டு. அதியற்புதமான இந்தக் கல்லில் செதுக்கப்பட்ட சிலா வடிவம் என்பதால்தான், இங்கே இவருக்கு 'பஞ்சநதன நடராஜர்' என்ற திருநாமம்!



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

கல்லிலே நடராஜரைப் பார்ப்பதே அபூர்வம்... அதிலும் பஞ்சநதனக் கல்லில் பார்ப்பது ரொம்ப ரொம்ப அபூர்வம்! சூரியனின் அதி சக்திவாய்ந்த நல்ல ரேகைகளை உள்வாங்கியிருப்பதால், பஞ்ச நதனக் கல் இருக்குமிடத்தைச் சுற்றிலும் அதன் அதிர்வலைகள் பரவி இருக்கும். அதனால்தான், இங்கே மனமொன்றி, தீவிரமாகப் பிரார்த்திக்கும் எந்தவொரு நல்ல வேண்டுதலும் நிறைவேறுகிறது!

தேவலோகத்து இந்திரனே, தான் பதவியிழந்த போது, பஞ்சநதன நடராஜரை வழிபட்ட பிறகுதான் மீண்டும் பதவியைப் பெற்றதாகப் புராணம் சொல்லும். இப்போதும் பதவி வேண்டுவோர், பதவி உயர்வு வேண்டுவோர் இந்த பஞ்சநதன நடராஜரை வழிபட்டுச் செல்கிறார்கள். பதவி இழந்தோர், மீண்டும் அதை பெறுவதற்காக இங்கு வந்து பிரார்த்தனை செய்வது வழக்கம். இந்தப் பஞ்சநதன நடராஜர் பக்தர்களின் வேலை வாய்ப்பு, வேலை உயர்வு, பிரமுகர்களின் பதவி மற்றும் பதவி உயர்வுக்கு மட்டுமில்லாமல், உடல் நலக் கோளாறுகளை... முக்கியமாக சிறுநீரகப் பிரச்னைகளையும் தீர்த்துவைக்கிறார்" என்றார் குருக்கள். ராஜராஜ சோழனுக்கு வந்த சிறுநீரக நோயைத் தீர்த்து, அவருடைய ஆயுளை நீட்டித்ததாகச் சொன்னேன் அல்லவா? அவரைப் போலவே இன்றைக்கும் பக்தர்கள் பலரும் ஊட்டத்தூருக்கு வந்து, பஞ்சநதன நடராஜருக்கு வெட்டிவேர் மாலை சார்த்தி, பிரம்ம தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து, தீர்த்தத்தையும் மாலையையும் வாங்கிச் செல்கிறார்கள். அந்த வெட்டிவேர் மாலையில் 48 கண்டுகள் இருக்கின்றன. இந்த மாலையிலிருந்து, ஒரு நாளைக்கு ஒரு வெட்டிவேர் துண்டை வெட்டி எடுத்து, இரவில் பிரம்ம தீர்த்தத்தில் ஊறவைக்க வேண்டும். ஒரு டம்ளரில் பிரம்ம தீர்த்தம் சிறிதளவு ஊற்றி, நம் வீட்டுத் தண்ணீரில் மீதியை ஊற்றியும் வைக்கலாம். மறுநாள் காலையில் வெறும் வயிற்றில், வெட்டிவேர் ஊறிய தண்ணீரை வடிகட்டி அருந்த வேண்டும். பெண்கள் வீட்டு விலக்காகும் நாளில் இதை அருந்துவதைத் தவிர்க்கவேண்டும். மேலும், இந்த 48 நாள்களில் சைவ உணவு மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தப் பிரார்த்தனை முடியும்போது, பக்தர்களின் சிறுநீரகப் பிரச்னை கண்டிப்பாகக் குறைந்து, பின்னர் மறைந்து, உடல்நலம் சீராவது, பல பக்தர்கள் கண்டு அனுபவித்த உண்மை.

"சிறுநீரகப் பிரச்னை என்றில்லை... உடலுக்கு என்ன பிரச்னை என்றாலுமே, இந்த பஞ்சநதன நடராஜரை நம்பிக்கையோடு கும்பிட்டு வந்தால்

ஸ்ரீ காமாட்சி அம்மன் துணை

**ஆதரவற்றபெண்கள் முதியோர்களுக்கு அன்னதானம் செய்ய தங்களை அன்புடன் அழைக்கின்றோம்**


அன்புடையீர் வணக்கம், அருள்மிகு ஸ்ரீ பத்மாவதி தாயார் ஸ்ரீ வெங்கடேச பெருமாள் மாங்காடு ஸ்ரீ காமாட்சி அம்மன் அருளால் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் அனைத்து நலன்களையும் தந்தருள பிரார்த்திக்கின்றோம். ஸ்ரீ பத்மாவதி தாயார் ஸ்ரீ வெங்கடேச பெருமாள் ஸ்ரீ காமாட்சி அம்மன் அருளால் நமது ஸ்ரீ பத்மாவதி அம்மா முதியோர் இல்லம் ஆதரவற்றமுதியோர்கள், விதவை பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கும், காக்கும் உயர்ந்த தெய்வீக தொண்டினை எந்தவித பிரதிப்பலன் எதிர்பாராது கருணை அடிப்படையில் செய்து வருகிறது. **"கருணை கொண்ட நெஞ்சம் அது கடவுள் வாழும் இல்லம்"** என்றகவிஞரின் சொல்லுக்கேற்ப எங்களுடன் தங்களும் சேர்ந்து ஆதரவற்றோர்களுக்கு அன்னதானம் செய்து தங்கள் பிரதிப்பலனை அடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தினந்தோறும் நடைபெறும் அன்னதானத்திற்கும் தங்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் பிறந்தநாள், திருமணநாள், புத்தாண்டு, தீபாவளி, பொங்கல், அமாவாசை, பௌர்ணமி, மற்றும் முக்கிய பண்டிகை தினங்களிலும் தங்கள் முன்னோர்களின் நினைவு தினங்களிலும் அன்னதானம் செய்யும்படி தங்களை அன்புடன் அழைக்கின்றோம். தாங்கள் அனுப்பும் நன்கொடையை தொகையாகவும், பொருளாகவும் இருந்தாலும் ஏற்றுக்கொள்ளகிறோம். நன்கொடை அனுப்பும் அன்பர்களுக்கு மாங்காடு ஸ்ரீ காமாட்சி அம்மன் பிரசாதமும், தங்கள் பூஜை அறையில் வைத்து பூஜித்து அருள்பெறஸ்ரீ காமாட்சி அம்மன் படம் அனுப்பி வைக்கின்றோம். தாங்கள் அனுப்பும் நன்கொடைத்தொகைக்கு ஏற்றவாறு சென்னையிருந்து வெளிவரும் இதழ்களில் தாங்கள் விரும்பிய இதழ்களின் பெயரை தெரிவித்தால் அந்த இதழ்களும் ஸ்ரீ காமாட்சி அம்மன் விளக்கும் ஸ்ரீ பத்மாவதி தாயார் ஸ்ரீ வெங்கடேச பெருமாள் வெள்ளி காசும் அனுப்பி வைக்கின்றோம்.

நமது இல்லத்திற்கு தற்போது இடம் குறைவாக உள்ளதால் புதிதாக உதவிகேட்டு வரும் அனைவருக்கும் உதவி செய்ய முடியவில்லை என்பதால் கருணை உள்ளம் கொண்ட தாங்கள் கட்டிடம் கட்டுவதற்கு தங்களால் முடிந்த தொகையினை கட்டிட நிதியை அனுப்பி வைத்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தாங்கள் அனுப்பும் நன்கொடையை நெட்பேங்கிங் மூலமாக அனுப்புவதற்கு Sri Padmavathi Amma Aged Home Current A/c. No. 05760400009955 Bank of Baroda, Mangadu, Chennai-600122. NEFT IFSC Code : BARBOMANGAD. MICR Code : 600012026. மற்றும் Cheque / D.D. / M.O. மூலமாகவும் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


(நன்கொடைகளுக்கு 80G **பிரிவின்படி வருமான வரிவிலக்கு உண்டு.)**

**ஸ்ரீ பத்மாவதி அம்மா முதியோர் இல்லம்**

Public Charitable Trust (Regd)



எண்.3, புங்கவனம்மாள் அவின்யூ, வடக்கு ரகுநாதபுரம் மெயின்ரோடு, மாங்காடு, சென்னை - 600122.
தமிழ்நாடு, இந்தியா.Phone No. : 044-65129170, Cell : 09282234541
E-mail : padmavathyoldagehome@gmail.com www. padmavathi amma aged home.com



சேவை மனப்பான்மையுடன் இல்லத்தில் தங்கி நடக்க முடியாத முதியோர்களை கவனித்துக் கொள்ளும் வேலைக்கு பெண்கள் மற்றும் ஆண்கள் தேவை



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw



world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

போதும். நோய் அகன்றுவிடுகிறது!" என்று அழுத்தமாகச் சொல்கிறார் அங்கு வந்த பக்தர் ஒருவர்.

இயற்கையிலேயே வெட்டிவேருக்கு குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடிய தன்மையும் மருத்துவ குணங்களும் உள்ளன. அதை, சக்தி மிகுந்த பஞ்சநதனக் கல்லால் ஆன இறைவன் மீது சார்த்துகிறோம். அப்போது, இன்னும் சிறப்பு கூடுகிறது. அதன்பின்னர், பிரம்மனுக்கு தோஷம் தீர்த்த அற்புதமான பிரம்ம தீர்த்தத்தின் நீரில் அதை ஊறவைத்து அருந்தும்போது... அதோடு நம் பக்தியும் நம்பிக்கையும் இறைவன் அருளும் சேரும்போது... உடலில் என்ன பிரச்னை இருந்தாலும் ஓடிவிடும் என்பது உண்மைதானே!

இந்தத் தலத்தின் பெருமையையும் சக்தியையும் அறிந்து, எங்கிருந்தெல்லாமோ பிணியோடும் வேதனையோடும் வரும் அடியார்கள், இறைவன் திருமேனியில் சார்த்தப்பட்ட வெட்டிவேர் மாலையையும், அவன் திருத்தாளில் சமர்ப்பித்து அர்ச்சனை செய்யப்பட்ட பிரம்ம தீர்த்தத்தையும் பக்திப் பரவசத்தோடு பெற்றுச் செல்கிறார்கள்.

ஆடல் வல்லான் சந்நிதியின் இடதுபுறத்தில் ஸ்ரீசிவகாமசுந்தரி எழுந்தருளி இருக்கிறார். இந்த அன்னைக்கும் ஒரு சிறப்பு உண்டு. பொதுவாக கோயில்களில் தெய்வச் சிலைகளில், முகமும் கண்களும் பக்தர்களை நேரடியாகப் பார்ப்பது போல வடிக்கப்பட்டிருக்கும். ஆனால், இங்கே இருக்கும் சிவகாமி, தன் திருமுகத்தை லேசாகச் சாய்த்து, தனக்கு வலப்புறத்தே இருக்கும் இறைவனைப் பார்த்துக்கொண்டிருப்பது போன்ற அமைப்பு பேரழகு! வருவோர்க்கெல்லாம் அருள் வழங்கி, அன்பாலே ஆட்கொள்ளும் ஆண்டவனின் ஆளுமையை அவள் ரசித்துக்கொண்டிருப்பது போல நமக்குள் ஓடுகிறது கற்பனை! அவளது திருமுகத்தில் அப்படி ஒரு பெருமிதம், பேரின்பம்!

நடராஜருக்கும் சிவகாமிக்கும் அர்ச்சனை, ஆரத்தி வழிபாடுகள் நடக்க, அவர்களைத் தரிசிக்கும் பெரும்பேற்றை எனக்குத் தந்த இறைவனின் அருட்கொடைக்கு நன்றிகூறி, கண்கள் பனிக்க, நெஞ்சம் குளிரத் தரிசித்தேன்.

இங்கே ஸ்ரீபஞ்சநதன நடராஜரின் பக்கத்திலேயே ஸ்ரீசிவகாமி அம்மன் இருக்க, ஸ்ரீசுத்தரத்தினேஸ்வரரின் இறைவியான அருள்மிகு அகிலாண்டேஸ்வரி, கோயிலின் வெளிப் பிராகாரத்தில் தனிச் சந்நிதியில் ஆட்சிபுரிகிறாள். வாருங்கள்... கருணைநாயகியாகத் திகழும் அந்த அம்பிகையையும் தரிசித்து மகிழ்வோம்.

முன்னதாக, உங்களிடம் பகிர்ந்துகொள்ள... இங்குள்ள நந்தியாற்றின் மகிமையைச் சொல்லும் வேறொரு கதையும் இருக்கிறது!

(தொடரும்)

தொகுப்பு: **பிரேமா நாராயணன்**

படங்கள்: ராபர்ட்



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

# ஸ்ரீ சாரதா ஆஸ்ரமம்

புதிய எடைக்கல், உளுந்தூர்பேட்டை,
விழுப்புரம் மாவட்டம் - 606 107. தமிழ்நாடு, இந்தியா.
செல்: 94431 21452, 94860 37372, 94874 81452, 89030 06955

குலத்திற்கே நலன் தரும் ஓர் வேண்டுகோள்

## ஸ்ரீ சாரதா பெண்கள் முதியோர் காப்பகம்



பேரன்புடையீர்

வணக்கம், நமது ஸ்ரீ சாரதா ஆஸ்ரமம் கிராமப்புற வயதான அன்னையரை காக்கும் உயர்ந்த தெய்வீகத் தொண்டினை இந்த இலவச காப்பகத்தின் மூலம் செய்து வருகிறது. தினசரி கூலிக்குச் சென்று வாழ்வை கடனில் கழித்துக் கொண்டிருக்கும் ஏழை கிராமத்துவாசிகளுக்கு மிகக் குறைவான வருமானம்தான் கிடைக்கிறது. தன் குழந்தைகளைக் கூட சரிவர வளர்க்க இயலாத சூழ்நிலையில், வயது முதிர்ந்த தாய்க்கு வயிறார உணவு அளிப்பதும், அவளின் முதுமைக் காலத்தில் நோய்க்கான மருத்துவச் செலவு செய்து பாதுகாப்பதும் சுமக்க இயலாத சுமையாகிவிடுகிறது.

ஆதரவின்றி தவிக்கும் வயதான அன்னையரின் அனைத்துத் தேவைகளையும் இலவசமாகப் பூர்த்தி செய்து, எந்தவித பிரதிபலனையும் எதிர்பாராமல் இந்த முதியோர் காப்பகத்தை சந்நியாஸ சகோதரிகள் நடத்தி வருகிறார்கள்.

நம் இதயத்தில் உருவாகும் தாய்ப்பாச உணர்வுக்கு உயிர்கொடுக்க விரும்பும் உத்தம உள்ளம் படைத்தோர் தம் உருகும் நல்ல உணர்வுகளை உதவிகளாக மாற்றி புண்ணியம் பெறலாம்.

| | |
|---|---|
| ஒரு நாள் மதிய உணவு 30 பேருக்கு ரூ.540/- | ஒரு அன்னைக்கு 1 வருட உடை செலவு ரூ.900/- |
| ஒரு நாள் உணவு 30 பேருக்கு ரூ.1170/- | ஒரு அன்னைக்கு 1 வருட மருத்துவச் செலவு ரூ.1500/- |
| ஒரு மாத உணவு 30 பேருக்கு ரூ.35,100/- | காப்பகத்தின் 1 மாத பராமரிப்பு செலவு ரூ.8000/- |
| | ஒரு அன்னையின் ஈமச்சடங்குச் செலவு ரூ.3000/- |

வயதான அன்னையருக்கு நாம் செய்யும் சிறு உதவியும், நம்மை பெற்று சீராட்டி வளர்த்த அன்னையரின் உள்ளத்தைக் குளிரச் செய்வதற்கு இணையாகும். இந்த கலியுகத்தில், நம்மால் முடியும் காலங்களிலெல்லாம் நாம் செய்யும் புண்ணியச் செயல்கள் நமக்கு முடியாத கஷ்ட காலங்களில் எதிர்பாராத உதவியாக வந்து நம்மைக் காக்கும்.

**தன்னிடமே இருக்கும் பணம் தன்னிறைவைத் தருவது இல்லை! தானமாகத் தந்த பணம் தன் குலம் காக்கும் சந்தேகமில்லை!**

**தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா ஆஸ்ரமம், உளுந்தூர்பேட்டை" என்ற பெயருக்கு செக் / டி.டி / எம்.ஓ. மூலம் அனுப்ப வேண்டுகிறோம். கடிதத்தில் "முதியோர் காப்பகத்திற்கு" என்று குறிப்பிடவும்.**

இறைவன் பணியில்,

ஸ்ரீ சாரதா ஆஸ்ரம சகோதரிகள்

நன்கொடைகளுக்கு 80G வருமான வரிவிலக்கு உண்டு.

Mail: Sri Sarada Ashram, New Edaikkal, Ulundurpet, Villupuram, Dist., Tamilnadu, India-606 107.
E-mail: vsp@srisaradaashram.org Website: www.srisaradaashram.org

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

இளைஞர் சக்தி

# பானையும் வாழ்க்கையும்!

சமூக வலைதளங்களில் பகிரப்பட்டிருந்த குட்டிக்கதை ஒன்று. மண்பானையிடம் ஒருவன் கேட்டானாம், "கொளுத்தும் வெயிலிலும்கூட நீ மட்டும் எப்படி உள்ளும் புறமும் குளிர்ச்சியாய் இருக்கிறாய்?" என்று.

அதற்கு அந்த மண்பானை சொன்னது: "எனது ஆரம்பமும் மண்தான்; முடிவும் மண்தான். எவனொருவன் தனது தொடக்கத்தையும் முடிவையும் உணர்ந்திருக்கிறானோ, அவன் எப்போதும் குளிர்ச்சியுடனும் மகிழ்ச்சியுடனுமே இருப்பான்; வெம்மையிலும் வெறுப்பிலும் தகிப்பதில்லை!"

மண்பானை சொன்னது அற்புதமான பாடம் நமக்கு. முதலும் முடிவும் மட்டுமல்ல நண்பர்களே... வாழ்வின் நடுப்பக்கத்திலும் நம்மை நாம் அறிய சில விஷயங்கள் உள்ளன.

அதில் முக்கியமானது, உண்மையை உள்ளபடி



எஸ்.கதிரேசன்

www.vikatan.com



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

புரிந்துகொள்வது.

ஒரு துறவிக்கு நூற்றுக்கணக்கான சீடர்கள் இருந்தார்கள். அவர்களில், சுரேஷ், ரமேஷ் என்று இரண்டு நண்பர்கள். வாரம் தோறும் குருநாதரைத் தரிசிப்பது அந்த நண்பர்களின் வழக்கம்.

ஒருநாள், குருநாதரிடம் சுரேஷ் கேட்டான்: "சுவாமி, பிரார்த்தனை பண்ணும்போது ஸ்நாக்ஸ் சாப்பிடலாமா?"

குருநாதர் பலமாகத் தலையை அசைத்து, "கூடவே கூடாது" என்று கூறிவிட்டார்.

அடுத்ததாக ரமேஷ் கேட்டான்: "சுவாமி, ஸ்நாக்ஸ் சாப்பிடும்போது பிரார்த்தனை செய்யலாமா?"

இதற்கு, "ஓ தாராளமாகச் செய்யலாமே" என்று மகிழ்ச்சியோடு அனுமதி அளித்தார் குருநாதர்.

சுரேஷுக்குக் குழப்பம். மீண்டும் குருநாதரிடம் சென்றான். "என்ன சுவாமி... அவன் கேட்டதுக்கு மட்டும் சரின்னு சொல்லிட்டீங்களே?" என்று கேட்டான்.

இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை அவனுக்குப் புரியவைத்தார் குருநாதர். அதாவது, "அவன் சாப்பிடும்போதும் பிரார்த்தனையை நினைக்கிறான். நீயோ, பிரார்த்தனை வேளையில் சாப்பாடு பற்றி எண்ணுகிறாய். இரண்டில் எது சிறப்பு என்பதை நீயே தீர்மானித்துக்கொள்" என்றார்.

புரிந்ததா நண்பர்களே? சுரேஷைப் போன்றுதான் பலரும் தவறானதைச் சரியானதாகவும், சரியானதைத் தவறாகவும் புரிந்துகொள்கிறார்கள். இன்னும் சிலருக்கு எது சரி, எது தவறென்பதே புரிவது இல்லை!

அடுத்த விஷயம்... நமது செயலை அன்பால் உன்னதமாக்குவது.

வீட்டைப் பூட்டிவிட்டு சுற்றுலா சென்று திரும்பியது ஒரு குடும்பம். அவர்கள் வீட்டுக்கு வந்தபிறகுதான் தெரிந்தது, சாவி தொலைந்துபோன விஷயம். மாற்றுச் சாவி ஒன்றும் உண்டு. ஆனால், அதுவோ வீட்டுக்குள் இருந்தது. வேறுவழியின்றி சுத்தியலால் பூட்டை உடைத்து வீட்டுக்குள் சென்றது குடும்பம்.


உ

ஸ்ரீரஸ்து சுபமஸ்து ஸ்ரீவெங்கடேச ப்ரஸன்ன

**ஸ்ரீமஹாலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்**

**1. யூசுப்லேன், அருணாசலம் தெரு, சேப்பாக்கம், சென்னை - 5.**

செல் : ஆபிஸ் : 94449 03845, 94444 06957, 044–2851 6845, (044) 28516957

Email-id:srimahalakshmi.yathra@gmail.com

Estd: 1967



S.JAYALAKSHMI

ஜெகத்குரு ஸ்ரீஆசார்ய சுவாமிகளின் ஆசியுடனும், ஆக்ஞைப்படியும், கீழ்க்கண்ட யாத்திரைகளை அறிவிக்கிறோம்.

| | |
|---|---|
| 23.3.2017 | புதுடெல்லி, அமிர்தசரஸ், குருசேஷத்திரம் – ஸ்ரீவைஷ்ணவி தேவி யாத்திரை |
| 1.4.2017 | மதுரா, கோகுலம், கோவர்தனம், அலஹாபாத், காசி, கயா யாத்திரை. |
| 10.4.2017 | காசி, நேபாள் – காட்மண்டு, முக்திநாத், ஜனக்புரி, முக்திநாத் யாத்திரை. |
| 28.4.2017 | பூரி, புவனேஸ்வர் வைத்யநாதம், அமர்கண்டக், விசாகப்பட்டினம் யாத்திரை. |
| 12.5.2017 | மங்களூர், உடுப்பி, முருடேஷ்வர், கோகர்ணா, கொல்லூர், ச்ருங்கேரி, ஒரனாடு, குக்கி ஸுப்ரமண்யா, தர்மஸ்தலா உள்ளிட்ட கர்நாடகா யாத்திரை |
| 4.6.2017 | மஹாகாளேஸ்வர், ஓம்காரேஷ்வரர், துவாரகா, பேடி துவாரகா, மூல துவாரகா, போர்பந்தர், நாகேசம், சோமநாத், கோலியாக், ஆமதாபாத், டாகூர் துவாரகா, அம்பாஜி, ஸ்ரீநாத் துவாரகா, காங்ரோலி துவாரகா, புஷ்கர், ஜெய்ப்பூர் யாத்திரை. |
| 26.6.2017 | மதுரா, கோகுலம், கோவர்தனம், அலஹாபாத், காசி, கயா யாத்திரை. |
| 9.7.2017 | மதுரா, ஜம்மு, வைஷ்ணோதேவி, ஸ்ரீநகர், சிவ்கோரி, புதுடெல்லி – அமர்நாத் யாத்திரை. |
| 7.8.2017 | 5 ஜோதிர்லிங்கங்கள், அஷ்ட விநாயகர்கள், சோலாபூர், துல்ஜாபூர், பண்டரீபுரம், கோலாபூர், சனி சிங்கணாப்பூர், ஷீரடி, நாசிக் – மஹாராஷ்டிர யாத்திரை. |
| | 23.3.2017,21.4.2017,19.6.2017, 15.7.2017 இராமேஸ்வரம் யாத்திரை. |

மேலும் விபரங்களுக்கு உரிமையாளர்: திருமதி **S.ஜெயலக்ஷ்மி, ஸ்ரீமஹாலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்**




https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

உள்ளே வந்ததும் அலமாரியில் இருந்த மாற்றுச் சாவியை எடுத்து கண்ணில் ஒற்றிக்கொண்ட வீட்டுக்காரம்மாள், அதை மேஜையின் மீதிருந்த சுத்தியலின் அருகில் வைத்துவிட்டுச் சென்றார்கள்.

சுத்தியலுக்கோ கடும்கோபம். "நாம இல்லைன்னா இவங்க வீட்டுக்குள்ளேயே வந்திருக்க முடியாது. ஆனா, மரியாதை கொடுக்கிறது என்னவோ உனக்கா" என்று சாவியைப் பார்த்துக் கேட்டது.

அதற்கு, ஒரு புன்னகையோடு பதில் சொன்னது சாவி: "நீ பூட்டோட மண்டையை உடைப்பாய். ஆனால், நானோ பூட்டோட இதயத்தைத் திறக்கிறேன். அதனாலதான் எனக்கு இந்த மரியாதை!"


இங்கே செயல்பாடு ஒன்றுதான்; ஆனால், அணுகுமுறைகள் வெவ்வேறாக இருந்தன. எதையும் சாந்தமும், அன்பும் மேலிடச் சொல்லும்போதும், செய்யும்போதும் இலக்கை அடைவது எளிதாகும்; விளைவு நலமாகும்.

அந்தக் கல்லூரியில் வருஷத்துக்கு பாதிநாள் கூட வகுப்புகள் சரியாக நடக்காது. எப்போதும் ஏதேனும் பிரச்னைகளைச் சமாளிக்கவேண்டியது இருக்கும். அதுபோன்ற சந்தர்ப்பங்களில், பிரச்னையைச் சமாளிக்க தனக்குப் பதிலாக துணை முதல்வரை அனுப்பிவிடுவார் கல்லூரியின் முதல்வர்.

அந்தத் துணை முதல்வர், எப்போதும் வொயிட் அண்ட் வொயிட்டில்தான் கல்லூரிக்கு வருவார். முரட்டுத்தனமாக நடந்துகொள்ளும் மாணவர்களும், அவரைப் பார்த்ததும் மிக பவ்வியமாக வணக்கம் வைத்துவிட்டு நல்ல பிள்ளையாக நகர்ந்துவிடுவார்கள். உடனே, துணை முதல்வர் மிகவும் கண்டிப்பானவர் என்று எண்ணிக் கொள்ள வேண்டாம். மிகவும் சாதுவானவர் அவர். பிறகு எப்படி, அவரால் இந்தப் பசங்களை வழிக்குக் கொண்டுவர முடிந்தது?

எல்லோரிடமும் மிகவும் வாஞ்சையாகப் பேசுவார். அவர்கள் போக்கிலேயே சென்று அவர்களைத் திருத்த முயற்சிப்பார். ஒரு கோஷ்டியைப் பற்றி வேறொரு கோஷ்டியினர் புகார் செய்தால், பொறுமையாக செவிமடுப்பார். அவர்களைப் பேசவிட்டு, அதில் இருந்தே தீர்வும் சொல்வார்.

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw



ஆனால், நம்மில் பலரும் எதிரில் நிற்பவரைப் பேசவே விடுவதில்லை. தங்கள் கருத்தை சரியென்று நிரூபிப்பதிலேயே கவனம் செலுத்துவார்கள். விளைவு, விவாதங்கள் கருத்துப் பகிர்தலாக இல்லாமல், கருத்துத் திணிப்பாகவே இருக்கும். முரண்பாட்டுக்கும், மன முறிதலுக்கும் அதுவே காரணமாகிவிடும்.

இந்த விஷயத்தில், அந்தக் கல்லூரி துணை முதல்வரின் ஆலோசனை நமக்கு உதவும். அவர் என்ன சொல்வர் தெரியுமா?

"பொதுவா ஒருத்தரை முழுசா பேச விட்டுட்டோம்னாலே பாதி பிரச்னை தீர்ந்துடும். அதுக்கப்புறம் அவங்களைக் கையாள்றது ரொம்ப ஈஸி. பால் கறக்கணும்னா மாட்டோட மடியைப் பிடிச்சுக் கறக்கணும்; கொம்பைப் பிடிக்கக்கூடாது. இன்னிக்கு, நிறைய பேர் மத்தவங்க பிரச்னையைப் பற்றி கேட்பதற்குக்கூட தயார் இல்லை. அதான் பிரச்னையே" என்று சொல்வார்.

நிறைவாக ஒன்று... உலகில் எல்லாமே இரண்டாகவே உள்ளன. நல்லது–கெட்டது, இன்பம்–துன்பம், பாவம்–புண்ணியம், பாஸிட்டிவ்–நெகட்டிவ், பூ–தலை எனச் சொல்லிக்கொண்டே போகலாம். வாழ்க்கையில் நமக்கு வரும் தடைகள், பிரச்னைகள், துயரங்கள் இவற்றையெல்லாம் எதிர்கொள்ளும்போது, நாம் எப்படி செயல்படுகிறோம் என்பது இரண்டாம் பட்சம்தான். எப்படி எடுத்துக்கொள்கிறோம் என்பதுதான் மிக முக்கியம். இதையும் கவனத்தில் கொள்ளுங்கள் நண்பர்களே!



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw



■ இ.கார்த்திகேயன்

# ‘இது மகுட ஆட்டம்... மகேசன் தந்த ஆட்டம்!’



www.vikatan.com

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaEdow77r83ryirm7tw

மாயாண்டி சுடலை அய்யா
சத்திராதி முண்டசாமி
தாயான பேச்சியோட்டு
கச்சை வருஞ்சி பூட்டி,
கருத்த கச்சை சுண்டலிட்டு
ஒட்டு கச்சை சல்லடமாம்...

- பக்கப் பாட்டுடனும் சிங்கித் தாளத்துடனும், மகுட வாத்தியம் முழங்க திசையதிர ஒலிக்கிறது, 'கலைமாமணி' அண்ணாவி முத்துராம லிங்கத்தின் கணியான் பாட்டு!

தென்மாவட்ட கிராமியக் கோயில் திருவிழாக்களின் மிக முக்கிய அம்சம் கணியான் பாட்டு. நாட்டார் கலைக்கே உரிய மண்ணின் அசைவுகள், பாடல், நகைச்சுவை, வர்ணனை ஆகிய அனைத்தையும் தனக்குள் அடக்கிய பெருமை கொண்டது கணியான் ஆட்டம்!

கண்கண்ட தெய்வமாக, தாங்கள் வழிபடும் தெய்வங்களைப் போற்றிப்பாடி மகிழ்விப்ப துடன், பூஜை-வழிபாடுகளை யெல்லாம் ஏற்கவைத்து, தங்களின் பிணி தீரவும் வாட்டம் நீங்கவும் அந்தத் தெய்வங்களிடம் வரம் வாங்கித் தரும் வல்லமையும் கொண்டது கணியான் ஆட்டம் என்பது கிராமப்புற மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. அதை மெய்ப்பிக்கும் விதமாக, கணியான் ஆட்டத்தால் கடவுள் வழிபாட்டுடன், நம் மண்ணின் கலாசாரத்தையும் பேணி வளர்த்து வருகிறார்கள், அண்ணாவி முத்துராமலிங்கம் குழுவினர்.

தூத்துக்குடி மாவட்டம் - ஸ்ரீவைகுண்டத்தில், அண்ணாவி முத்துராமலிங்கம் வீடு இருக்கும் பகுதிக்கே கணியான் காலனி என்றுதான் பெயர். ஒரு ஞாயிறன்று பகல்வேளையில் அவரைச் சந்தித்தோம்.





https://t.me/joinchat/aaaaaEdow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

"ஆட்டத்தைப் பார்க்கிறவர்களுக்கும் பாடலைக் கேட்கிறவர்களுக்கும் தெய்வங்களின் மீது ஆத்மார்த்தமான நம்பிக்கையையும் பயபக்தியையும் ஏற்படுத்தும் அதியற்புதமான கலைஇது-தம்பி!" என்ற முன்னோட்டத்துடன் துவங்கியவர், கணியான் ஆட்டம் தன்னைக் கவர்ந்திழுத்த கதையைப் பகிர்ந்துகொண்டார்..

"13-வது வயசுல துவங்கி, 33 வருஷமா கணியான் ஆட்டம் பாடிக்கிட்டிருக்கேன். அப்பா செல்லப்பா கணியான்தான் என் குரு. பள்ளியில் படிக்கிற காலத்திலேயே சிங்கி தட்ட, பக்கப்பாட்டு பாட, மகுடம் வாசிக்க, பெண் வேடம் போடுவதுன்னு ஆரம்பிச்சிட்டேன். கணியான் ஆட்டத்தின் எல்லா அம்சத்துலயும் கலந்துக்கிட்டு, படிப்படியா எல்லாத்தையும் கத்துக்கிட்டேன்.

அப்பாவுக்குப் பிறகு, இருபது வருஷமா தனியா செட் வெச்சு, 'அண்ணாவியா' (தலைமைப் பாடகரா) இருக்கேன்" எனச் சொல்லும் முத்துராமலிங்கம், ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரர் கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம் முடித்துள்ளார்.

பூரிப்புடன் பகிர்ந்து கொண்டவரிடம் அடுத்த கேள்வியை முன்வைத்தோம்.

**■ கணியான் ஆட்டத்தின் வரலாற்றைச் சொல்லுங்களேன்...**

"ஒரு காலத்தில், பூலோகத்தில் காவலுக்கு ஒரு தெய்வம் வேண்டும் என்று சிவபெருமானிடம் கோரிக்கை வைத்தார்கள் முனிவர்கள்.

'யாகம் ஒன்றை நடத்துங்கள். யாகக் குண்டத்திலிருந்து வெளிவரும் தெய்வம்தான் நீங்கள் கோரும் காவல் தெய்வம்' என்று சிவபெருமான் அருள்புரிந்தார்.

அதன்படியே முனிவர்கள் யாகம் நடத்தினார்கள். இரண்டாவது நாள் யாகக்குண்டத்தில் ஒரு தெய்வம் தோன்றியது. ஆனால், வெளியே வர மறுத்தது.







"படிக்கும்போது, கல்லூரிகளுக்கு இடையேயான போட்டி.... கணியான் ஆட்டத்தில் மகுடம் அடிச்சுப் பாடினேன். கல்லூரிக்குத் தங்கப்பதக்கம் கிடைச்சுது. அதுக்கப்புறம்தான் இந்தக் கலைக்கான வரவேற்பும் அங்கீகாரமும் புரிஞ்சுது. முழுமையா கணியான் ஆட்டத்தில் இறங்கினேன். படிப்பு முடிச்ச அடுத்த வருஷமே போஸ்ட் ஆபீஸில் கிளார்க் வேலை கிடைச்சுது. அப்பவும் கணியான் ஆட்டத்தை விட்டுடல. லீவு கிடைக்குதோ இல்லையோ, சம்பளத்துல பிடித்தம் செய்யறாங்கன்னாக்கூட, 'பரவாயில்லை'ன்னு பாட்டுப் பாட கெளம்பிடுவேன்" என்று

முனிவர்கள் மீண்டும் சிவனாரைப் பிரார்த்தித்தார்கள்.

ஈசன், யாகம் நடக்கும் இடத்துக்கு வந்தார். 'ஏன் வெளியே வர மறுக்கிறாய்?' என அந்தத் தெய்வத்திடம் கேட்டார். 'நான் வெளியே வரவேண்டுமானால், எனக்குக் கோழி, ஆடு, பன்றி பலி கொடுத்து, பெரிய படையல் போட வேண்டும். நான் எங்கெல்லாம் செல்கிறேனோ என்னுடன் பயணிக்க, உதவி செய்ய இரண்டு கணியான்கள் வேண்டும். அவர்கள் ஆடிப் பாடி என்னை மகிழ்வித்து, என் தேவையைப் பூர்த்தி செய்வார்கள். நானும் காவல் தெய்வமாக இருந்து காத்தருள்வேன்' என்று பதில் சொன்னதாம்.

உடனே சிவபெருமான், ஊர்வசியையும் ரம்பையையும் அழைத்து யாகக்குண்டத்தின் அருகில் நடனமாடச்



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaEdow77r83ryirm7tw



சொன்னாராம். அப்படி அவர்கள் ஆடியபோது, அவர்களது காற்சிலம்புகளின் பரல்கள் ஒன்றோடு ஒன்று உரசி, சிவனாரின் காலடியில் வந்து விழுந்தன. அவற்றில் இருந்து இரண்டு கணியான்கள் பிறந்தனர். அந்த இருவரும் கட்டுப்பாடில்லாமல் ஆட, அவர்களுக்கு கணியான் ஆட்டத்தின் இலக்கண முறைகளைப் போதித்தாராம் இறைவன். அத்துடன், தன் தலையில் உள்ள மகுடத்தை எடுத்து, அதை கையில் வைத்து வாசிப்பதற்கு உகந்த இரண்டு வாத்திய மகுடங்களாக மாற்றி, ஆளுக்கொன்று கொடுத்து, சுடலையுடன் பூலோகத்துக்கு அனுப்பி வைத்தாராம் சிவபெருமான். மகுடத்தை வாசித்துக்கொண்டே ஆடும் ஆட்டம் என்பதால், இதை 'மகுட ஆட்டம்' என்றும் சொல்வதுண்டு."



## ஒரு கணியான் ஆட்டக் குழுவில் எத்தனை பேர் இருப்பார்கள்?

"ஆரம்பத்தில், இந்த இரண்டு கணியான்களே பெண் வேஷமும் கட்டி, மகுடமும் வாசிச்சுக்கிட்டு, நடனமும் ஆடி, பாட்டையும் பாடி இருந்திருக்காங்க. நாளடைவுல இந்தக் கலைக்குக் கூடுதல் சிறப்பு சேர்க்கணும்னு பாடல் பாட ஒருத்தர், பக்கப்பாட்டுப் பாட ஒருத்தர், மகுடம் வாசிக்க ரெண்டு பேர், பெண் வேஷம் கட்டி ஆட ரெண்டு பேர், சிங்கித் தாளம் அடிக்க ஒருத்தர்னு மொத்தம் ஏழு பேர் கொண்ட குழுவாகச் சேர்ந்து கணியான் ஆட்டத்தை நடத்திட்டு வர்றோம்.

அண்ணாவி பாட்டுப்பாட, பக்கப்பாட்டு பாடுவாரு இன்னொருத்தர். பாட்டுக்கேத்த மாதிரி மகுடக்காரர்கள், மகுடத்தை வாசிப்பாங்க. ரெண்டுலயும் ஒரே ஓசை வராது. ஒரு மகுடத்தின் ஓசை உச்சமாகவும், இன்னொண்ணுல ஓசை மந்தமாகவும் இருக்கும். அண்ணாவி பாடல் வரிகளை உச்சத்தில் பாடும்போது, மகுடக்காரர்கள் வேகமாகவும், பாடலை விளக்கிப் பாடும்போது மெதுவாகவும் வாசிப்பார்கள். மகுடத்தாளத்துக்கு ஏற்றபடியும், பாடலுக்கு ஏற்றபடியும் வேஷமிட்டவர்கள் ஆடுவார்கள்."



https://t.me/joinchat/aaaaaEdow77r83ryirm7tw

**■ கோயில் விழாக்களில் எத்தனை நாள்கள் கணியான் ஆட்டம் நடக்கும்?**

"அம்மன் கோயில்களில் செவ்வாய்க்கிழமையும், சுடலை கோயில்களில் வெள்ளிக்கிழமையும் கொடை பூஜைகள் நடப்பது வழக்கம். அதற்கு முந்தைய நாள் மாலை குடியழைப்பில் தொடங்கி மதியக்கொடை, சாமக்கொடை, கைவெட்டு, மயான பூஜை, மஞ்சள் நீராட்டு என மூன்று நாள்களுக்குக் கணியான் ஆட்டம் இருக்கும்.

கோயில் கால்நாட்டும் நாளில் இருந்து, கொடை முடியும் நாள் வரை மொத்தம் எட்டு நாள்களுக்கு காலை, மாலை இரண்டு நேரமும் குளித்துவிட்டு பழம், பச்சரிசி சாதம் மட்டும் சாப்பிட்டு விரதம் இருப்போம். முழுமுதற் கடவுளான விநாயகர் துதி, சாஸ்தா துதி சொன்ன பிறகுதான் பாட ஆரம்பிப்போம். சாமி சிலை அல்லது மண் பீடத்தின் எதிரில் நின்றபடி சாமியைப் பார்த்த படியே பாடி ஆடுவோம்."

**■ விழா வழிபாட்டில், கணியான் ஆட்டக்காரர்களின் பங்களிப்பு..?**

"எங்கள் பங்களிப்பு அதிகம் உண்டு. கொடை பூஜைக்கு முந்தைய நாள் மாலை, கோயில் சுடலை சாமிக்கு ஆடும் சாமியாடியை சுடலை சிலை முன்பு உட்கார வைப்போம். மஞ்சள், வெற்றிலை சேர்த்து கையில் காப்புக்கட்டி, சுடலையின் பாடலைப் பாடி சுடலை ஐயாவை வரவழைத்து, சாமியாடிமீது சுடலையை இறக்கிவிடுவோம். மறுநாள் நள்ளிரவு 12 மணிக்கு மயானக்கரையில் சாமக்கொடை, படையல் பூஜை எனத் தொடரும். இந்தப் பூஜையின்போது சாமியாடிகள் தெய்வங்களுக்குச் சமர்ப்பிக்கும் 'சட்டிச் சோறு' தயார் செய்வதும் கணியான் ஆட்டக்காரர்கள் தான்'' என்று பயபக்தியுடன் விவரிக்கும் முத்துராமலிங்கம், தனக்கு மொத்தம் 36 கிராம தேவதைகளின் கதைகள் மனப்பாடம் என்கிறார். அவை தவிர, பெருமாள் கதை, சிவன் கதை, ராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை, மணிமேகலை ஆகியவற்றையும் கணியான் ஆட்டத்தில் பாடுவது உண்டாம்.

**■ கணியான் ஆட்டத்துக்கு எத்தனை வயது, இந்தக் கலையை விரும்பும் எவர் வேண்டுமானாலும் கற்றுக்கொள்ள முடியுமா?**

"நல்லா கூர்ந்து கவனிச்சுக் கத்துக்கணும். கிராமத்து தேவதைகளின் அருள் இருந்தா மட்டும்தான் இதைக் கத்துக்கிட்டு, தொழிலுக்கு


ஸ்ரீ: ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவர முநயே நம: ஸ்ரீ அண்ணன் திருவடிகளே சரணம்! ஆழ்வார்கள் வாழி! அருளிச் செயல் வாழி!



**ஒரே வழி! உடையவர் திருவடி!**

கவிஞர் கூடல்.N.ராகவன்

தலைவர், ஸ்ரீ காயத்ரி நாராயண சபா, மதுரை.







ஸ்ரீ பகவத் ராமானுஜரின் ஆயிரமாவது அவதார தினத்தையொட்டி அவரின் வாழ்க்கைவரலாறு, அவரின் கொள்கைகள், சமுதாயப்பணிகள் அவர் ஏற்படுத்திய வழிபாட்டு முறைகள், உற்சவங்கள் முதலியவற்றை உலகமெல்லாம் அறியும் வண்ணம் 1000 கேள்விகள் 1000 பதில்களாக தயாரித்து எங்கள் இணையதளத்தில் வைத்துள்ளோம். இவை தமிழிலும், ஆங்கிலத்திலும் உள்ளது. ஏப்ரல் மாதம் 25-ந் தேதிக்கு மேல் 5 முதல் 25 வயது வரையும் அதற்கு மேலும், அவர்களின் வயதிற்கேற்ப **Online**-ல் கேள்விகள் கேட்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். உலகில் எங்கிருப்போரும் பங்கேற்கலாம். மேலும் விபரங்களுக்கு எங்கள் இணையதளத்தைப் பார்க்கவும். ஏராளமான பரிசுகள் காத்திருக்கின்றன. ஸ்ரீ ராமானுஜரின் அருள்பெற இப்போட்டியில் கலந்துகொண்டு பரிசுகளை வெல்லவும். Visit us : **www.kavignakoodalnraghavan.com**

**ஸ்ரீ காயத்ரி நாராயணசபா**

43, பாரதியார் ரோடு, ஜெய்ஹிந்துபுரம், மதுரை - 625 011. தமிழ்நாடு. செல் - 98940 63660.

Email: **kudalraagha@yahoo.co.uk.** Visit us : **www.kavignakoodalnraghavan.com** YouTube: **rangasri4**

உங்கள் ஜோதிட நிபுணர், கவிஞர் கூடல் **N.ராகவன்** அவர்களின் 'தினம் ஒரு நல்வார்த்தை திருமாலைப் பற்றி' இலவசமாகப்பெற வாட்ஸ்அப்-ல் தொடர்பு கொள்ளவும் **98940 63660**

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

வர முடியும்" என்றவர், மேலும் தொடர்ந்தார்.

"16-ம் நூற்றாண்டில் பாடப்பட்ட 'விறலிடு தூது', 17-ம் நூற்றாண்டில் பாடப்பட்ட 'முக்கூடற்பள்ளு'... இதிலெல்லாம் கணியான் பத்தின குறிப்புகள் இருக்கு. அப்படிப் பார்த்தா சுமார் 400-500 வருஷங்களுக்கு முன்னாடியே கணியான் ஆட்டக்கலை இருந்திருக்குன்னுதானே அர்த்தம். இப்போது நெல்லை, தூத்துக்குடி, குமரின்னு மூணு மாவட்டங்கள்லயும் சுமார் நூறு குடும்பங்கள் மட்டும்தான் கணியான் ஆட்டத்துல இருக்காங்க.

ஒரு காலத்துல செவ்வாய், வெள்ளி, கடைசி செவ்வாய், கடைசி வெள்ளின்னு எப்படியும் வருஷம் முழுக்க கணியான் ஆட்டத்துக்கு வேலை இருக்கும். இன்னிக்கு பங்குனி, சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, தைன்னு ஆறு மாசங்கள் மட்டும்தான் தொழில் நடக்குது. நாகஸ்வரக் கலைஞர்கள் சடங்கு, திருமணம், கோயில் கொடைகளுக்கு வாசிப்பாங்க. ஆனா, கணியான் மகுடம், கிராம தேவதை, தெய்வங்களின் பூஜைக்காக மட்டுமே வாசிக்கக்கூடிய வாத்தியம். ஒரு தெய்வத்தை அழைத்து, மகிழ்வித்து, மீண்டும் அனுப்பிவைக்கிற பாக்கியம் கணியான் கலைஞனுக்கு மட்டும்தான் உண்டு. இது வரைக்கும் 3,000 நிகழ்ச்சிகள்ல பாடியிருக்கேன். இனியும் என் உயிர் உள்ள வரைக்கும் கணியான் ஆட்டத்துல கிராம தெய்வங்களின் புகழைப் பாடுவேன்" என்று கண்களில் நீர் ததும்பச் சொன்னவர், உணர்ச்சிப்பெருக்குடன் பாடத் துவங்கினார்.

**"மாயாண்டி சுடலை அய்யா**
**வேடிக்கையா ஆதாரி போட்டு வாரார்..."**

அந்தப் பாட்டும், பாட்டுக்கேற்ற தாளமும் ஆட்டமும் சூழலைத் தெய்விகமாக்க... சட்டென்று காற்றில் அசைந்த அரச மரக்கிளைகள், சில இலைகளை நம் சிரத்தில் உதிர்க்க... அவர்களின் பாட்டின் நாயகன் சுடலை மாடன் நேரில் வந்து விட்டதாகவேபட்டது நம் மனதுக்கு!

படங்கள்: ரமேஷ்





https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

 எஸ்.கண்ணன்கோபாலன்

**அ**ரசர்கள் தங்களுக்கு ஆள்பலம், படைபலம் இருந்தாலும்கூட, தங்களுடைய நாட்டைப் பாதுகாக்க வேண்டி, கோட்டை கொத்தளங்களையும் ஏற்படுத்தி இருந்தனர். கோட்டை கொத்தளங்கள் இருந்தால் மட்டும் போதுமா என்ன? என்னதான் ஆள்பலம், படைபலம், கோட்டை கொத்தளங்கள் இருந்தாலும், அனைத்துக்கும் மேலாக தெய்வபலம் மிகவும் அவசியம் என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அதன் காரணமாகவே தாங்கள் மண்ணில் எழுப்பிய கோட்டைகளிலும் சரி, மலைகளில் எழுப்பிய கோட்டைகளிலும் சரி ஆலயங்களை எழுப்பி, இறைவனை வழிபட்டார்கள். அப்படி மலையில் அமைந்த கோட்டையில் இருக்கும் ஓர் ஆலயம் மிகவும் சிதிலம் அடைந்திருப்பதாகச் 'சக்தி விகடன்' வாசக அன்பர் ஒருவர் நமக்கு போனில் தகவல் தெரிவித்தார்.

'**ஆ**லயம் தேடுவோம்' பகுதிக்காக நாம் அந்தக் கோயிலுக்குச் சென்றோம். வாணியம்பாடியில் இருந்து சுமார் 7 கி.மீ தொலைவில் ஒரு மலை எதிர்ப்படுகிறது; 'வெள்ளை மலை' என்கிறார்கள். அதன் மீது வளைந்துநெளிந்து செல்லும் பாதையின் வழியே, சுமார் 8 கி.மீ தொலைவு சென்றால், 'மாதகடப்பா' எனும் மலைக் கிராமத்தை அடையலாம். இதுவரைதான் வாகனத்தில் செல்லமுடியும். அங்கிருந்து 2 கி.மீ.தொலைவு நடந்து சென்றால், வேறொரு மலையின் அடிவாரத்தை அடையலாம். மல்லநாயக்கர் துர்கம் எனப்படும் இந்த மலையின் மீதுதான், நாம் தரிசிக்க வந்திருக்கும் ஆலயம் அமைந்திருக்கிறது. அடிவாரத்தில் இருந்து கரடுமுரடான பாதையில் ஏறிச் செல்ல வேண்டும். கடல் மட்டத்தில் இருந்து சுமார் 2800 அடி உயரம் உள்ள மலையின் உச்சியை அடைந்தால், மலை ஏறிய களைப்பே தெரியாதபடி, ஒரு புத்துணர்ச்சி நமக்கு ஏற்படுகிறது.



அந்தப் புத்துணர்ச்சியை அதிகப்படுத்துகிறது, கற்றளியாய் அமைந்துள்ள அருள்மிகு நந்தீஸ்வரர் ஆலயம். அருகிலேயே செங்கற் தளியாக அம்பிகையின் ஆலயமும் அமைந்திருக்கிறது. மலைக் கோயிலுக்கு அருகிலும், சற்றுக் கீழேயுமாக இரண்டு திருக்குளங்கள் உள்ளன. கடுமையான கோடைக் காலத்திலும்கூட அந்தக் குளத்தில் உள்ள நீர் வற்றுவதே இல்லை என்றும், சுவாமியின் அபிஷேகத்துக்கு இந்தக் குளங்களில் உள்ள நீரையே பயன்படுத்துவதாகவும் கூறுகிறார்கள்.





https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition
https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw



# மனதுக்கு மருந்தாகும் மகாதேவன்!





https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw



## உங்கள் கவனத்துக்கு...

**ஸ்வாமி:** ஸ்ரீ நந்தீஸ்வரர்

**அம்பாள்:** ஸ்ரீகாமாட்சி

**எப்படிச் செல்வது?:** வாணியம்பாடியில் இருந்து மாதகடப்பாவுக்குச் சுமார் 3 மணி நேரத்துக்கு ஒரு அரசுப் பேருந்து செல்கிறது. அங்கிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவு சென்றால், கோயில் அமைந்திருக்கும் மலையின் அடிவாரத்தை அடையலாம். அங்கிருந்து மலைக்கு ஏறிச் செல்லலாம்.

**வங்கிக் கணக்கு விவரம்:**

Account name:
Sri Panchamuga Nandeeswarar Charitable Trust

Bank Name: Syndicate Bank – Vaniyambadi Branch

Account No: 62532200035568

IFSC Code: SYNB 0006253

**தொடர்புக்கு:**
எஸ்.சுகுமார் – 09003621195;
பி.குமார் – 08056413318





https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

பார்ப்பதற்குப் பாசி படர்ந்து காணப்பட்ட அந்தக் குளத்தில் அங்கங்கே செடி முளைத்திருந்தது. 'நாகமல்லி' என்னும் அந்தச் செடி மூலிகைத் தன்மை கொண்டது என்றும், நஞ்சை முறிக்கும் ஆற்றல் கொண்டது என்றும் சொல்கிறார்கள்.

ஒருகாலத்தில் அரச பரிவாரங்களுடனும், போர் வீரர்களுடனும் பரபரப்பாகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்று எண்ணும்படி, கோயிலுக்கு அருகில், சிதிலம் அடைந்திருந்தாலும் தன் கம்பீரத்தை இழக்காமல் காட்சி தருகிறது ஒரு கோட்டை. கோட்டையைப் போலவே கோயிலும் சிதிலம் அடைந்துதான் காட்சி தருகிறது. கருவறையில் சதுர வடிவ ஆவுடையாரில், சிறிய மூர்த்தமாகக் காட்சி தருகிறார் சிவபெருமான். கருவறை பிராகாரத்தில் விநாயகர், வள்ளி தெய்வானை சமேதராக முருகப்பெருமான் ஆகியோர் காட்சி தருகின்றனர்.

ஆலயத்துக்கு வெளியில் ஐயனின் சந்நிதியைப் பார்த்தபடி நந்திதேவர் காட்சி தருகிறார். ஐயனின் ஆலயத்துக்கு இடப்புறத்தில் அமைந்திருக்கும் ஆலயத்துக்கு, அம்பிகையைத் தரிசிக்கலாம் என்று சென்றால், ஏமாற்றமே மிஞ்சியது. அங்கு அம்பிகை விக்கிரகம் இல்லை!

ஐயனின் ஆலயமும் அம்பிகையின் ஆலயமும் இன்றைக்கு இருக்கும் பரிதாப நிலையைக்கண்டு, 'மலைமேல் மருந்தாகவும் மனதுக்கு விருந்தாகவும் திகழும் ஐயனே! உன் திருக்கோயிலுக்கா இந்த அவல நிலை?' என்று எண்ணி மனம் பதறித் துடித்தது நமக்கு. எத்தனை ஆண்டுகள்தான் ஆலயம் இந்த நிலையில் இருந்திருக்குமோ? ஐயனுக்குத்தான் வெளிச்சம்!

பரிதாப நிலையில் கவனிப்பாரற்றுக் கிடந்த தன்னுடைய ஆலயம் இனியேனும் புதுப்பொலிவு பெற்று, தினமும் பூஜைகள் நடைபெற வேண்டும் என்று ஐயன் திருவுள்ளம் கொண்டுவிட்டார் போலும். அதற்குக் கருவியாக வாணியம்பாடியைச் சேர்ந்த அன்பர் விஜயனைப் பயன்படுத்திக் கொண்டார். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு அவர் மாதகடப்பா கிராமத்துக்குச் சென்றிருந்த போது, ஒருவர் மலைப்பக்கமாகச் சென்றுகொண்டு இருந்தார். அவரிடம் கேட்டபோதுதான் மலை மீது ஓர் ஆலயம் இருக்கிறது என்ற விஷயமே விஜயனுக்குத் தெரியவந்தது. தானும் வருவதாகச் சொல்லி விஜயனும் அவருடன் சென்றார். அதற்குப் பிறகு நடந்ததை விஜயனே நம்மிடம் விவரித்தார்.

"முப்பது வருஷத்துக்கு முன்னாடி நாங்க போனப்ப... இதோ, இப்ப நீங்கப் பார்க்கறதை விடவும் ரொம்பவும் புதர் மண்டிப் போய் கிடந்துச்சு. நிறைய சிலைகள் காணாம போயிருந்தன. புதர்களுக்கு இடையில பார்த்தப்ப ஒரு சிவலிங்கம், பிரம்மா, விஷ்ணு, சிவபெருமான் இணைந்து காட்சி தந்த மும்முக சிவ லிங்கம், அம்பாள், விநாயகர், வள்ளி தெய்வானையோட இருக்கற முருகன் சிலைகள் கிடைச்சுது.

கோயிலை ஓரளவுக்குச் சுத்தப்படுத்தி, சிலைகளைக் கொண்டுவந்து வச்சோம். அப்போதிருந்து பிரதோஷம், கிருத்திகை, பௌர்ணமி போன்ற நாள்ல வந்து பூஜை பண்ணிட்டிருந்தோம். ஊர் மக்களும் ஓரளவுக்கு ஒத்துழைச்சாங்க. ஆனாலும், நாங்கள்லாம் வாணியம்பாடியில இருந்ததால, அதுக்கு மேல ஒண்ணும் செய்ய முடியலை.

இதுக்கிடையில ஒருநாள் மும்முக சிவலிங்கம் காணாம போயிடுச்சு. தேடிப் பார்த்தப்போ ஆவுடையார் மட்டும்தான் கிடைச்சுது. இப்படியே பல வருஷங்கள் ஆயிடுச்சு. அப்பத்தான் இந்த ஊரைச் சேர்ந்த சுகுமார் பழக்கமானார். அவரோட உதவி ரொம்பவே உற்சாகத்தைத் தந்தது. இப்ப சுவாமி பேர்ல ஒரு கமிட்டி ஆரம்பிச்சு, பேங்க்லயும் கணக்கு ஆரம்பிச்சிருக்கோம். இனிமேதான் திருப்பணிகளைத் தொடங்கணும்னு இருக்கோம்'' என்றார். தொடர்ந்து சுகுமாரிடம் பேசினோம்.





www.vikatan.com
https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

“எனக்கும் இந்தக் கோயிலைப் புதுப்பிச்சி கட்டணும்ங்கற எண்ணம் இருந்திச்சு. என் ஒருத்தனால மட்டும் என்ன செஞ்சுட முடியும்னு நெனைச்சப்பத்தான், விஜயன் ஐயாவைப் பத்தி தெரிஞ்சுது. அவரும் அவரோட நண்பர்களும் செஞ்ச ஏற்பாட்டுல டிரஸ்ட் ஆரம்பிச்சுருக்கோம்.

கோயில் மலைமேல இருக்கறதாலயும், வனப் பகுதிங்கறதாலயும் திருப்பணி செய்யறதுல பல சங்கடங்கள் ஏற்பட்டுச்சு. இப்ப பிரதோஷம், கிருத்திகை, பௌர்ணமி நாள்ல இங்கே வந்து அபிஷேகம், பூஜை செஞ்சுட்டு வர்றோம். இப்ப இருக்கற நிலையில் எங்களால முடிஞ்ச அளவுக்கு வேலைகள் செஞ்சுட்டு வர்றோம். இன்னும் நிறைய வேலைகள் இருக்கு. சுவாமிதான் எங்களுக்குத் துணையா இருந்து திருப்பணிகளை நல்லபடியா நடத்தி வைக்கணும்” என்றார்.

நிறைய வேலைகள் இருக்கிறது என்று அவர் சுலபமாகக் கூறிவிட்டாலும், மலையின் மீது அமைந்திருக்கும் ஐயனின் திருக்கோயில் மீண்டும் புதுப்பொலிவு பெற கடினமான பல பணிகள் காத்திருக்கின்றன. முதலில், திருப்பணி கமிட்டியினர் சம்பந்தப்பட்ட துறைகளின் அதிகாரிகளைச் சந்தித்து, மலைப்பாதையை ஓரளவாவது சீர்ச் செய்ய வேண்டும்.இந்தப் பணியை உபயதாரர்கள் மூலமாகச் செய்வதற்குத் திருப்பணிக்கமிட்டியினர் தயாரா கவே இருக்கிறார்கள். பிறகு, கோயிலில் திருப்பணிகளைச் செய்ய வேண்டும். மும்முக சிவலிங்கத்தைப் புதிதாகச் செய்து பிரதிஷ்டை செய்ய வேண்டும். கோயிலைச் சுற்றி சுற்றுச்சுவர் எழுப்ப வேண்டும் என்று ஏராளமான திருப் பணிகள் காத்திருக்கின்றன. ஆனாலும், சற்றும் உற்சாகம் குறையாமல், இறையருளால் ஓரிரு வருடங்களில் கும்பாபிஷேகம் நடத்தி விடலாம் எனும் அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் செயல் பட்டு வருகிறார்கள், திருப்பணி கமிட்டியினர்.

அவர்களது அந்த நம்பிக்கை மெய்ப்பட, நாமும் ஒத்துழைப்போம். மூலிகைகள் நிறைந்த மலையின் மேல் உடற்பிணிகளுக்கு மருந்தாகவும்; மனதுக்கு உற்சாகம் தரும் விருந்தாகவும் அருள்புரியும் ஐயனின் திருக்கோயில் திருப்பணிகளுக்கு நாமும் நம்மால் இயன்ற பொருளுதவியைச் செய்வோம். அதன் பலனாக, ‘மேலை விதியும் வினையின் பயனும் ஆனானும், விரவார் புரம் மூன்று எரித்தானும், காலை எழுந்து தொழுவார்தம் கவலைகளைக் களைவா’னுமாகிய ஐயனின் பேரருள் நமக்கும் நம் சந்ததிக்கும் கிடைக்கப் பெற்று, சிறப்புடன் வாழலாம் என்பது உறுதி.

படங்கள்: ச.வெங்கடேசன்

Estd : 1989
2017 ஆம் ஆண்டு எமது சுற்றுலா கட்டணத்தில் எந்த வித உயர்வும் இல்லை; 100 நாட்களுக்கு முன் அட்வான்ஸ் ரூ. 3000/- செலுத்துபவருக்கு கட்டணத்தில் 5% கழிவு உண்டு
காலை காபி, 3 வேளை சைவ உணவு, தங்கும் வசதி தினசரி 1 லிட்டர் மினரல் வாட்டர் 3 TIER இரயில் சுற்றுலாக்கள்
09-03-2017 & 02-04-2017 & 10-04-2017 & 08-05-2017 & 22-05-2017 முதல்
பூரி–புவனேஷ்வர்– கோனார்க்–கல்கத்தா– கயா – புத்தகயா – காசி – திரிவேணி 10 நாட்கள் ரூ. 7990/-
❖ இத்துடன் ஹரித்துவார் - ரிஷிகேஷ் - அமிர்தசரஸ் – வாகாபார்டர் – டெல்லி – ஆக்ரா – மதுரா சேர்த்து 15 நாட்கள் ரூ. 12990/-
08-05-2017 & 08-06-2017 முதல் மதுரா–ஆக்ரா–டெல்லி–அமிர்தசரஸ்– ஹரித்துவார்– ரிஷிகேஷ்–பத்ரிநாத்-கேதார்நாத் 14 நாட்கள் ரூ. 11990/-
❖ மேற்கண்ட சுற்றுலாவுடன் கங்கோத்ரி, யமுனோத்ரி 18 நாட்கள் ரூ. 14990/-
09-03-2017 & 02-04-2017 & 08-05-2017 & 22-05-2017 முதல் மதுரா–ஆக்ரா– டெல்லி–குருஷேத்திரம்–சண்டிகார்– சிம்லா–குப்ரி–மணிக்கரன்–குளு-மணாலி-ரோத்தாங்பாஸ்–டெல்லி 12 நாட்கள் ரூ. 12490/-
இத்துடன் அமிர்தசரஸ்–வாகாபார்டர் – ஜம்மு – கட்ரா – வைஷ்ணவி தேவி உள்பட 16 நாட்கள் ரூ. 14990/-
09-03-2017 & 02-04-2017 & 08-05-2017 & 22-05-2017 முதல் பூரி–புவனேஷ்வர்– கோனார்க்–கல்கத்தா– டார்ஜிலிங் - கேங்டாக் – சங்குலேக்– பாபாமந்திர்–மந்தாகினி வாட்டர் பால்ஸ்12 நாட்கள் ரூ. 12490/-
06-03-2017 & 20-03-2017 & 10-04-2017 & 08-05-2017 முதல் மந்த்ராலயம்–பண்டரிபுரம்– சனிசிங்கனாப்பூர்–ஷிரடி உள்பட 5 நாட்கள் ரூ. 5490/-
❖ மேற்கண்ட சுற்றுலாவுடன் கல்கத்தா - கயா - காசி - டெல்லி உள்பட 13 நாட்கள் ரூ. 11500/-
08-05-2017 & 08-06-2017 முதல் கல்கத்தா – கயா – காசி - நேப்பாள் - முக்திநாத் – (ஹெலிகாப்டர் கட்டணம் தனி) 15 நாட்கள் ரூ. 14900/-
18-04-2017 & 08-05-2017 & 08-06-2017 முதல் நவஜோதிர்லிங்கம் - பஞ்சதுவாரகா 18 நாட்கள் ரூ. 15990/-

சன் டிராவல்ஸ்
Prop. K. சிதம்பரம், B.Sc., B.Ed.,
செல் : 98421 56668, 81109 83578
மதுரை : 5. மேல வெளி வீதி. இரயில் நிலையம் எதிரில். மதுரை - 1. Ph : 2341133, 4230408
சென்னை : 20. நடேசன் தெரு. தி.நகர். சென்னை-17. Ph : 24359194, 93645 59194
கும்பகோணம் : பிரசாத் போட்டோ ஸ்டுடியோ 13-B, கோதண்டபாணி தெரு. கும்பகோணம். Ph : 2433550, 98437 32391



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition
https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

அடுத்த இதழுடன்...

# சக்தி விகடன்

ஆன்மிகம் மணக்கும் ஆனந்த ஆலயம்



## ‘ஹேவிளம்பி’ வருட சக்தி பஞ்சாங்கம்

+

2 இணைப்புகள்

## உங்கள் எதிர்காலத்தைச் சொல்லும் பிறந்த நாள் பலன்கள்



https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw


world edition

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw



# துரோண புஷ்பம்!

விநாயக சதுர்த்தி அன்று தும்பைப் பூவால் விநாயகரை அர்ச்சித்தால், அச்சம் அகன்று சுகமான வாழ்வு உண்டாகும் என்பது ஐதீகம்.



வடமொழியில் தும்பைப்பூவை 'துரோண புஷ்பம்' என்று அழைப்பார்கள்.

சிவபெருமான் விருப்பத்தோடு தும்பை மலர்களைத் தன் உச்சந்தலையில் சூடி இருக்கிறார். இதனால் மேலான சிறப்பைக் கொண்டிருக்கிறது தும்பைப்பூ.

தொகுப்பு: ராஜா

தும்பைப்பூ அளவில் சிறியது. தூய வெண்ணிறமும் ஒற்றை இதழும் கொண்டது. இதனால் பூஜையில் விசேஷ இடத்தைப் பிடித்திருக்கிறது.

வீராவேசத்துடன் போர் புரிபவர்கள் தும்பைப் பூவைச் சூடினர். எனவே, இதை போர்ப்பூ என்றும் அழைப்பர். 'அதிரப் பொருவது, தும்பை' என்கிறது ஒரு பழம் பாடல்.

வெற்றியை மட்டுமே கொண்டிருக்கும் சிவபெருமானுக்கு உரியதாக தும்பைப்பூ கருதப்படுகிறது. இதனால் தும்பைப் பூவை வீரத்தின் அடையாளமாகக் கொண்டிருந்ததை அறியமுடிகிறது.



Printed by S.Madhavan, Published by N.Raviprakash on behalf of Ananda Vikatan Publishers Private Limited and Printed at Ananda Vikatan Printers Private Limited, No: 99, (NP), Sidco Industrial Estate, Ambattur, Chennai-600 098 and Published from No: 757, Anna Salai, Chennai-600 002. Editor: N.Raviprakash





https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw




https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

world edition

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw

Anantha
PRESSURE COOKER

# ஆனந்தா ப்ரஷர் குக்கர் நீங்கள் உபயோகிக்க 3 காரணங்கள்.

1 உங்கள் ஆரோக்கியம்
சுத்தமான வர்ஜின் அலுமினியத்தால் செய்யப்பட்டது

2 உங்கள் ஆரோக்கியம்
துருப்பிடிக்காத SS 304 ஆல் ஆன ஸ்ட்ராங் double screw handle

3 உங்கள் ஆரோக்கியம்
ஈயம் இல்லாத safety valve




IS : 2347
An ISO 9001 : 2008
Certified Company

https://t.me/joinchat/aaaaaedow77r83ryirm7tw